
புதிய
திரிபுரங்கள்
சு.சமுத்திரம்
கங்கை புத்தக நிலையம்

# புதிய திரிபுரங்கள்

சு. சமுத்திரம்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராயநகர், சென்னை-600 017

கங்கை முதற் பதிப்பு : செப்டம்பர் 1997

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 25-00

| | | |
|---|---|---|
| Title | . | PUDHIYA THIRIPURANGAL |
| Subject | : | Novel |
| Language | : | Tamil |
| Author | : | SU. SAMUTHIRAM |
| Edition | : | First Edition September, 1997 |
| Paper | : | 11.6 Kg. Mysore Cream Wove |
| Pages | : | 152+4=156 |
| Price | : | Rs. 25-00 |
| Published by | : | GANGAI PUTHAKA NILAYAM<br>13, Deenadayalu Street,<br>Thiyagarayanagar, Chennai-600 017 |

நேரு அச்சகம், 43, அம்மையப்பன் தெரு, சென்னை—600 014

# பதிப்புரை

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானின் நடராஜ தாண்டவத்தைப் பார்த்து சு. சமுத்திரத்திற்கு ஒரு பொறி தட்டிற்று போலும்.

கொடியவனும், அரக்கனுமான முயலகனைக் காலால் மிதித்து, கையிலே தீச்சட்டி ஏந்தி உக்கிரத்தோடு நடனமிடும் நடராஜப் பெருமானின் திருக்கோலம், சமுத்திரத்திற்கு ஒரு தீவிரவாதக் கதை உருவாகக் காரணமாகிறது.

கொடியவர்களாகவும் கொலை பாதகர்களாகவும் உள்ள ஒரு கட்டுமானக் காண்ட்ராக்ட் நிறுவனத்தின் முறைகேடான செயல்களை எதிர்த்துப் போராட ஒரு இளைஞன் உருவாகிறான். தொழிலாளர்களின் உழைப்பால் கொழுத்து வாழும் 'காண்ட்ராக்டர்'களின் கொடுமைகளைத் தட்டிக் கேட்கப் புறப்படும் அந்த இளைஞன், ஈஸ்வர சன்னதியில் சாமியாரால் ஆசிர்வதிக்கப்பட்டுக் காரியத்தில் இறங்குகிறான்.

பல்வேறு கருத்துக்களால் சிதைந்து கிடக்கும் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி, தொழிற் சங்கம் அமைத்து, உரிமைகளுக்காகப் போராட்டம்

நடத்த முனையும்போது, அவனுக்கும், அவன் காதலிக்கும் காண்ட்ராக்டர்களால் இழைக்கப் பட்ட கொடுமையைக் கண்டு ஈஸ்வர பூஜை செய்துகொண்டிருந்த சாமியாரே கொதித்தெழு கிறார்.

காவியுடையைக் களைந்துவிட்டு காக்கியுடை அணிந்து, புதிய திரிபுரங்களை அழித்து, ஆட் கொள்ளப் புறப்படுகிறார்.

இதில் இடம்பெறும் இன்னொரு நாவலான 'கேள்வித் தீ' எனும் குறுநாவலும் ஒரு குருதிப் புனல்தான்.

கல்விக்கூடத்தை நிர்வகிப்பவன் ஒருவனின் கயமைத்தனத்தையும், பகலுணவுக்கு வரும் உணவுப் பொருள்களை விற்றுவிட்டு ஆட்டம் போடும் அயோக்கியத்தனத்தையும், அதற்கு உடந்தையாக இருக்கும் அதிகாரியையும், இவர் களின் கூட்டுச் சதியை தட்டிக் கேட்கும் ஆசிரியர் களை வேலைநீக்கம் செய்யும் அராஜகத்தையும், எதிர்த்துப் போராடும் ஆசிரியர்களின் போராட் டங்களையும் ஆசிரியர் சமுத்திரம் அவர்கள் வேக மாகவும் கோபமாகவும் எழுதிக் காட்டுகிறார். படிக்கும் வாசகர்களையும் கொதிக்க வைக் கிறார். 'புதிய திரிபுரங்களும்' 'கேள்வித் தீயும்' வாசகர்களின் மனதில் ஒரு கோபத் தீயை மூட்டி விடும் என்பது நிச்சயம்.

**கங்கை புத்தக நிலையத்தார்**

# புதிய திரிபுரங்கள்

## 1

பிரகாரம், கொடிக்கம்பம், பலிபீடம், கருவறை என்று ஆகம விதிப்படி அமைந்த ஆலயமல்ல. என்றாலும் ஆத்மார்ந்த விதிப்படி அமைக்கப்பட்டது போல ஜீவகளை சொட்டும் சிறு கோவில். தனிப்பெரும் ஜோதியான அருட்பெரும் ஜோதியே, அங்கே மூன்று பக்கம் மலையாகவும் முன்பக்கம் அருவியாகவும், ஒரு பக்கம் சமவெளிக்கு இட்டுச்செல்லும் மலைச்சரிவுப் பாதையாகவும், மரம் செடி கொடிகளாகவும், மண்மேல் முகிழ்த்த தாவர சங்கமமாகவும், விண்மேல் முளைத்த வெள்ளிகளாகவும், ஒன்றில் பலதாய், பலதில் ஒன்றாய், தோன்றுவது அறியாத தோற்றங்காட்டி நிற்பது போல, நடப்பதுபோல, நிலையின்றி தாவுதல் போல, ஆட்சி செலுத்துவதாய் தோன்றும். இயல்பாக ஏற்பட்ட அந்த மலைக்குகையில் உள்ள லிங்கம், எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. மாடு, 'ம்மா' என்று கூப்பிடும்போது எப்படி வாயைத் திறந்து வைத்திருக்குமோ அப்படி இருந்தது அந்தக் குகை. மத்தியில் லிங்கம். குகைவாய் முனையில், கல்லால் செதுக்கப்பட்ட நடராஜர் சிலை லிங்கத்திற்குப் பின்னால், குகையின் பின்புறச் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருக்கும் திரிசூலம்; குன்றின் முனைப்பில் நந்தி. ஆவுடையாரை ஒட்டி ஒரு

சதுரக்கல். அந்தக் கல்லின் மேல் விபூதி சிதறிய சிறிய தட்டு. இவைதான் கோவிலாகவும், கோவிலைச் சார்ந்த சொத்துக்களாகவும் உருவமானவை.

நடுநிசி வேளை.

புல்லில் படர்ந்த பனி, லிங்கவடிவுகளாகத் தோற்றம் காட்டின. குகைக்குக் கிழக்குப் பக்கத்தில் துவார பாலகன் போலிருந்த 'தூங்குமூஞ்சி மரம்' ''நான் ஒன்றும் தூங்கும் மரமல்ல'' என்று சொல்வதுபோல், இரண்டு மூன்று கிளைகள், மூன்று மூன்று கம்புகளாகப் பிரிந்து, முடிந்து, திரிசூலம் போல் தோன்ற, அந்த மரத்தின் இலை தழைகளுக்கு ஊடே உற்றுப்பார்த்தால், ஆகாயம் பல்வேறு ஸ்படிக லிங்கங்களாகத் தெரியும். பிரபஞ்ச வெளியில், லிங்க வடிவுக்கு ஒத்துவராத பகுதிகளை மரத்தின் சின்னஞ்சிறு இலைதழைகள் மறைத்து, ஊனக் கண்ணுக்கு ஞானஒளி பாய்ச்சிக்கொண்டிருந்தன. குகைக் கோவிலுக்கு எதிர்ப்புறத்திலுள்ள குன்றிற்கு மேலே சஞ்சரித்த மேகம், விஸ்வரூப லிங்கமாகத் தோன்றியது. அரூபத்தில்தான், மனதிற்கேற்ற ரூபங்களைப் படைக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதுபோல, ரூப மற்றவை ரூபங்களாயின. மனமே பிரம்மமாகவும், பிரம்மமே மனமாகவும் ஐக்கியப்பட்ட சதாசிவ நிலை 'நீ சதா...சிவம்...இதனால்தான் நாங்களும் சும்மா இருக் கிறோம்' என்று உரைப்பதுபோல் காட்டு மிருகங்கள் கூட கண்ணயர்ந்தும், மரங்களில் துயில் கொண்ட பறவைகள்' இறக்கைகளைப் பறக்கும் நிலையில் வைத்துக்கொண்டும் இருந்தன. 'நீ ஆடுகின்ற அரசன். சுழற்சி வேகத்தின் உச்சகட்டமே—அசைவுகளின் பேரசைவே—தாண்டவம். பம்பரம் வேகமாகச் சுற்றும்போது, அது நிற்பதுபோல் தோன்றுவது மாதிரி, உன் இயக்க வேகத்தால் ஏற்படும் ஸ்தம்பன மாயையை, இந்த பறவைகளும் மிருகங்களும் 'சும்மா இருத்தல்' என்று தவறாகப் புரிந்திருக்கின்றன. ஆனால் நான் அப்படி இல்லை. என் வேலை உன்னைப்

போல், உன்னருளாலே சதா இயங்குவதே' என்று, குகைக்குத் தென் பக்கம் விழுந்துகொண்டிருந்த அருவி, தன் இரைச்சலால் பேசிக்கொண்டிருந்தது. நிலவொளியில் அந்த அருவி மலையில் உலர்த்திப் போட்டிருக்கும் வெள்ளாடைபோல் தெரிந்தது.

அருவி சொல்லாமல் சொல்வதை தான் செய்யாமல் இருந்ததற்கு பிராயச்சித்தம் செய்வதுபோல், குகைக்கு எதிர்த்தாற் போலிருந்த குன்றின் சரிவில் உள்ள குடிசைக் கதவு, சத்தத்தை எழுப்பிக்கொண்டு திறக்கிறது. கதவை இழுத்துத் திறந்ததால், அதில் ஏற்பட்ட அதிர்வுகள சப்த அலைகளாகி அருவியோசையின் அலைகளோடு, இரண்டறக் கலந்து பிரபஞ்ச அசைவிற்கு தாள லயமாய் லயிக்கின்றன.

குடிசைக்கு வெளியே வந்த, காவி வேட்டி கட்டிய சாமியார், கதவைச் சாத்துவதற்கு முன்னதாக, கண்ணுக்கு எதிரே உள்ள சுவரில் தொங்கிய தன் குரு நாதரின் காவி வேட்டியையும், மேலங்கியையும் விழியாடாது பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, கரங்குவித்து, தலையை லேசாகத் தாழ்த்தி பிறகு உயர்த்திவிட்டு, குகைக் கோவிலைப் பார்த்து மட மடவென்று நடந்தார். அப்படி நடக்கும்போது, இரண்டு கால் பெரு விரல்களுக்கு மேலே, அவற்றிற்கு அடுத்த விரல்களை மடக்கிப் போட்டுக்கொண்டே நடந்தார். குருநாதர் சொல்லிக் கொடுத்தது. பழைய காலத்து சாமியார்களைப்போல், காலில் கட்டைகளைப் போடாமல் விரல் மடித்து நடந்தாலும், இருந்தாலும் இச்சா சக்தி குறிப்பாக பாலுணர்வு போய்விடும் என்று அவர் சொன்ன உபதேசத்தின்படி நடந்து நடந்து பழகியவர்; இப்போது அந்தப் பழக்கமே, தன்னையறியாத ஒரு வழக்கமாக, தன் பாட்டுக்கு செய்துகொண்டிருப்பவர்.

சாமியார் கோவில் முன்னால் வந்து, இடுப்பில் செருகியிருந்த விபூதிப் பையை எடுத்து, திருநீரை இரண்டு தோளுக்குப் பக்கமாகவும், தலையிலும் போட்டுவிட்டு, 'சிவாய நம...' என்று தனக்குள்ளேயே கூவிக்கொண்டு பிறகு திருநீரை எடுத்து நெற்றிநிறைய பூசிக்கொண்டே, அருவியைப் பார்த்துப் போனார். ஆடைகளைக் களைந்து விட்டு, லங்கோட்டுடன் அருவியில் இறங்கி அப்படியே உட்கார்ந்தார். 'ஓ குருநாதா... ஓம் நமச்சிவாய நமக... ஓம்சிவாய நம...' என்று அவர் சொல்லச்சொல்ல, அப்படி அவர் சொல்வது தடைபடக் கூடாது என்பதுபோல், தலையில் விழுந்த அருவிநீர், அவர் வாய்க்குள் போகாமல் தோளிலும், மார்பிலுமாகச் சிதறியது.

குளித்து முடித்த சாமியார் கோவிலுக்கு முன்னால் வந்து சிறிது நேரம் நடராஜர் சிலையையே உற்றுப் பார்த்துவிட்டு, நந்தியையும் வணங்கிவிட்டு மீண்டும் விபூதியைப் பூசிக்கொண்டு, லிங்கத்திற்கு அருகே இருந்த சதுரக்கல்லில் பத்மாசனம் போட்டு உட்கார்ந்தார். இரண்டு கைகளையும் மார்புடன் சேர்த்து வளைத்து, ஒன்றின்மேல் ஒன்றாக இருந்த உள்ளங்கைகளை அடிவயிற்றில் வைத்தபடி லேசாகக் கண்ணை மூடினார். அவர் மேனியை வியாபித்த காவியாடை நிலவொளியில் கிட்டத்தட்ட மரப்பட்டைபோல் தோன்றியது. இன்னொரு விதத்தில் ஆசனம் போட்ட கால்களே ஆவுடையாராகவும், முதுகு லிங்கமாகவும் தெரிந்தது. சாமியாருக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். உள்நோக்கிப் பாய்ந்த வயிறு. வெளி நோக்கி நிமிர்ந்த தோள்கள். நுனி சிவந்த மூக்கு. இரும்புத் தூணுக்கு சிவப்பு வர்ணம் தீட்டியது போன்ற கழுத்து. குருநாதரின் ஆக்ஞையில் மேற்கொண்ட ஆசனப் பயிற்சிகள், அவர் தன் உடம்பை தானே உணரமுடியாத நிலையில், உடம்புக்கூடு வேறு, அதில் உறையும் ஆன்மா வேறு என்று அவரே மிக மெல்லியதாய் அறியும் நிலையில் வைத்திருந்தன.

கண்களை மூடிக்கொண்ட சாமியார் காதுகளிலும், அந்த காதுகள் வழியாக நெஞ்சுக்குள்ளும், எஸ் பி. பாலசுப்பிரமணியம் பாடிய சிவதோததிரப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன அந்தப் பாடல்களின் ஒவ்வொரு வரியும், அவரை மேலே மேலே உயர்த்திக் கொண்டிருந்தது. ஆன்மா உடம்பை விட்டு விலகி, அருகே உள்ள லிங்கத்தைச் சுற்றிச் சுற்றி சுழல்வது போன்ற ஆனந்தப் பரவசம். சவத்தை விட்டு சிவத்திடம் போனது போன்ற மெய்யானந்தம். தான் வேறு, ஈசன் வேறல்ல என்ற பரசிவ நிலை. சிவதோத்திரப் பாடல்கள் காதுகளில் கச்சிதமாக ஒலித்தன.

''பிரம்ம முராரிஸு ரார்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க வினாஸக லிங்கம்
ததப்ரண மாமி சதாசிவ லிங்கம்''

''அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்'' என்ற வடலூர் வள்ளலாரின் பாடலையும், அருணகிரி நாதரின் நாதவிந்துகலாதி நமோநமோ என்ற பாடலையும், வானொலியில் கேட்கும் போதெல்லாம், அப்போது சென்னையில் ஒரு அரசாங்க அலுவலகத்தில் கிளார்க்காக இருந்த ராமையா அப்படியே மெய் சிலிர்த்துப் போயிருக்கிறார். சாமியாராய் மாறிய பிறகு இந்த பாடல்களைக் கேட்கப் பல தடவை ஏங்கியுமிருக் கிறார். ஒரு தடவை கோவிலுக்கு வந்த ஒருவரிடம், தன் அபிலாஷையை சிறு குழந்தையைப்போல் தெரியப் படுத்தினார். எங்கேயாவது தன்னை கூட்டிக்கொண்டு போய் இந்தப் பாடல்களை தான் கேட்கும்படி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அந்த பக்தர், சிரித்துக்கொண்டே போனார். ஒரு வாரத்தில், ஒரு டேப் ரிக்கார்டையும், இரண்டு டேப்புக்களையும் கொண்டு வந்து சாமியாரிடம் பயபக்தியோடு கொடுத்

தார். ஏற்கெனவே டேப் ரிக்கார்டர் இயங்கும் விதத்தை சென்னையிலேயே தெரிந்து வைத்திருந்த சாமியார், அதைக் கொடுத்தவரை, இயக்கச்சொல்லி, நன்றாகத் தெரிந்துகொண்டார். கோவிலுக்குள் இருக்கும்போதும், குடிசைக்குள் முடங்கும்போதும், சதா இந்தப் பாடல்களைப் போட்டுக் கொண்டிருந்தார். இதனால், இதர நாமாவளிப் பாடல்களையும் ஸ்லோகங்களையும்கூட அவர் மரபுப்படி முணங்கவில்லை. அதற்காக வருத்தப் படவும் இல்லை. அல்லும் பகலும், இந்தப் பாடல்களைப் போட்டுப் போட்டுக் கேட்பதில், டேப்புக்கள் மட்டுமல்ல, டேப் ரிக்கார்டர்கூட தேய்ந்துவிட்டது. இன்றும் அவை ஒலிக்கும் நிலையிலேயே இருந்தாலும், சாமியாருக்கு அவை தேவைப்படவில்லை.

இப்போது அவர் காதுகளுக்குள்ளும் நெஞ்சுக்குள்ளும் இந்தப் பாடல்கள், நினைத்த போதெல்லாம் முன்பு கேட்டதைவிட, நன்றாகத் தெளிவாக ஒலிக்கின்றன. குறிப்பாக கோவிலுக்குள் வந்து பத்மாசனம் போட்ட உடனேயே யாரோ அருகில் இருந்து பாடுவதுபோல், அவர் காதுகளில் ஒலிக்கும். சாமியார்கூட, சில சமயம் நம்பாதவர்போல் சுற்றும் முற்றும் பார்ப்பார். டேப்பில் வாங்கிய பாடல்களை நெஞ்சம் வேண்டும் போதெல்லாம் எதிரொலிக்கத் துவங்கியது. அதுவும் அசலைவிட நகல் சிறப்பாக இருந்தது. யோசித்துப் பார்த்தால், எது அசல், எது நகல் என்பதில்கூட அவருக்கு சந்தேகம் வந்தது. இந்த 'அசல்—நகல்' ஆராய்ச்சியே, மனிதன், கடவுளை தன்னைப்போல் நகலெடுத்தானா அல்லது கடவுள் தன் நகலை மனித உருவில் படைத்தானா என்ற வேதாந்த தத்துவத்திற்குள் இறக்கியது. ''அழியாதது எதுவோ அதுவே அசல். ஆனால் ஒருவன் இறக்கிறான். அவனின் புகைப்படமே நிலைக்கிறது. இப்படி அசல் அழிவதும் நகல் நிலைப்பதுமாக இருந்தால், இந்த அசல் நகலுக்கு அப்பால் அழியாத ஒன்று இருக்க வேண்டும். அதுதான்

சிவமயம்... நிஜமான அசல். இந்த அசலின் நகல்தான் அத்தனையும். முற்றிலும் நகல்படுத்த முடியாதது எதுவோ அதுவே அசலான அசல் அதுவே சர்வாம்ச சிவம்'' என்ற தத்துவ முடிவுக்கு வந்தவர், அம்மாக்காரி சொல்லிக் கொடுக்காமலே வீட்டுக்கணக்கை சரியாகப் போட்டுவிட்டு, தாயை புன்னகைத்து நெருங்கும் குழந்தையைப்போல, அவர், மரித்துப்போன குருநாதரின் காவி வேட்டியையே உற்றுப் பார்த்திருக்கிறார். பிறகு, தன்னை அறியாமலே தாரை தாரையாக வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டவர், தானே சிந்தித்து எடுத்த ஒரு தத்துவ முடிவைக் கேட்க அவர் இல்லாமல் போய்விட்டாரே! என்று அழுதுமிருக்கிறார்.

சாமியாரின் மனதில் லிங்காஷ்ட பாடல்கள் முடிந்து, வள்ளலாரின் பாடலும் வந்து போய், அருணகிரிநாதரின் பாடல், டி.எம். சௌந்தரராஜனின் குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது.

> ''நாதவிந்துக லாதீ நமோர் நம
> வேத மந்ர சொரூபா நமோ நம
> ஞான பண்டித சாமீ நமோநம '

வேத சொரூபனான முருகனை, நெஞ்சில் உருவகப் படுத்தி, அவன் கைகாட்டி அபயம் கொடுப்பதுபோல் உருவகமாக்கி, கண்களில் இருந்து பக்தி மழை பொழியப் பொழிய, பரவசத்துள் பரச்சிததாய், தன் மெய் பொய்யாக, ஞானப்பண்டிதனின் மெய்யோடு கலந்தவராய், தன்னை மறப்பதே தன்னையறிதல் என்ற தத்துவ சூட்சுமத்தில், சாமியார் சுக்கிலமாய் மாறிக்கொண்டிருந்த போது, பாறை வெடித்ததுபோல், பயங்கரமான குரல் ஒன்று கேட்டது.

'ஏய்... ஈஸ்வரா... ஒன்கிட்ட எத்தன நாளாடா கேக்குறேன்? என் நோவக் குணப்படுத்துன்னுகூட கேட்கலே... என்னை அவஸ்தை இல்லாம சாகடின்னு

சொல்லுறேன். ஏண்டா கேட்கமாட்டேங்கே... ஒன் காதுல ஈயத்தைக் காய்ச்சி ஊத்தணும் உன் எதிருல... தூக்குப் போட்டுச் சாகப் போறேனா...இல்லியான்னு பாருடா... தேவடியாமவனே...''

சாமியார் திடுக்கிட்டுக் கண் விழித்தார். கோவிலுக்கு வெளியே, கத்தியதில் களைத்துப்போய் ஒரு தொழு நோயாளி நின்றுகொண்டிருந்தார். உடம்பெங்கும் வெந்துபோனது போன்ற சதைக் கட்டிகள். குறுகிக் கொண்டிருக்கும் அவயவங்கள். இந்த நோயாளியை, சாமியார் கடந்த ஆறுமாத காலமாகப் பார்க்கிறார். வாரத்தில் ஒரு தடவை, எப்போதாவது வருவார். அதுவும், தான் கோவிலுக்குள் இருந்தால், சற்று தொலைவில் பதுங்கி இருப்பவர்போல் இருந்துவிட்டு, தான் போகும்போது, தட்டுத்தடுமாறி பயபக்தியுடன் எழுந்து கோவிலுக்கு சற்று முன்னால் சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டுப் போகிறவர். அவருக்கு இன்றைக்கு என்ன வந்தது?

சாமியார், அந்த தொழு நோயாளியையே வெறித்துப் பார்த்தார். 'ஈஸ்வர நிந்தனை பாவம்...மகா பாவம்...' என்று சொல்லக்கூட நினைத்து, பிறகு மௌனமாக அவரைப் பார்த்தார். ஒருவேளை தன்னைத்தான் அவர் அப்படித் திட்டினாரோ என்று நினைத்தவர்போல், சற்று மோவாயை உயர்த்திப் பார்த்தார். இதற்குள், சுய நினைவுக்கு வந்தவர்போல் தோன்றி அந்த உருக்குலைந்த நோயாளி, கண்களால் கெஞ்சி, கைகளால் கும்பிட்டு, உடைந்த குரலில் ஒப்பாரி வைப்பதுபோல் பேசினார்.

''மன்னிச்சுடு சாமீ...நானும் நடையா நடக்கேன்... இவன் சீக்கிரமா கூட்டிக்கிட்டு போகமாட்டக்கான்... ஒங்க நிஷ்டையக் கலைச்சிட்டேன்...நான் பாவி...''

அந்த நோயாளி தன்னைத் திட்டவில்லை என்பதில் ஆறுதல் பட்டவர்போல் சாமியார், லேசாகப் புன்னகைத்தார். பிறகு, ஈஸ்வரனைத் திட்டினாலும பரவாயில்லை, தன்னைத் திட்டலாகாது என்ற எண்ணம் ஏற்பட்டதற்காக, அந்த எண்ணத்தைத் தோற்றுவித்த நெஞ்சை, கையால் குத்திக்கொண்டே ஆதங்கத்தோடு கேட்டார்.

''நீ என் நிஷ்டையைக் கலைக்கல... ஏன்னா நான் இன்னும் நிஷ்டை நிலைக்குப் போகிற அளவுக்கு ஈஸ்வர கிருபை கிடைக்காதவன்... ஆனாலும் ஈஸ்வரனை சொல்லக்கூடாத வார்த்தையால...''

சாமியார், நோயாளி சொன்ன வார்த்தையைச் சொல்ல முடியாமல் அவஸ்தைப் பட்டபோது, அந்த நோயாளி சகஜமாகப் பதிலளித்தார்.

''ஈஸ்வரன் அப்படிச் சொன்னா பாவமில்ல சாமீ... அவன் அனந்தன்... அப்பனும் அம்மாவும் இல்லாதவன்... இருந்தாலும்... இனிமேல் அப்படிச் சொல்லமாட்டேன் சாமீ...''

சாமியார் நிமிர்ந்து பார்த்தபோது அந்த நோயாளி வேகவேகமாய் நடந்து மறைந்துவிட்டார் கூனிக் குறுகிச் செல்லும் அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்த சாமியார் மீண்டும் கண்களை மூடிக்கொண்டு, அருணகிரி நாதரின் பாடலைக் கேட்கப் போனார். அந்தப் பாடலோ இப்போதும் ஒலித்தாலும், முன்போல தெளிவாக ஒலிக்கவில்லை. வார்த்தைக்கு வார்த்தை இடையே, அந்த தொழு நோயாளியும் வந்தார்—அதுவும் ஈஸ்வரனை நிந்திக்கும் பேச்சோடு. திடுக்கிட்ட சாமியார், கண் திறந்து மூச்சை நிறுத்தி நிறுத்தி விட்டார். 'அவன் கர்ம வினையை... அவன் அனுபவிக்கான்...ஈஸ்வரன் என்ன செய்வான்' என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டு,

மீண்டும் கண்களை மூடினார். முருக தோத்திரப் பாடலுக்குப் பதிலாக, ஒரு தடவை அவர் குருநாதர் உபதேசித்தது இப்போது பெரும் முழக்கத்தோடு ஒலித்தது.

''மகனே! கர்மவினை என்று இருக்கோ இல்லையோ எனக்குத் தெரியாது. கண் முன்னாலேயே திருடிய ஒருவன் அளவுக்கு மீறி அடிபடும்போதுகூட இரக்கப்படுவது மனித இயல்பு. அதுதான் ஈஸ்வரத்தன்மை. எப்போவோ ஒரு பிறவியில் ஒருவன் எதையோ செய்தான் என்பதற்காக அவன் இந்தப் பிறவியில் கர்மாவின் பலனை அனுபவிப் பான் என்று நினைத்து அப்படி அவனை அனுபவிக்க விடுவதும் அலட்சியப்படுத்துவதும் முறையல்ல. அது ஈஸ்வர திருவுள்ளமும் அல்ல...''

சாமியாரால், கோவிலுக்குள், ஒருமித்த உள்ளத்துடன் இருக்க முடியவில்லை 'ஈஸ்வரா...என்னைவிட இந்த தொழுநோயாளி எவ்வளவோ மேலானவன். உன்மேல் உரிமையுடன் கோபித்து, நிந்தாஸ்துதி செய்தான். மனிதர்கள், காலனிடமிருந்து தப்புவதற்காக உன்னை தஞ்சமடையும்போது, அவனோ உன்னிடம் 'காலனை ஏன் காட்டல...' என்று கேட்கிறான். அந்த நோயாளிக்கு கருணை காட்டக்கூடாதா... மருந்தாகவோ அல்லது மரணமாகவோ வரப்படாதா...'

அருவிநீர் கூடிய தடாகத்தில், ஒரு மரத்தின் கொம்பு ஒடிந்து, சலனச் சத்தம் கேட்டது.

சாமியார் எழுந்தார். பறவைகளும் ஒலியெழுப்பத் துவங்கிவிட்டன. குடிசைக்குப் போய், அருகேயுள்ள நந்தியாவட்டச் செடிகளிலிருந்து, பூப் பறித்து மாலை தொடுக்க வேண்டும். தூரத்துக் கிராமத்தில் இருந்து, ஒரு சிறுவன் பால் கொண்டு வந்துவிடுவான். அவன் வரவும், இவர் மாலை தொடுத்து முடிக்கவும் சரியாக இருக்கும். பூஜையைத் துவக்கும் நேரமும் வந்துவிடும்.

குடிசைப் பக்கமாகப் போன சாமியார், ஒரு மணி நேரத்திற்குப் பிறகு கையில் மாலையுடனும், சந்தனம் குவிந்த ஆலிலையுடனும் கோவிலுக்குள் வந்தார். அங்கே, கிராமத்துச் சிறுவன் பாலுடன் தயாராக இருந்தான். எளிமையான அபிஷேகம் முடிந்து லிங்கம் இன்னொரு கிழிந்த வேட்டியால் அலங்காரம் செய்யப்பட்டு, லிங்கத் திற்கு மேல் விபூதியும், விபூதிமேல் சந்தனமும், சந்தனத் திற்குமேல் குங்குமமும் வைக்கப்பட்டு, சாமியார் கற்பூரம் ஏற்றியபோது—

''ஈஸ்வரா...நீதாண்டா கேட்கணும்... நீதான் கேட் கணும் சின்ன வயசிலேயே புருஷன பறிகொடுத்தாலும், கற்பு தவறாம நடந்தேன். கையில கழுத்துல இருந்த நகை யெல்லாம் வித்து. அவரோட தம்பிங்கள படிக்க வச்சேன். இதனால, பிறந்த வீட்டு கோபத்துக்குக்கூட ஆளானேன். அதைப்பற்றிக் கவலப்படாம இருந்த என்னை...என் மச்சினன்மாரே ரெக்கை முளைச்ச தைரியத்துல அடிச்சி விரட்டிட்டாங்க... சொத்துமில்லாம... பத்துமில்லாமப் போயிட்டேன்...இந்த வயசிலே எங்கப்பா போவேன்... ஈஸ்வரா...எங்கே போவேன்?''

உணர்வுகளைப்போல், கிழிசல்களையே சேலையாய் அணிந்த ஒரு பெண், துக்கித்த கண்களுடன், நீர் மல்க நின்றுகொண்டிருந்தாள்.

சாமியார் கற்பூரத்தை ஏற்றாமல் அந்த நடுத்தர வயதுப் பெண்ணையே பார்த்தார் தானே அங்கே பெண்ணாகி நிற்பதுபோல் ஒரு பிரமை. தான் மட்டுமே பட்டதாக நினைத்த ஒரு கொடிய அனுபவம் தனக்கு மட்டுமே ஏகபோகமானதல்ல என்ற நினைப்பு, ஆறுதலை யும் ஆதங்கத்தையும் கொண்டுவர, அவர் மனதை நிலைப் படுத்திக் கொண்டு கற்பூரத்தை ஏற்றினார். பிறகு புற

நிகழ்ச்சிகளால் தன் மனம் பாதிக்கப்படுவதை உணர்ந்து, அதை வழிப்படுத்த நினைத்தவர்போல் ஏதோ ஒரு வைராக்கியத்துடன் கண்களை மூடிக்கொண்டு, வடமொழியின் சாஸ்திரங்களிலும், தமிழ்மொழியின் தோத்திரங்களிலும் எழுந்தருளி 'சாத்திரமும் தோத்திரமுமாய் ஆன ஈசனை' நெஞ்சிற்குக் கொண்டுவந்து, நெஞ்சற தியானித்தார். அரை மணி நேரத்திற்குப் பிறகு, அவர் கண்விழித்துப் பார்த்தபோது, அவர் கண்கள் தானாகவே அந்த புலம்பிய பெண் இருந்த இடத்தை நோக்கின. அந்த இடமோ அவள் உட்கார்ந்த சுவடில்லாமலேயே வெறுமையாக இருந்தது. சாமியார் தன் விருப்பத்திற்கு எதிராகவே எழுந்து, கோயிலுக்கு வெளியே வந்து, சற்று நடந்து அந்தப் பெண் இருக்கிறாளா என்பதுபோல் பார்த்தார். அவளைக் காணவில்லை. மீண்டும் கோவிலுக்குள் வந்து சதுரக் கல்லில் உட்கார்ந்தார். இப்போது அவரது சொந்த அனுபவமே அவரிடம் பேசியது.

# 2

எழுத்தறிவில்லாத ஒரு ஏழைக் குடும்பத்தில் தலைமகனாய்ப் பிறப்பதே பாவம். அந்தத் தலைமகன், அரைகுறையாகப் படித்துவிட்டு, அன்றாடம் அடுப்பை மட்டும் எரிய வைக்கும் மாதச் சம்பளத்தில் இருப்பது கொடிய பாவம். அவன் இந்த லட்சணத்தில் நேர்மையாய் இருந்தால் தொலைந்தான். முதல் பிள்ளை, அலுவலகத்தில் ஒவ்வொரு நாளும் தங்கம் தங்கமாக வெட்டியெடுத்து விற்பதாகவும், அவன் குடும்பம் செய்த 'நன்றியை' மறந்து தங்களை மறந்துவிட்டதாகவும் குடும்பத்தினர் நினைப்பார்கள். அப்படிப்பட்ட நினைப்பு அவர்களுக்கு வரவில்லையானாலும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள்

சொல்லிக் கொடுப்பார்கள். உத்தியோகத்திற்காகப் போடப்படும் வெள்ளைச் சட்டை, உறவுக்காரர்களுக்கு அவனிடம் 'கறுப்புப் பணம்' இருப்பதுபோல் காட்டும்.

இப்படிப்பட்ட ஏழ்மையும் அறியாமையும் இணைந்த ஒரு பின்னணியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, எப்படியோ கஷ்டப்பட்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறி சென்னையில், அரசாங்க அலுவலகத்தில் கிளார்க்காகச் சேர்ந்தார். அந்தச் சமயத்தில் தந்தை கண்ணை மூட, நண்டும் சிண்டுமாக இருந்த தம்பி தங்கைகளை கவனிக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார். நேர்மையை வழிபட்ட அவருக்கு அலுவலகத்தில் உபகாரம் இல்லையென்றாலும், உபத்திரவங்கள் நிறைய கிடைத்தன. இதனால், கால் நூற்றாண்டுக் காலத்தில் கிடைத்த இரண்டு உத்தியோக உயர்வுகளும், அவருக்கு, ஒரு எக்ஸ்டிரா இன்கிரிமெண்டைத்தான் கொடுத்ததே தவிர, கணிசமான சம்பள மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இருந்தாலும் ஊர் வாய்க்குப் பயந்தும், உண்மையான பாசத்தின் உந்துதலாலும், இரண்டு தங்கைகளையும் சக்திக்கு மீறி செலவழித்து நல்ல இடங்களில் சேர்ப்பித்தார். தம்பிகள் இருவரையும், சென்னைக்குக் கொண்டு வந்து படிக்க வைத்தார். ஒருவன் எஞ்ஜினியரிங் டிப்ளமா.

இன்னொருவன் அசல் எஞ்ஜினியர். (இப்போது, டிப்ளமாக்காரன், எஞ்ஜினியரைவிட சம்பளத்திலும், கிம்பளத்திலும், அதிக உயரத்தில் கொடியைக் கட்டியிருப்பது வேறு விஷயம்.) படித்த மாப்பிள்ளைக்கு மனைவியாகப் போகும் பெருமிதத்தில் ராமையா நீட்டிய கயிற்றுக்கு பிற பெண்கள் மரபுப்படி தாழ்த்து முன்னாலேயே தானாகவே கழுத்தைத் தாழ்த்திக் கொடுத்த அவர் மனைவி மைத்துனன்மார்களின் துணிகளைக்கூட, தானே ஒருத்தியாய் துவைத்துப் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்காக, முதலில் கொதித்

தாள். இரண்டாவதாக அழுதாள். மூன்றாவதாக முனங்கினாள். இறுதியில் இதுதான் வாழ்க்கை என்று புரிந்துகொண்டு அதை ஏற்றுக்கொண்டாள். ஒரு சின்ன வீட்டில் இருந்த கூட்ட நெரிசலிலும் அவளுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அந்தப் பையன் எஸ்.எஸ் எல்.சி. படித்தபோது, அவன் 'சித்தப்பாக்கள்' தங்களை முன்பு மதிக்காத உறவுக்காரர்களிடமே பெண் வாங்கி மதிப் படைந்தார்கள். அண்ணன், மகனைப் படிக்க வைக்க, தங்களிடம் பணம் கேட்டாலும் கேட்கலாம் என்பதைப் புரிந்துகொண்ட 'டிப்ளமா' தம்பி 'நம்ம...ராஜை காலேஜுக்கு... அனுப்பாண்டாம் அண்ணா... பாவம்... எங்கள படிக்க வைக்கவே ரொம்பக் கஷ்டப்பட்டிங்க... இன்னும் கஷ்டப்படுறதுல நியாயமில்ல... அதனால... அவனை... ஏதாவது வேலையில சேர்த்துடுங்க...' என்ற போது, ராமையா பொறுத்துக் கொண்டார். ஆனால் குற்றேவல்காரியாகப் பணியாற்றிய, அவர் மனைவி 'ஒங்க வீட்டுக்கு பிச்சைக்கு வரமாட்டோம்பா. ஒங்க கண் முன்னாலேயே என் மகனைப் படிக்க வச்சுக் காட்டுறேன் பாரு... மொதல்ல வீட்டைவிட்டு வெளியேறு' என்றாள்.

ராமையா எதுவும் பேசவில்லை. அண்ணன் தட்டிக் கேட்காத கொடுமையில், தம்பி வெளியேறினான். இன்னொரு தம்பியும் சௌகரியத்தை முன்னிட்டு அவனுடன் கூட்டணி அமைத்துக் கொண்டான். இதைவிடக் கொடுமை என்னவென்றால் 'ஒன்னையாடா இந்தப் பய இப்படிக் கேட்டான்' என்று கேட்கவேண்டிய ராமையாவின் அம்மாவே, தன் மூத்த மகனிடம் வந்து 'ஒன் பெண்டாட்டிய பேசவச்சு... என் மகனை விரட்டிட்டே. இப்போவாவது ஒன் மனசு குளிர்ந்துதா?' என்று கேட்டுவிட்டுப் போய்விட்டாள் இளைய மகன் ஒருவன் வீட்டுக்கு. பாவம்... சின்ன மருமகள் கைக் குழந்தைக்காரி...ஒத்தாசை செய்ய ஓடிவிட்டாள்.

ராமையாவுக்கு அம்மா சொன்னதுபோல் உள்ளம் குளிரவில்லை. அதற்கு அதிகமாகவே உறைந்தது மகனை கல்லூரியில் சேர்த்தார். அவன் பி.யூ.சி.யில் முதல் வகுப்பில் தேறினாலும் எஞ்ஜினியரிங் கல்லூரியை எட்ட முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. (அட்மிஷனுக்கு பத்தாயிரம் வேண்டுமே!) அந்தப் பையனும் அம்மா போட்ட சபதத்தை பொய்யாக்க விரும்பாதவன்போல் நண்பர்களுடன் போன ஒரு உல்லாசப் பயணத்தின்போது, விபத்தில் உயிரிழந்தான். அவன் அம்மா, 'இதையாவது என் இஷ்டப்படி நடத்த விடுங்க' என்று சொல்வதுபோல் மகன் இறந்த நான்கு நாட்களில் கணவர் எங்கேயோ போயிருந்தபோது, அவள் எண்ணெயை ஊற்றி தன்னையே கொளுத்திக்கொண்டாள். அவளைப்போல் உணர்வுகளும் சாம்பலாக, தனித்து விடப்பட்ட ராமையாவை தம்பிகள் மீண்டும் மொய்த்தார்கள். அண்ணனைத் தனியாய் தவிக்க விடலாமா...அவன் இன்சூரன்ஸ், ஜி.பி எஃப். கிராஜுவிட்டி பணத்தை வைத்துக்கொண்டு தனியாக செலவழித்து அவஸ்தைப்பட வைக்கலாமா...இதில் அவனுக்கு ஒத்தாசை பண்ணாண்டாமா...

ராமையா ஒத்தாசைக்கு இடம் கொடுக்கவில்லை.

ஒரு மாதம் விடுமுறை போட்டுவிட்டு எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, இந்தப் பக்கமாக வந்தார். இந்தக் கோவிலில் சைவப்பழம் போல் தோன்றிய சாமியாரிடம் அழுது தீர்த்தார். அந்தப் பெரியவர் 'ஈஸ்வரன் கிட்ட வந்துட்டே... இனிமேல் எல்லாவற்றையும் அவன் பார்த்துக்குவான்' என்று சொல்லி அவருக்கு விபூதி பூசினார். ராமையாவுக்கு வேலைக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. இப்போது அந்த வேலை எப்படி இருக்கோ... யார் பார்க்கிறார்களோ...

சாமியாருடனேயே தங்கிய ராமையா, அவருக்கு பூஜையின்போது உதவினார். கால்களைப் பிடித்து

விட்டார். அவர் சொல்லும் தத்துவங்களையெல்லாம் தன்னை மறந்து கேட்டுக்கொண்டார். பூஜையின்போது இதை எடு என்று சொல்வதற்கு முன்னாலேயே, பூஜைப் பொருட்களைக் குறிப்பறிந்து எடுத்துக் கொடுக்கும் ராமையாவை சாமியாருக்குப் பிடித்துப் போய்விட்டது. அதோடு சாமுத்திரிகா லட்சணப்படி, ஆன்மீகத்திற்காக அமைந்தவர் போலவும் சிஷ்யர் தோன்றினார். ஒரு நாள்— நல்லதோர் பௌர்ணமி தினத்தில், சாமியார் ராமையாவை இந்த அருவிநீர் விழும் தடாகத்தில் இடுப் பளவு தண்ணீரில் நிறுத்தினார். ஏதோ சில மந்திரங் களைச் சொல்லச் சொன்னார். பிறகு தான் உடுத்திய காவி வேட்டியை நீட்டி, அவரை அணியச் சொன்னார். அதன்பின் தன் கழுத்தில் கிடந்த ஒரு ருத்ராட்ச மாலை யைப் போட்டுவிட்டார். பின்னர் நெற்றிநிறைய அவருக்கு விபூதி பூசி, 'சிவா அர்ப்பணம்... சிவா அர்ப்பணம்' என்று சொன்னபோது உணர்ச்சிப் பேரியக்கத்தில் உந்தப்பட்ட ராமையா, நீரென்றும் பார்க்காமல், 'குருநாதா... என் அம்மையே... அப்பனே' என்று தழுதழுத்தக் குரலில் சொல்லிக்கொண்டே நீருக்குள் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, குருநாதனின் பாதங்களைப் பற்றிக்கொண்டார்.

அவரைத் தூக்கிப் பிடித்து நிறுத்திவிட்டு, சாமியார் 'மகனே... மந்திரம் தந்திரம் யந்திரம் என்று எதுவும் வேண்டாம். இப்போது நான் சொன்னவையெல்லாம், ஒன் மனதை வழிப்படுத்தும் பயிற்சிச் சொற்கள்தான்.

தேசக்கொடியை நாம் வணங்குவதால், தேசம், அந்த சின்னக் கொடிக்குள் அடங்கிவிட்டதாக எப்படி நினைக்க மாட்டோமோ, அப்படி ஈஸ்வரன் இந்த மந்திரத்துள் அடங்கிவிட்டதாக நினைக்கலாகாது. அவன் அனைத் தையும் கடந்தவன். அவனை உணர, 'மூட' பக்திக்கு இணையானது எதுவும் இல்லை. எந்தச் சித்தும் இல்லை.

யோகமும் இல்லை. எனக்கு வழி காட்டும் ஈஸ்வரன், உனக்கும் காட்டுவான். நான் காத்திருந்தது வீண்போக வில்லை'' என்று சொல்லிவிட்டு அவரை ஆலயத்துள் அழைத்துச் சென்றார்.

ராமையா சிட்சை பெற்ற ஆறு மாதத்திற்குள் பெரிய சாமியார் இறந்துவிட்டார். தூரத்து கிராம மக்கள், அவரை விமரிசையாக அடக்கம் செய்ததுடன், சின்னச் சாமியாரையும் மரியாதையுடன் பார்த்தார்கள். இவரும் குருநாதரின் ஒரு ஜோடி காவி ஆடையை குடிசைக் குள்ளேயே வைத்து பூஜித்து அவரது நினைவைப் போக்கிக் கொண்டே, ஈஸ்வர சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

ஆனால் இன்றைக்கு அந்தத் தொழுநோயாளியும், அதற்குப் பிறகு வந்த அந்த நடுத்தர வயது மாதும், அவர் உள்ளத்தை நிலைகுலைய வைத்துவிட்டனர். போதாக் குறைக்கு நான்கு மாதத்திற்கு முன்பு அந்த இடத்திற்கு 'பிக்னிக்குக்காக' வந்த ஒரு கூட்டம், இப்போது அடுக்கடுக் காக பல கூட்டங்களை அழைத்து வருகிறது. தண்ணீரில் குளிக்க 'தண்ணி'யோடு வருபவர்களும் உண்டு அத்துடன் அருகில் ஓடும் காட்டாற்றை மடக்கி, அணை கட்டுவதற் காக, அரசின் ஆயத்த வேலைகள் நடைபெற்று வரு கின்றன. எஞ்ஜினியர்கள், தொழிலாளர்கள் 'டெண்ட்' போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். காண்ட்ராக்டர் களிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்கள், மலைச்சரிவு களில் குடிசைகள் போட்டுக்கொண்டு முடங்கிக் கிடக் கிறார்கள். எல்லோரும் இந்த அருவியில் குளிக்க வந்து விடுவார்கள். இவர்களைப் பார்த்ததும், சொந்த அனு பவத்தால், மனித சமூகம் மீதே வெறுப்புற்ற சாமியார், ஜனத்திரளைப் பார்த்ததும் குடிசைக்குப் போய்விடுவார்.

சொந்த அனுபவத்தைத் தின்றுகொண்டோ அல்லது தின்னப்பட்டோ தவித்த சாமியார், அங்கொன்றும் இங்

கொன்றுமாய் வந்த மனிதர்கள், இப்போது அருவியை நோக்கிக் கூட்டமாய் போனபோது, கோவிலை விட்டுக் குடிசைக்குப் போனார். ஆனால் நெஞ்சில் பதிந்த அந்தத் தொழு நோயாளியும், நடுத்தர வயது மாதும் போக மறுத்தனர். எந்த ஸ்லோகத்தை நினைத்தாலும், இந்த மனித ஸ்லோகங்கள் அதை விழுங்கிக்கொண்டு நின்றன.

# 3

ஒரு வாரம் போன இடம் தெரியவில்லை.

சாமியார் கடுமையான யோகப் பயிற்சிகளால், மனித ஸ்லோகங்களில் இருந்துவிட்டு, மஹேஸ்வர ஸ்லோகத்திற்கு வந்துவிட்டார்.

இனிமேல் எது வந்தாலும், அது மனமென்ற மலையில் மோதி சுக்கு நூறாகும் என்று மூக்கின் நுனியைப் பார்த்துப் பார்த்து ஓரளவு பெருமிதப்பட்ட சாமியாருக்கு, இன்னொரு நிகழ்ச்சி, வேறொரு மனப் பூதத்தைக் கிளப்பியது.

மாலை வெயில், மங்கிய இருட்டாக மாறிக்கொண்டிருந்த வேளை. சாமியார் பூஜையை முடித்துவிட்டு, குடிசைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அருவியில் குளித்த கோலத்தோடு, ஒரு வாலிபனும், இளம் பெண்ணும், கோவிலுக்கு வெளியே சற்று தொலைவில் நின்று, லிங்கத்தையா, சாமியாரையா என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு, கரங்கூப்பி, உடல் வளைந்து நின்றனர். அந்தப் பெண்ணும் அவனும் நின்ற தோரணை, சர்வேஸ்வரன்—சர்வேஸ்வரிபோல், சாமியாருக்குத் தோன்றியது. உரமேறிய உடலில், பூவேறிய மேனி ஒட்ட

நின்ற அந்த ஜோடி, அவரைப் பார்த்து லேசாக விலகியது. சாமியார், அந்த வாலிபனை உற்று நோக்கினார். இறந்து போன மகனின் சாயல். ஏதோ ஒன்று அவர், நெஞ்சு திரண்டு, குரல்வளையைப் பிடித்தது கிழிந்த வேட்டியின் கம்பீரமான தார்ப்பாய்ச்சலோடு நின்றவனுக்கு, மானசிகமாக, பேண்ட்—சட்டை போட்டு, கையில் ஒரு கடிகாரமும் கட்டி, அழகு பார்த்தார். அவன்தான்... அவனேதான்...

லோகாயுதத்தில் தடுமாறி விழப்போய், எதையோ தாங்கிப் பிடித்தவர்போல், சாமியார், மூக்கின் நுனியை, கண்களால் நோக்கினார். பிறகு, புருவ மத்தியில், கண் நோக்கைப் பாய்ச்சினார். ஆனாலும், அவரால், தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனிடம் பேச வேண்டும்போல் இருந்தது.

'உன் பேரென்னப்பா?''

அந்தச் சாமியாரை அடிக்கடி பார்த்திருக்கும் அந்த வாலிபன், பேசியறியாத—பேச்சறியாத தன்னையும், சாமியாரையும் மாறி மாறிப் பார்த்தான். அவனாலும் ஏதோ பேச முடியவில்லை. அந்தப் பெண், அவன் விலாவில் இடித்து அவனை பதிலளிக்கச் சொல்வதுபோல் தோன்றியது. அவனும் சாமியாரை, சிரத்தையோடு பார்த்தபடி சொன்னான்.

''வேல்சாமிங்க...''

''என்ன வேலை பார்க்கிறப்பா?''

''இந்த அணைக்கட்டுல... ஒரு காண்டிராக்டர்கிட்ட கொத்துவேல பார்க்கேமுங்க.''

''சம்பளமெல்லாம் எப்படிங்க...''

இப்போது வேல்சாமி, சங்கோஜமில்லாமல் பதிலளித்தான்.

''காண்டிரக்டர் கொடுக்கிற சம்பளத்தையும், அவன் எங்கள மாதிரி ஆட்கள படுத்துற பாட்டையும் நினைச்சால், கோவிலுக்கு வரத் தோணாதுங்க... கோவிலுன்னு ஒண்ணு இருக்குமான்னு நினைக்கவும் தோணுங்க...''

வேறு யாராவது அப்படிப் பேசியிருந்தால், சாமியார் பதில் பேசாமல் போயிருப்பார். ஏதோ அவன் பேச்சு அவரைக் குத்தவில்லை. சந்தம் வார்த்தைகளிலும், சாந்தம் முகத்திலும் நடனமாட சிரித்தபடி ஏதோ பேசப் போனபோது, அவன், அவள் விலா இடி தாளாமல், மன்னிப்புக் கோரும் தோரணையில் பேசினான்.

''தப்பாப் பேசியிருந்தால், மன்னிச்சிடுங்க சாமி!''

சாமியார் அவனையே உற்றுப் பார்த்தார். 'தப்பாய் பேசியிருந்தால்' என்கிறானே தவிர, பேசியது தப்பென்று நினைக்கவில்லை. கெட்டிக்காரப் பையன்... என் மகனும் இப்படித்தான்.

சாமியார் சந்தம் வார்த்தைகளிலாட, சாந்தம் முகத்திலாட சிரித்தபடி பேசினார்.

''காய் வெளிப்படத் துவங்கியதும் பூவுதிர்வதுபோல், ஒருவனுக்கு ஞானம் முதிரும்போது, கோவில் உதிரும். நீ... எதையும் தப்பாவும் பேசல—புதிதாகவும் பேசல... இன்னும் சொல்லப்போனால், கோவில் தேவையில்லாத ஒரு காலம் வர வேண்டும். உலகமே கோவிலாகவும், நாமெல்லாம் முக்திகளாகவும் மாறும் காலம் வர வேண்டும். பூமியே ஆவுடையாராகவும், ஆகாய வெளியே லிங்கமாகவும் அனுமானிக்கப்படும் காலம் வர வேண்டும்!''

தன்பாட்டுக்குப் பேசிக்கொண்டே போன சாமியார், தான் பேசுவது அவனுக்குப் புரியாது என்பதைப் புரிந்து கொண்டவர்போல் சட்டென்று பேச்சை நிறுத்தினார்.

அந்தப் பெண், ஏதோ ஒன்றில் இருந்து விடுபட மனமில்லாமல் விடுபட்டவள் போலவும், அந்த வாலிபன், சாமியாரிடமிருந்து விடுதலை பெற்றவன் போலவும் தத்தம் தலைகளை, ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டார்கள.

''சரி... ரெண்டுபேரும் கோவிலுக்குள்ள வாங்க... விபூதி வாங்கிக்கலாமா?'' அவள் முன்னேறுவது போலவும் அவன் பின்னேறுவது போலவும் தோன்றியது. சாமியார், சிரித்தபடி அழைத்தார்.

''சும்மா வாப்பா... இது அணைக்கட்டுமல்ல... இந்த லிங்கநாதர் காண்டிராக்டரும் இல்ல... வெறுப்பை எல்லாம் வெளியே விட்டுவிட்டு வாங்கோ.''

லேசாகத் தயங்கியவனின் கையை, வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துக்கொண்டு, அந்தப் பெண் கோவிலுக்குள் வந்தாள். அதைப் பார்த்த சாமியாருக்கு வேடிக்கையாகவும் இருந்தது. இந்த நாட்டில், பக்தி பெண்களால்தான் காக்கப்படுகிறது... இவனும் கொஞ்ச நாளில்' 'என் சம்சாரத்துக்காக... கோவிலுக்குப் போனேனாக்கும், என்று பேசத் துவங்கலாம்.

வருவோர், போவோரை, தட்டில் இருந்து விபூதியை எடுத்துக்கொள்ளச் சொல்லும் சாமியார் அவர்கள் இருவருக்கும், கைநிறைய விபூதி எடுத்து, நெற்றி நிறையப் பூசினார். அப்படிப் பூசும்போது, 'சிவ சிவா' என்றும் சொல்லிக்கொண்டார்.

சாமியார் கொடுத்த சலுகையில் தைரியம் பெற்றவள் போல், அவள், அவரை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு, தன்னையறியாமலே, அவர் காலில் விழுந்தாள். மனிதன் மற்றவர் காலில் விழுந்து விழுந்தே காலால் நசுக்கப் பட்டான் அல்லது காலை வாரினான் என்பதை தெள்ளப் புரிந்தவன்போல் தயங்கியபடியே, கீழே குனிந்தவளைப்

பார்த்த வேல்சாமியும், அவள், தன் காலில் கிள்ளிய தாலோ, அல்லது சாமியாரின் அருட்பார்வை கொடுத்த செல்லக் கிள்ளலிலோ, தன்னையறியாமலே சாமியார் காலில் விழுந்தான்.

சாமியார், இருவரையும் தூக்கிப் பிடித்து நிமிர்த்திய போது, அந்தப் பெண்ணைப் பார்த்தார். அவள் கழுத்தில் எதுவும் இல்லை. சந்தேகத்துடனும், சங்கோஜத்துடனும் கேட்டார்.

''குழந்தை... ஒனக்கு... என்ன வேணும்பா?''

வேல்சாமி நாணிப்பட்டபடியே பதிலளித்தான்.

''நான் கட்டிக்கப்போற பொண்ணுங்க.''

''பேஷ் சொந்தமா?''

''சொந்தமல்ல பந்தம்தான் சாமி... எங்களுக்குத் தெரியாதா, சொந்தத்துக்குப் பந்தமோ பந்தத்துக்கு சொந்தமோ தேவையில்லிங்க. இன்னும் கேட்டால்... அவள் எந்த ஜாதின்னு எனக்கோ நான் எந்த ஜாதின்னு அவளுக்கோ தெரியாது. நான் சொல்றது சாமிக்கு விரசமாப் பட்டால் மன்னிச்சிடணும்.''

சாமியார், விரசமில்லாமல் சிரித்தபடியே பேசினார்.

''மனிதனுக்கு... ஜாதி கூடாது என்கிற ஜாதியைச் சேர்ந்தவன் நான்... நீ, சாமியார்னா, வைதிகமுன்னு தப்பா நினைக்கே. அப்படி நீ நினைக்கிறதுலயும் தப் பில்ல. பிராமணர்களும், சைவ வேளாளர்களும் கடை பிடிக்கிற அனுஷ்டானங்களையும், கோவில் வழிபாடு களையும் வைத்து நீ மதத்தை எடைபோடுற... ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்கோ... ஒரு மதவாதியை வைத்து மதத்தை எடை போடக்கூடாது. ஒரு மதத்தை வைத்து மகேஸ்வரனை எடை போடக்கூடாது. சர்வேஸ்வரனுக்கு ஜாதி கிடையாது. அவன் பிள்ளைகளுக்கு மட்டும் எப்படி ஜாதி வரும்.''

வேல்சாமி, அவரைத் திடுக்கிட்டுப் பார்த்தான். முழங் காலளவு வேட்டியுடன், வைரப்பட்ட எலும்புக்கூடு போல் தோன்றிய அந்த சாமியாரின் எளிமையின் பொருளைப் புரிந்துகொண்டவன் போல், உடலை குனிந்து, அவரை உற்று நோக்கினான். இதற்குள் அந்தப் பெண் சாமியாரின் அன்பினால் அன்னியோன்னியப் பட்டவள்போல், சரளமாகவும், சகஜமாகவும் பேசினாள்.

''மகான் தரிசனம் பாப விமோசனமுன்னும் பெரிய வங்க சொல்லுவாங்க சாமி. நீங்க... விபூதி கொடுத்த பிறகாவது இதுக்கு நல்ல புத்தி வருமுன்னு நினைக்கேன் சாமி.''

சாமியார் அவனை ஓரக்கண்ணால் நோட்டம் விட்ட படியே, அவளிடம் கேட்டார்.

''அவனைப் பார்த்தால் நல்லவன்மாதிரி தோணுது... அப்படி என்னம்மா அடாவடி பண்ணுறான்?''

''பின்ன என்ன சாமி... வந்த இடத்துல... நாம உண்டு... நம்ம பிழைப்பு உண்டுன்னு இருக்காமல் காண் டிராக்டருக்கிட்ட இருக்கிற வேலையாட்களை சேர்த்து யூனியன் வைக்கப்போறேன்னு சொல்லுது. நேத்துகூட இதுக்கும் ஒரு சூப்பர்வைசருக்கும் அடிதடி வராத குறை. இந்த காண்டிராக்டருங்க பொல்லாத பாவிங்க சாமி! சர்க்கார் எஞ்சினியருங்களே... இவங்ககிட்ட சலாம் போடுறாங்க. அவங்ககிட்ட 'இது' மோத முடியுமா? ஏற்கனவே இதமாதிரி குதிச்ச இரண்டு மூணுபேரை... லாரியால அடிச்சி, போற இடம் தெரியாம போக்கிட்டதா ஜாடைமாடையா பேசுறாங்க. இதுக்கு ஒண்ணு ஆச்சு துன்னா... என் நிலம என்னாகிறது சாமி? சரி என்ன விடுங்க. ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு இதப் பெத்துட்டு... கண்ணு தெரியாம இத்தோட ஆத்தா கிடக் கிறாள். அந்தம்மா நிலைமை என்னாகிறது. நீங்களாவது புத்தி சொல்லுங்க சாமி''

வாலைச் சிரிப்போடு, வார்த்தெடுத்த உடம்போடு அந்தப்பெண், இப்போது குலுங்கிக் குலுங்கி அழுதாள். சகலமும் துறந்த சாமியார், துடித்துப்போனவர் போல் 'என்னம்மா குழந்தே...' என்று சொல்லியபடியே, லிங்கத்தைப் பார்த்தார். வேல்சாமி, அவள அழுவதால் வெகுண்டவன்போல், சாமியாரைப் பாதியும் அவளை மீதியும் நோக்கியபடி உணர்ச்சிப் பிழம்பாய் பேசினான்.

''நீங்களும் உலக நடப்புல இருந்து விடுபட்டுத் தான் சாமியாராய் ஆகியிருப்பீங்க. ஒங்களுக்குத் தெரியாதது இல்ல சாமி... நான் சொல்றதைக் கேக்கணும். அப்புறம் நீங்க என்ன சொன்னாலும் நான் கட்டுப் படறேன்.''

அவன் தொடர்ந்தான்.

''நாமெல்லாம் சர்வேஸ்வரன் பிள்ளைங்க என்கிறது நிஜமுன்னால், இவ்வளவு போலித்தனங்கள் எதுக்காக இருக்கணும்? அதுவும் போலித்தனங்கள் பேசுறவன் களோ புண்ணியவான்கள் மாதிரி பேசுறது... வெந்த புண்ணுல வேல் பாய்ச்சுறது மாதிரி ஆயிடுது. ஈஸ்வரன் ஒருவன் இருந்தால், அவன் இந்த நிலைமைகளை அனுமதித்தால், அவன் தேவையே இல்லையோன்னுகூட எண்ணத் தோணுது சாமி.''

''இப்போ... என்னை மாதிரி ஏழையானவர்கள் நிலையை எடுத்துக்குங்க. இந்த அணைக் கட்டுமான வேல கோடிக்கணக்கான பணத்துல, பல காண்டிராக்டருங் கிட்ட பிரிச்சு கொடுத்திருக்கு நான் 'மேஸ்ஷன்' காண்டிராக்டருகிட்ட இருக்கேன். ஏழு வருஷமா தினக் கூலி... கேஷுவல்லேபர். டெய்லி எட்டுரூபாய் சம்பளம். லீவு கிடையாது மருத்துவ வசதி கிடையாது. பி. டபிள்யு. டி தொழிலாளிங்களுக்காவது குவார்ட்டஸ் இருக்கு. யூனியனும் இருக்கு. நாங்க இருக்கது சேரும்

சகதியும் நிறைஞ்ச குடிசை. கொசுத்தொல்ல தாங்க முடியல. ஒரு கம்பளி கிடையாது, கட்டிலு கிடையாது. எட்டுமணி நேர வேலைன்னு பேரு. பனிரெண்டு மணி நேர வேல. எங்களுக்கு வேட்டியே போர்வை. கொசுவே தோழன். நோய்ய உடன்பிறப்பு. பலர் காசநோய்ல கிடக்காங்க. பலர் செத்தே போயிட்டாங்க. எங்க பிள்ளைங்களும் படிக்க வேண்டாமா? பள்ளிக்கூடத்துல, கேசுவல் தொழிலாளி பிள்ளைங்களுடன் கேசுவலா கூட போக முடியாது. எங்களுக்கு எட்டு ரூபாய் கூலி. காணடிராக்டருக்கு எட்டு லட்சம் ரூபாய் லாபம். நாங்க லாபத்துல பங்கு கேட்கல... உழைப்புக்கு ஏத்த கூலி கூட கேட்கல. உயிரு உடம்புல இருக்கக்கூடிய அளவுக்கு வசதி கேட்டோம். இதுக்காக சிதறிக் கிடக்கிற கேசுவல் தொழிலாளிகளை யூனியன் சேர்க்க நினைச்சேன். இது தப்பா சாமி? இந்த நிலைமை இங்க மட்டுமில்ல சாமி... நாடு முழுதும் இருக்கு. மூணு வருஷத்துக்கு முன்னாடி மெட்ராஸ்ல ஒரு கம்பெனில மெக்கானிக்காய் இருந்தேன். சர்க்கார் வண்டி எந்த ரோட்லயாவது ரிப்பேர்ல நிற்கும். நான் போய் ரிப்பேர் பார்த்துட்டு வருவேன். எனக்கு ஏழு ரூபாய் கூலி—கம்பெனியில் போடுற நூறு ரூபாய்க்கு. பாத்திங்களா சாமி! இது ஈஸ்வரனுக்கு அடுக்குமா சாமி! அந்த பீடை வேண்டாமுன்னு இங்கே வந்தால்... இதுவும் பெரிய பீடையாய் இருக்கு. கம்பெனி 'மஸ்டர் ரோல்'ல என் பேரு இருக்கு. பதினஞ்சு ரூபாய் கொடுத்ததாயும், லீவு எடுத்ததாயும் எழுதுறாங்க. எங்களுக்கும் சட்டம் இருக்காதா? எங்கே இருக்குன்னு தான் தெரியல? லேபர் அதிகாரிங்ககிட்ட கேட்டால் சிரிக்காங்க. சும்மா சொல்லப்படாது... நல்லாவே சிரிக்காங்க.''

இப்போது அந்தப் பெண்ணே இடைமறித்தாள்.

''சொம்மா பேசாதய்யா...நீங்களே சொல்லுங்க சாமி! அவ்வளவு பெரிய மனுஷன் காண்டிராக்டரே, இந்த

துரைகிட்ட வந்து, 'நீ எது கேட்டாலும் தாரேன். கையை நீட்டு, வாயை மூடு'ன்னு சொல்லிட்டார். இது கேட்கமாட்டங்கு... முன்னேறணும்னு புத்தி இருந்தால், இது அதுக்கு சம்மதிச்சிருக்கணுமா இல்லியா... சொல்லுங்க சாமி?''

சாமியார் சொல்லும் முன்பே வேல்சாமி மேற்கொண்டு பேசினான்.

''பாத்தீங்களா சாமி, இந்தப் பெண்ணோட புத்தி போற இடத்தை?''

''ஒனக்கு ஒண்ணுன்னா பேர்ய்யா... இனிமேல் என்கிட்ட வரப்படாது... நீயாச்சு, ஒன்னோட யூனியனாச்சு ''

''பாத்திங்களா சாமி... இவளோட கடைசி ஆயுதத்தை? ஒரு லட்சியத்தைப் பிடிக்கவனுக்கு சொந்த லாப நஷ்டம் ஒரு பொருட்டுலன்னு தெரியமாட்டக்கு. திருநாவுக்கரசரை, பல்லவ மன்னன் கடலுல தூக்கிப் போடும்போது அவர் விட்டுக் கொடுத்தாரா! உயிரை வெல்லக்கட்டின்னு நினைச்சாரா? 'நாமார்க்கும் குடியல்லோ'முன்னு சொன்னாரா, இல்லையா? சொல்லுங்க சாமி! ஏன் சாமி அப்படிப் பாக்கீங்க? எங்கப்பா பஜனை பாடுனவர். நான்கூடப் பாடுனவன்... ஒங்க 'உலகத்துல' எனக்குக் கெஞ்சம் பரிச்சயம் உண்டு!''

அந்தப் பெண் இடைமறித்தாள்.

''இது உருப்படாத கேஸ் சாமி... இது கதையே எனக்கு வேண்டாம்—நான் வாரேன் சாமி.''

வேல்சாமி, போகப்போனவளின் கையைப் பற்றி, தன் பக்கமாக இழுத்தான். பிறகு, சாமியாரைப் பார்த்துவிட்டு, சிறிது வெட்கப்பட்டவன்போல் தலை குனிந்தான்.

சாமியார் ''பரவாயில்லப்பா...நானும் ஒரு காலத்துல குடும்பஸ்தன்தான்...'' என்று சிரித்துக்கொண்டே சொன்னபோது அந்தப் பெண் சிரிக்க முடியாமலும், அழ முடியாமலும், சிரித்தாள். அழுகை வந்துவிடும் என்று அஞ்சியவள்போல, அழுதால் சிரிப்பு வந்துவிடும் என்று நாணியவள்போல தவித்தாள். வேல்சாமி இப்போது நளினக் குரலில் முறையிட்டான்.

''இந்தா பாரு வள்ளி... நம்ம விவகாரம் இப்பவே தீரணும்...சாமி சொல்றத இரண்டுபேரும் கேட்கணும். சாமியே சொல்லட்டும். சாமி! நான் சொல்றதைச் சொல்லிட்டேன். நீங்க நாங்க வசிக்கிற இடத்தையும், நாங்க படுற பாட்டையும் நேர்ல பார்த்தால் தவிர...அந்த என்னைமாதிரி ஆட்களால சொல்லுல விவரிக்க முடியாதுன்னாலும் கால்வாசி விளக்கிட்டேன். இப்போ நீங்க என்ன சொன்னாலும் அதுக்குக் கட்டுப்படுறேன், ஒங்க முகத்துல இருக்கிற வைராக்கியத்தை பார்த்த பிறகு, நீங்க எது சொன்னாலும் அது நியாயமாய் இருக்கும். ஏன்னா, எங்கப்பாவுக்கும் இது இருந்தது. அவர் செத்துட்டார். அவர் கடைபிடிச்ச நியாயம், அது பக்திவகையோட சேர்ந்ததுன்னாலும், அது என்கிட்ட, பாட்டாளி நியாயமாய் மாறி வந்திருக்கு. சொல்லுங்க சாமி...நான் சிதறிக் கிடக்கிற ஆட்களை ஒண்ணு திரட்டி யூனியன் அமைக்கட்டுமா? இல்ல இதோ இருக்கிற லிங்கநாதர் பார்த்துக்கிடுவார்னு நினைச்சு சும்மா இருக்கட்டுமா? சொல்லுங்க சாமி! ஒங்ககிட்ட சாமியார்ங்கிற முறையில கேட்கல... என்னோட அப்பா ஸ்தானத்துல வச்சு கேக்கறேன். நான் யாரையும்விட என் அப்பாவை அதிகமாக மதிக்கிறவன்... சொல்லுங்க சாமி—நீங்க என்ன சொன்னாலும் கட்டுப் படறேன்.'

சாமியார் பரபரத்தார். 'மகனே மகனே' என்று கூவிய மனதை வாயரங்களில் ஆடவிடாமல் தடுத்தார்.

வள்ளியைப் பார்த்தார். அவள் நாணச் சிரிப்போடு அவரை நம்பிக்கையோடு பார்த்தாள். லிங்கத்தைப் பார்த்தார் அதன் விபூதிப்பட்டை, லிங்கநாதரின் வாய்போல மோனமாய் சிரித்தது. சுவாமி விவேகானந்தர் மாதிரி, மார்போடு சேர்த்து, கரங்களை மடித்து வைத்துக் கொண்டு சாமியார் அழுத்தமாகப் பேசினார்.

''நான் ஒரு வகையில சாமியார் என்றால் நீ இன்னொரு வகையில சாமியார்... என்னைவிட ஒசத்தியான சாமியார். சுயநலத்தில இருந்து முழுதும் விடுபட்டு, ஊருக்காக உழைக்கிறவன்தான் உசத்தியான சாமியார். ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் ஒரு வழி அமைச்சுக் கொடுக்கிறான். அந்த வழிக்கு நான் குறுக்கே நின்றால் அது ஆண்டவ விரோதம்! ஒன்னோட சேவையை மெச்சுறேன்... நீ வெற்றி பெற என் ஆசி! பேய்மனதின் ஆசைகளை அறுக்கிறவன் தனிப்பட்ட சாமியார். ஏழைகளின் ஆசைகளை நிறைவேற்றுகிறவன் சமூகச் சாமியார். சமூகம் தனிப்பட்ட மனிதனைவிட உயர்ந்தது. வெற்றிவேல்! வீரவேல்! குமரேசனும் ஒரு வகையில் சமரேசன் தான் அவன் ஒனக்கு அருள்பாலிப்பான்.''

வேல்சாமி சாமியார் காலில் விழுந்து வணங்கினான். நெடுமரம்போல் பிரமித்து நின்ற வள்ளியின் காலைக் கிள்ளினான். அவளும், சாமியார் காலைத் தொட்டாள்.

இருவரும் கோவிலை விட்டு, மலைச்சரிவு வழியாக கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள். வேல்சாமி, சிணுங்கியபடியே பின்தங்கி நடந்த வள்ளியை இடுப்போடு சேர்த்து அணைத்து, அவள் தலையில் செல்லமாகக் குட்டிக்கொண்டு போவதைப் பார்த்த சாமியார் மெல்லச் சிரித்துக் கொண்டார். பிறகு லிங்கத்தைத் திரும்பிப் பார்த்தார். அப்படியே உட்கார்ந்தார். அவர் மனதில எத்தனையோ எண்ணங்கள்... இறந்துபோன மகன்... இறக்காமல் இறந்துகொண்டு இருக்கும் இந்தத் தொழிலாளிகள். இங்கே கொட்டும் மழையிலும் கல்லுடைக்கும்

தொழிலாளிகளையும், குளிரில் ஆடிக்கொண்டே வேலை பார்க்கும் சித்தாள் பெண்களையும் பார்க்க வேண்டும் போலிருந்தது.

மெல்ல நடந்தார்.

ஒரு கிலோ மீட்டர் நடந்ததும், அணைக்கட்டுப் பகுதி, கண்ணில் பட்டது. அணைக்கட்டுக்கு மேலே இருந்த மலைப் பகுதியில் கற்சுவர்களிலான வீடுகளும், டெண்டு களும், கதவுகள் வழியாகத் தெரிந்த கட்டில் பீரோக்களை யும், டிரான்சிஸ்டர்களையும் பார்த்த சாமியார் கண்கள், மற்றொரு பக்கம் மலைச் சரிவில், தென்னங் கீற்றுக்களால் வேயப்பட்ட குடிசைகளைப் பார்த்தார். மிருகங்கள் தீண்டக் கூடிய—ஆற்று வெள்ளம் உயர்ந்தால் அடித்துப் போகக்கூடிய—அபாயப் பகுதி. அபயம் அளிக்க ஆளில்லா நிலைமை. வீடு என்ற பெயரில் பனை மட்டைகளே தூண் களாகவும், கோணியே வாசல் கதவுகளாகவும் கொண்ட கொசு 'வாச' ஸ்தலங்கள். அங்கே நோயில் விழுந்த மனிதர்கள்... குச்சிக் கால், குச்சிக்கை பெண்கள்... மழைத் தூறலில் அணைந்த அடுப்பைப் பற்ற வைக்க முடியாமல் தவிக்கும் பாமர ஜாதிகள். இவர்களுக்கு வேலை மட்டும் 'கேசுவல்' அல்ல... வாழ்க்கையே 'கேசுவல்' தான்.

'ஈஸ்வரா...ஈஸ்வரா...பிள்ளைகளைப் பார்த்தாயா... பார்த்தாயா' என்று தனக்குள்ளேயே மந்திரம்போல் ஜபித்தபடி சாமியார் திரும்பி நடந்தார்.

# 4

ஒரு மாதம் ஓடியிருக்கும்.

வேல்சாமியும், அவனுடன் பின்னிப் பிணைந்த பாட்டாளி வாழ்க்கை முறையும், சாமியார் மனதில் இருந்து மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது

எப்போவாவது அணைக்கட்டுப் பகுதியில், வாழ்க ஒழிக கோஷங்கள் கேட்கும். ஓரிரு தடவை போலீஸ் ஜீப்புகள் போவதையும் பார்த்திருக்கிறார். என்னதான் நடக்கிறது என்பதைப் போய்ப் பார்க்கலாம் என்று குறுகுறுத்த மனதை, மாயையில் உழல்வதாக நினைத்து, பத்மாசனம் போட்டு, புருவ மத்தியைப் பார்த்து அடக்கினார். சர்வேஸ்வரனிடம் 'லோக நன்மைக்காக, அந்தரங்க சுத்தியோடு' பிரார்த்தித்துக் கொண்டார். வேல் சாமியைப் பார்க்க வேண்டும்போல் ஒரு எண்ணம் ஏற்படும்போதெல்லாம், கூடவே மாண்டுபோன தன் மகனின் நினைவும், அவன் பிரிவாற்றாமையால் உயிர் துறந்த மனைவி, மனைவியால் சேவகம் செய்யப்பட்ட தம்பிகள்—தம்பிகளை மட்டுமே பெற்றதாக நினைத்த தன் தாய்—அத்தனைபேரும் அவர்கள் சம்பந்தப்பட்ட ஒட்டு மொத்தமான நிகழ்ச்சிகளும், நிகழ்ச்சிகள் சுமந்த உணர் வுகளும் வந்தன. மீண்டும், லோக மாயையில் உழல அவர் விரும்பவில்லை. ஈஸ்வரனிடம் அர்ப்பணித்த உள்ளத்தை ஜல்லடை போட அவர் விரும்பவில்லை. ஆகையால் வேல்சாமி, தன் கண்ணில் படக்கூடாது என்றுகூட, தன் விருப்பத்திற்கு விரோதமாகவே பிரார்த்தித்துக் கொண் டார்.

பிரார்த்தனை பலித்தது—சற்று அதிகமாகவே. வழக்கம்போல், அதிகாலையில் பூஜைக்குப் புறப்பட்ட சாமியார், நிலவொளியில், கோவிலுக்குச் சற்று அருகே கூட்டம் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டவராக, வேகமாக நடந்தார்.

அங்கே—

ஒரு பாறையில், வள்ளி கிடத்தப்பட்டிருந்தாள். அவள் கழுத்தில் சுருக்குக் கயிறு அவிழ்க்கப்படாமல் இறுக்கப் பட்டிருந்தது. நாக்கு, மகிஷாசுரவர்த்தினியின் நாக்கு போல், கோரமாக வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. கண்கள், விழிகள் விலகி உருட்டிய பாவத்துடன்,

எதையோ உருட்ட நினைக்கும் கோபத்துடன் தெறித்து விழப் போகிறவைபோல் வெறித்து நின்றன. சுருக்குக் கயிற்றின் இறுக்கத்தால், அவள் கழுத்து 'விடமுண்ட கண்டன்' போல் வீங்கியிருந்தது. அவளைப் பார்த்த சாமியாருக்கு, ஊத்துக்கோட்டைக்கு அருகே உள்ள ஈஸ்வரன் கோயிலில் மயங்கிய நிலையில் உமையாள் மடியில் தலைவைத்துக் கிடக்கும் ஈஸ்வரன் சிலைதான் நினைவுக்கு வந்தது.

சாமியாரைப் பார்த்ததும், சடலத்தைச் சுற்றி நின்ற தொழிலாளிகள் அவருக்கு மரியாதையாக வழி விட்டனர். வள்ளியை குனிந்து பார்த்த சாமியார், 'ஈஸ்வரா... ஈஸ்வரா...இது நியாயமா...நியாயமாடா...ஒன் முன்னால் என் கையால் கொடுத்த விபூதியே அவள் உடம்பை அஸ்தியாக்கிட்டே... சர்வேஸ்வரா, சர்வேஸ்வரா...' என்று தன்பாட்டுக்கு கூவிய சாமியார், சிறிது நிதானித்து, சிறிது தியானித்து 'வேல்சாமிய எங்கே...'' என்று பொதுப்படையாகக் கேட்டார். தொழிலாளர்களில் ஒருவர் பதிலளித்தார்:

''முந்தாநாள் அம்மாவுக்கு மருந்து வாங்குறதுக்காக... கீழே போனவன் ஒரேயடியாகக் கீழே போயிட்டான் சாமி! லாரில அடிபட்டு—அடிபட்ட இடத்துலயே போயிட்டான் சாமி...''

சாமியாரால் இப்போது பேச முடியவில்லை. அழுகையை அடக்கி ஆகாயத்தைப் பார்த்தபடி கேட்டார்:

''விபத்தா...இல்ல...''

''வெளியுலகுக்கு விபத்து...ஆனால் எங்களுக்குத்தான் தெரியும், காண்டிராக்டரோட வேல... அணைக்கட்டுல சுவர் எழுப்புற எங்களுக்காக பேசுனவனுக்கு, அவரு கட்டுன சமாதி! ஏழை சொல்லு எங்கே அம்பலம் ஏறும் சாமி? போன வாரம்தான் சங்கத்தைத் துவக்கினோம்.

அவனை தலைவனாய் தேர்ந்தெடுத்தோம்...இப்போ தலையில்லாத முண்டமாய் நிக்கோம்...மூடனாய் இருந்தவங்க, அவனால மனுஷனாகி, இப்போ முண்டமாய் நிக்கோம். இந்தப் பொண்ணு துக்கம் தாங்காமல் தூக்குப் போட்டுக்கிட்டாள். தன்னையே கொன்னுட்டாள்...''

இன்னொருவர் இடைமறித்தார்:

''தற்கொலைன்னு எப்படிப்பா சொல்ல முடியும்? அந்த மவராசனோட கையாளுங்களே அடிச்சுப் போட்டுட்டு இப்படி செய்திருக்கலாம் இல்லியா...''

''எதுக்கும் போலீஸ் வந்தால் தெரிஞ்சுட்டுப் போகுது. யாரும் கயிற்றைத் தொடாதீங்க...''

''இவன் ஒருத்தன்...போலீஸ் மட்டும் வந்து என்னத்த கிழிக்கும்! வேல்சாமி விபத்துல சாகலன்னு மனுக் கொடுத்தோம். என்ன ஆச்சு? இன்ஸ்பெக்டர் நம்மையே மிரட்டலியா? அந்தக் கதைதான் இந்தக் கதையும்...''

''நம்ம கதை அவலக்கதை தானப்பா...போன வாரம் ஒரு எஸ்டேட்டுக்குள்ள ஒருத்தி தூக்குப் போட்டுச் செத்துட்டதாப் பேச்சு... சப்-இன்ஸ்பெக்டர் எஸ்டேட் முதலாளி அனுப்புன கார்ல வந்து விசாரிச்சாரு...அவருக்கு ஓடுற காரு பெரிசாத் தெரியுமா? நின்னுட்ட ஒடம்பு பெரிசாத் தெரியுமா? இங்கேயும் தற்கொலைன்னு 'பஞ்சாயத்து' முடிவுபண்ணும்... இதை நாம மறுத்துச் சொன்னால், நமக்கும் லாரி கிடைக்கும்... சரி...ஏதோ தலை எழுத்தோ, காலெழுத்தோ...இனிமேல் ஆகவேண்டியதைப் பார்க்கலாம். போலீஸ் ரிப்போர்ட் பண்ண ஆள் போயாச்சா?''

சாமியார் கோவிலுக்குள் போகவில்லை. கையில் வைத்திருந்த மாலையை அந்தப் பிணத்திற்குப் போட்டார். அவள் காலருகே உட்கார்ந்து—

''வள்ளி... என்னை மன்னிச்சிடுமா. ஒன்னோட மரணத்திற்கும், ஒன்னவனோட மரணததுக்கும் நானும் காரணமாயிட்டேன்... நான் மட்டும் அவனை யூனியன் வேண்டாமுன்னு சொல்லியிருந்தால் அவன் கேட்டிருப் பான். இந்த நிலையும் வந்திருக்காது...எனக்கு அப்படிச் சொல்ல மனமில்ல... இப்பவும் மனமில்லே... தெய்வமாய் மாறிட்ட நீ... இதோ என் பிள்ளைகள் யூனியன் மூலம் தங்கள் போராட்டத்த வெற்றிகரமாய் நடத்த வழி காட்டம்மா...வரம் கொடு தாயே...''

சாமியார் எழுந்தார். அத்தனை தொழிலாளிகளும் அவரை வியப்போடு பார்த்தார்கள். எவரோ ஒருவர் 'வேல் சாமியையும் வள்ளியையும் ஒங்களுக்குத் தெரியுமா சாமி' என்று கேட்கப் போனார். சாமியார் ஆகாயத்தைப் பார்த்த தோரணையையும், தங்களை ஒவ்வொருவராக ஊடுருவிப் பார்த்த கண்களில்—அந்தக் கண்களையே எரிப்பதுபோல் தோன்றிய அக்கினிப் பிரவாகத்தையும் பார்த்துவிட் டு, சொல்ல வந்ததை விட்டுவிட்டு சொல்லப் போகிறவரையே பார்த்தார். சாமியார் ஏதாவது பேசுவாரா என்பதுபோல் எல்லோரும் பார்த்தார்கள்.

அவர் பேசவில்லை.

குனிந்த தலை நிமிராமல், குறுகிய தோள்கள் புடைக் காமல், தரையையும் தன்னையும் பார்த்தபடி குடிசைக்குள் போனார். வெளியே கிடந்த பாறைக் கல்லில் உட்கார்ந்து கொண்டார். அங்கிருந்து பார்த்த அவர் கண்களுக்கு, பாறை மேல் சரிந்துகிடந்த வள்ளி, பாறையைப் பிளந்த ஆலமர வேர்போல தோன்றியது. அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டார். வள்ளி என்று அழைக்கப்பட்ட, அந்தப் பிணத்தைப் பார்த்த அவர் கண்கள், குளமாகிக் கொண்டே வந்தன.

ஆறு மணி நேரத்திற்குப் பிறகு, போலீஸ்காரர்கள் வந்தார்கள். ஆண்களும் பெண்களுமாக நின்ற கூட்டத்தை அதட்டி அதட்டி எதையோ கேட்டார்கள் ஒரு போலீஸ்காரர், வள்ளியின் கழுத்தில் கிடந்த மாலையை லத்திக்கம்பால் தட்டியபடியே எதையோ கேட்டார். பிறகு சாமியார் இருந்த குடிசையைப் பார்த்தார்.

இரண்டு போலீஸ் அதிகாரிகள், சாமியாரிடம் வந்தார்கள். அவரோ, அவர்களைப் பார்த்த பிறகும் அசைவற்றவராய் அந்தப் பாராங்கல்லிலேயே உட்கார்ந்திருந்தார்.

பெரிய போலீஸ் அதிகாரி, அருகே இருந்த குட்டிக் கல்லில் உட்கார்ந்தபடி சாமியாரிடம் எதையோ கேட்கப் போனார். அதற்குள் சாமியாரே முந்திக்கொண்டு நடந்தவற்றை நடந்தவிதத்தில் கூறிமுடித்தார். எல்லாவற்றையும் கேட்டு முடித்த போலீஸ் அதிகாரி, பிறகு சாவகாசமாக ''சாமி...எனக்கு எப்போ புரமோஷன் வரும்னு சொல்லுங்கோ...'' என்றார். அவர் குரலின் தோரணை சாமியாரின் ஜோஸ்யம், அவரை வழக்கில் சாட்சியாக அழைக்காமல் இருப்பதற்கான லஞ்சம்போல் காட்டியது.

சாமியார் அவரைப் பார்க்காமலே பதிலளித்தார்.

''மொதல்ல வேல்சாமி...விபத்துலதான் செத்தானா? இந்தப் பொண்ணு தற்கொலையில்தான் செத்தாளா என்கிறதை நியாயமான முறையில விசாரணை நடத்துங்க ஈஸ்வரன் உங்களுக்கு தானா வராத புரமோஷனைக்கூட வாங்கிக் கொடுப்பான்.''

போலீஸ் அதிகாரி தனது சந்தேகத்தையே, சாதுரியமாக்கினார்.

''சாமி...நீங்க பெரியவங்க...ஒங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும் சொல்றேன். தப்பா நினைக்கப்படாது. இன்னொரு தடவை இப்படிச்

சொல்லாதீங்க...வேற அதிகாரிகிட்ட இப்படிச் சொன்னீங்கன்னா, ஒங்களை சாமியார் வேடத்தில் இருக்கிற நக்ஸலைட்டுன்னு சந்தேகப்படுவாங்க...''

சாமியார், ஏகத்தாளமாகச் சொன்னார்:

'அப்படிப் பார்த்தால், ஒரு கையில் உடுக்கையும் இன்னொரு கையில் திரிசூலமும் ஏந்தி, சுடலைப்பொடி பூசி, ஊழிநடனம் ஆடுற ஈஸ்வரனும் ஒரு நக்ஸலைட்டுத் தான்...ஒங்களுக்கு ஏதாவது சந்தேகம் வந்தால், நான் கோர்ட்டுக்கு வேணுமுன்னாலும் வாரேன். குறுக்கு விசாரணைக்கு உடன்படுறேன்...''

''கோர்ட்டு கோவில் இல்ல சாமி...''

''தெரியும்... செங்கோலுக்கு முன்னால் சங்கீதம் செல்லாதுன்னு தெரியும். அதே சமயம் தெய்வ நீதிக்கு முன் செங்கோல் நீதி செல்லாதுன்னும் தெரியும். சரி போயிட்டு வாரீங்களா...ஆறு மணி நேரமா அதோ பிணம் ஒங்களுக்காகக் காத்துக் கிடக்கு...பிணம் போல வாழ்ந்தவளை மனித ஜீவி மாதிரியாவது அடக்கம் பண்ணுங்க...''

போலீஸ் அதிகாரிகள், சாமியார்மீது சந்தேகப் பார்வையை வீசிக்கொண்டே எழுந்தார்கள்.

## 5

ஐந்தாறு நாட்கள் சாமியார் குடிசைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார். வேல்சாமியின் 'விபத்தும்', வள்ளியின் 'மரணமும்' தொழிலாளர்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியிருப்பதை அவர்கள் போடும் கோஷங்கள், தூரத்து இடிமுழக்கமாய் கேட்டது.

சாமியார் குற்றவுணர்வில் தவித்தார். வேல்சாமியை தடுத்திருக்கலாம்...அவனுக்கும் 'விபத்து' வந்திருக்காது,

வள்ளிக்கும் மரணம் வந்திருக்காது... நான் இரட்டைக் கொலை செய்துவிட்டேனோ... ஈஸ்வரா... ஈஸ்வரா... சர்வேஸ்வரா...

கிராமத்துப் பையன், வள்ளி இறந்த மறுநாளும் பால் கொண்டு வந்தான் சாமியார், அவனைப் பார்த்து "நான் ஈஸ்வரனுக்கு எதிராய் சத்தியாக்கிரகம் செய்யறேன். பூஜை செய்யறதாய் உத்தேசமில்லை. நீ இனிமேல் வரவேண்டாம்" என்று சொல்லிவிட்டார். பெரிய விஷயங்களை உள்வாங்க முடியாத அந்த சின்னப் பையன் சாமியாரை, இனிமேல் பார்க்க முடியாதோ என்ற ஆதங்கத்தோடு போய்விட்டான்.

சாமியாரால் குடிசைக்குள் முடங்கிக் கிடக்க முடிய வில்லை. குருநாதரின் காவியாடை அவரை உறுத்தியது. தூங்கும்போது, லிங்கத்திற்குப் பூஜை செய்வது போல கனவுகள வந்தன. கனவில் இருந்து வெளிப்படவும், ஈஸ்வரன் அனாதையாக நிற்பது போலவும், அவனை தானே கவனிக்க வேண்டும் என்பது போலவும் ஒரு பச்சாதாபம் ஏற்பட்டது.

ஒருநாள் நடுநிசியில், ஒரு மானின் கூப்பாட்டில், அவர் திடுக்கிட்டு இருந்தார். மானின் மரணக் குரல். அது சன்னஞ் சன்னமாக அடங்கி, சதை சிதைந்த வேகத்தில் அதுவும் அடங்கியது.

சாமியார் யோசித்துப் பார்த்தார்.

"இதோ இந்தக் காட்டில், ஒரு மானை, ஓநாய்களோ அல்லது சிறுத்தையோ கொன்று புசித்திருக்க வேண்டும். ஏதுமறியாத இந்த மானை, ஒரு துஷ்ட மிருகம் கொல்ல வேண்டும்! துஷ்ட மிருகத்திறகு கோர நகத்தையும், அதனிடையிலிருந்து தப்பிப்பதற்காக, மானுக்குப் பாய்ச்சலையும் கொடுத்தவன் யார்? தப்புவதற்கு பின் கதவைத் திறந்தும், தாக்குவதற்கு முன்கதவையும் திறந்துவிட்டவன்

யார்? ஈஸ்வரன். இது அவனுடைய நீதி. எல்லா உயிர்களும் ஈஸ்வர சொரூபங்கள். கொல்வதும் கொல்லப்படுவதும் வெறும் பாவனைகளே. மானைப் புசிக்கும் சிறுத்தையின் நாடி நரம்பெங்கும் அந்த மானின் சதையும் ரத்தமும் ஐக்கியமாகின்றன. இதோ இந்த சிறுத்தை ஒரு நரியை அடிக்கிறதென்றால், அந்தச் செயல் அந்த மான்கறி கொடுத்ததால் ஏற்பட்ட ஊக்கம்தானே. அப்படியானால் மானே நரியை அடிப்பதாக ஏன் பாவிக்கக் கூடாது? ஈஸ்வர சக்தியை எப்படி என்று விவரிக்க முடியுமே தவிர, ஏன் என்று சொல்லமுடியாது. பூமியைவிட கோடிக்கணக்கான மடங்கு பெரிய நட்சத்திரத்தையே ஒரு துகளாகக் காட்டும் அண்டங்களும், அண்ட அடுக்குகளும் கொண்ட பிரபஞ்ச சொரூபனான ஈஸ்வரனை...ஏதோ ஒரு கோளத்தில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்காக மறந்துவிடலாகாது ஈஸ்வரா என்னை மன்னிச்சிடு. மாயையில் இருந்து என்னை மீட்பாய். ஒன் அருள் இருந்தால் அந்தப் பையன் இன்று பால் கொண்டு வர வேண்டும். வராதே என்று தடுக்கப்பட்டவன் வலிய வர வேண்டும்.''

சாமியார் பூக்கொய்தார். மாலை தொடுத்தார். சொல்லி வைத்ததுபோல அந்தப் பையனும், பால் கொண்டு வந்தான் சாமியார் நெகிழ்ந்து போனார். ஈஸ்வர கிருபையை நினைத்து நெக்குருகினார். அன்று கோவிலில், வட்டியும் முதலுமாக மணிக்கணக்கில் பிரார்த்தித்தார்.

அவர், வெளிமனதில் வியாபித்திருந்த வேல்சாமியும், வள்ளியும், இதர முந்திய பிந்திய நிகழ்ச்சிகளும், நிகழ்ச்சிகளின் மனிதப் பாத்திரங்களும் அடி மனதுள் போய் விட்டன. பூஜை, நாள்தோறும் வழக்கம்போல் நடந்து கொண்டிருந்தது. அன்றாடப் பூஜையும், கடுமையான ஆசனப் பயிற்சிகளும், பிராணாயமும், சாமியார் மனக் கப்பலை நங்கூரம் பாய்ச்சின.

மேலும் ஒரு மாதம் சலனங்களிலிருந்து விடுபட்டுக் கழிந்தது.

ஆனால் அன்றோ—

பௌர்ணமி இரவு மணி எட்டு இருக்கும். எங்கும் காட்டமைதி. கோவிலுக்கு வந்து, பூஜையைத் துவக்கப் போனார் சாமியார் அப்போது தொலைவில் இருட்டுருவமாய் தோன்றிய ஒரு கிழிசல் உருவம், கோவிலுக்கு முன்னால், அறுபது வயது மூதாட்டியாகி தன் தலையிலும் அடித்துக் கொண்டது ஆடிய மேனி, வாடிய கண்கள் லிங்கத்தைப் பார்த்ததும், சொந்த தந்தையைப் பார்த்தது போல் அந்த மூதாட்டி, தலையில் பலங்கொண்டபடி அடித்துக்கொண்டு தூங்குமூஞ்சி மரத்தை ஆதரவாய்ப் பிடித்துக்கொண்டே அரற்றினாள்.

''ஏய்யா...ஈசா...இருந்தது ஒரே மகன். லாரியில் மாட்டி ஒரேயடியாப் போயிட்டான். ஒன்கிட்டதான் வந்தேன் இப்போ அவனையும் கூட்டிக்கிட்டுப் போயிட்டியே... நான் என்ன பண்ணுவேன்? எங்கே போவேன்? இந்தத் தள்ளாத கிழவி என்னடா பண்ணுவேன்? ஒன்னை நம்புனவளை இப்படியாடா பண்ணுறது—சண்டாளா?''

சாமியார், சாத்துவதற்காகத் தூக்கிய பூமாலையை மடியில போட்டுவிட்டு, அந்தக் கிழவியைப் பார்த்தார். அடிக்கடி இந்தப் பக்கம் வருகிறவள், பார்த்த ஞாபகம் இருக்கிறது. மகன் போனதால், இவளுக்கு போகுமிடம் தெரியாமல் போய்விட்டதோ? 'ஈஸ்வரா...ஈஸ்வரா...இது தப்புடா?'

பூஜை சமயத்தில் யாரிடமும் பேசாத சாமியார் இப்போது அந்த முதியவளிடம் பேச்சைத் துவக்கினார்:

''ஒனக்கு இவன்தான் ஒரே பையனா?''

''ஆமாங்க சாமி. திக்குல்லாத அனாதையாயிட்டேன். எங்கே போறது, என்ன செய்யறதுன்னே தெரியலே...''

''சர்க்கார்ல வேலை பார்த்தானா?''

''இவன் சர்க்கார் ஆளுல்ல சாமி... காண்டிராக்டர் கிட்ட வேலை பார்த்தவன்.''

''காண்டிராக்டர் நஷ்ட ஈடு கொடுக்கமாட்டாரா?''

''நல்லா கொடுத்தான். ஒன் பையன் அந்திமச் செலவுக்குக் காசு கொடுன்னு கேக்கான்.''

சாமியார், அந்த மூதாட்டியையே பார்த்தபோது அவள் அவரையே ஈஸ்வரனாக நினைத்து ஒப்பித்தாள்.

''என் மகன் சிதறிக்கிடந்த ஏழை பாழைகளை ஒன்று சேர்க்கதுக்கு சங்கம் அமைச்சான். இதைப் பொறுக்காத காண்டிராக்டரு அவன்மேல லாரியை ஏத்தி கொன்னுட்டான்... எனக்கு மருந்து வாங்கப்போன மகன், மாயமாய் போயிட்டான். அவன் போன ஏக்கத்துல, அவனையே நம்பியிருந்த ஒருத்தியும் தூக்குப்போட்டு இங்கேதான் செத்தாள். ஒங்களுக்குக்கூடத் தெரிஞ்சிருக்கும். அவளைக் கூடச் சாகடிச்சிருப்பாங்களோன்னு ஒரு சந்தேகம். ஏழை மேல சந்தேகம் வந்தால் எது வேணுமுன்னாலும் நடக்கும். ஏழை சந்தேகப்பட்டு என்ன சாமி நடக்கும்? வயிறுன்னு ஒண்ணு இருக்கு... நானும் என் சந்தேகத்தை வெளில காட்டிக்காமல் எனக்கு ஒரு வழி பண்ணுப் பான்னு கேட்டேன்.

''இன்னொரு பையன் இருந்தால் கூட்டிக்கிட்டு வா வேலை கொடுக்கேன். இல்லன்னா 'நீ கல்ல உடை'ன்னு சொன்னான். இன்னைக்குக் கல்லுடைச்சேன். ஆனா கோடு போட்ட இடத்துல உடைக்காமல் குறுக்கா உடைச்சேன். காண்டிராக்டர் வந்து 'கல்லக் கெடுத் திட்டியேடி பாவி. திரும்பிப் பாராமல் ஓடலன்னா

கழுத்தப் பிடிச்சுத் தள்ளுவேன்'னு சொல்லிட்டான் சாமி. அவன் கை நகம் பட்டு... இந்தா பாரு சாமி கழுத்துல கீறல்.''

சாமியார், அருவியோசை அடங்கும்படி அதிரொலி யுடன் கேட்டார்:

''அம்மா... நீ வேல்சாமியோட தாயா?''

அந்த மூதாட்டி ஆச்சரியத்தோடு அவரைப் பார்த் தாள். பிறகு ''ஒங்களுக்கு அவனைத் தெரியுமா சாமி! என் தங்க' மகனை... என் செல்ல மகனைத் தெரியுமா சாமி? அவனைப் பெற்ற பாவி நான்தான். எனக்காக இருக்காட்டாலும் அவனையே நம்புன பொண்ணுக்காக வாவது ஈஸ்வரன் அவனை விட்டு வச்சிருக்கலாம். இப்போ முடியக்கூடாத எல்லாம் முடிஞ்சிட்டு... முடிய வேண்டிய நான்தான் முடியாம நிக்கேன். இதோ! இந்தக் கழுத்துல காண்டிராக்டர் நகம் பட்ட கீறலை மட்டும் என் செல்ல மகன் பார்த்திருந்தால் எப்படித் துடிச் சிருப்பான் தெரியுமா? இனிமேல் சொல்லி என்ன செய்ய?''

அந்த மூதாட்டி அழுவதற்குத் திராணியற்றவளாய், விக்கித்து நின்றாள். பிறகு 'இதோ இந்தப் பையில இருக்கிற அவனோட வேட்டியையும், சட்டையையுந் தான் எடுத்து எடுத்துப் பார்த்துக்கறேன்' என்று முனகி னாள்.

சாமியார் ஒளிப்பிழம்பானார்.

''ஈஸ்வரா... ஈஸ்வரா... இந்தத் தாய் சொல்றது ஓனக்குக் கேட்டுதா? கேட்டுதா? நீ விஷத்தக் கண்டத்துல தேச்கி வச்சிருக்கே. இவளுக்கும் அதே இடத்துல நகக் கீறல் நீ தாங்குவது மாதிரி இவளால் முடியுமா? பாருடா மானுட விஷத்தை ''

சாமியார் சத்தம் போட்டுக் கூவிவிட்டு, தன்னை உருக வைக்கும் வள்ளலார் பாடிய,

'கழுமரக் கட்டைபோல நிற்பார் களைய...இக்
கயவர் வாய் மதம் முழுதுமே
மண்கொண்டு போகவோர் மருந்தருள்க'

என்ற பாடலை, தன்னை மறந்து கூவினார். பாடுவது தெரியாமல் பாடினார். பல தடவை திரும்பத் திரும்பப் பாடினார். கைகளை யாசகம் கேட்பவர்போல் திருவோடு போல் வைத்துக்கொண்டு பாவத்தோடு பாடினார். பயத்தோடும், நயத்தோடும் பாடினார். பாடப் பாட அந்தக் குளிரிலும் அவருக்கு உடலெங்கும் வியர்வை பெருக்கெடுத்தது. கண்களும் வியர்த்தன. பிறகு குரலை, சன்னஞ்சன்னமாக அடக்கி, அப்படியே தியானத்தில் அமர்ந்தார். ஒரு மணி நேரமாகியும் அவர் கண் விழிக்காததைப் பார்த்துவிட்டு அந்த முதியவள் தயங்கியபடியே நடந்து எங்கேயோ மறைந்தாள்.

நீண்ட நேரத்திற்குப் பிறகு, கண்விழித்த சாமியார் யதார்த்த நிலைக்கு வந்தார். அந்த முதியவளைக் காணாதது அவருக்கு ஆறுதலாகவும் இருந்தது. தன்னையே அதட்டிக்கொண்டார். ஒரு துறவி எல்லாவற்றையும் ஒரே சீராகப் பார்க்க வேண்டும்; இன்பமும் துன்பமும் அவனைத் தாக்கக்கூடாது. அவஸ்தை கொடுப்பவனையும் அதை வாங்குபவனையும் சர்வேஸ்வரன் பார்த்துக்கொள்வான். எனக்கேன் வம்பு? என் கடன் ஈஸ்வரப் பணியே. உறவுக்காரர்களே நன்றி கெட்டவர்கள் ஆனார்கள். பெற்ற தாயே மாற்றாந் தாயானாள். ரத்தத் தொடர்புள்ள உறவே, ரத்தத்தைக் கொதிக்க வைத்தபோது, யாரோ ஒருவருக்காக சிந்தனையை வீணடித்தல் தவறு. நன்றிகெட்ட உலகமிது. ஒரு மனிதனிடம் எத்தனை அணுக்கள் இருக்கின்றனவோ அத்தனை மனிதர்களாக அவன் நடமாடுகிறான். இனிமேல் ஈஸ்வர சிந்தனையன்றி, எதுவுமே எனக்குத் தோன்றலாகாது. ஈஸ்வரா... தோடுடைய செவியனே...

அருளாளா... அருள்வாய். பாம்புபோல் பின்னியிருக்கும், கிடா, பிங்கல நாடிகளை எழுச்சி பெறச் செய்து, சுழி முனை நாடியில் ஆன்ம ஒளி பாய்ந்து குண்டலியுடன் கூட்டி அருள்வாய்... உலக பந்தத்தை அறுத்தெறி! எரிதழலே!

சாமியார் குடிசைக்குப் போக மறந்து அங்கேயே தூங்கிவிட்டார். கண்விழித்தபோது சிந்தனைச் சுமை சிறிது இறங்கியதுபோலிருந்தது. தொழு நோயாளியையும், நடுத்தர வயதுப் பெண்ணையும், முதியவளையும், வேல்சாமியையும் வள்ளியையும் மனதிலிருந்து வலுக்கட்டாயமாக விலக்கிவிட்டு, அருவியில் குளித்து முடித்துவிட்டு சதுரக்கல்லில் பத்மாசனம் போட்டு உட்கார்ந்தார்.

காலைப் பொழுது கலகலப்பாகிக்கொண்டிருந்தது... 'சாமி... என்னை தெரியாதுங்களா!' என்ற சத்தம் கேட்டு சாமியார், கோவிலுக்கு வெளியே பார்த்தார்.

பேண்ட்— அதுவும் பெல்பாட்டம் பேண்டுடன், டிசைன்கள் போட்ட பாலிஸ்டர் சிலாக்கோடு, ஒரு நாற்பது வயதுக்காரர் சிரித்துக்கொண்டு நின்றார். அவரை அடையாளம் காண முடியாதவர்போல் சாமியார் புருவத்தை உயர்த்தியபோது, அவர் மடமடவென்று ஒப்பித்தார்.

''நான்தான் சாமி... சாரங்கன். ஆறு மாதத்துக்கு முன்னால இங்கே வந்து இரண்டு மாசம் முடங்கிக் கிடந்தேனே... ஞாபகம் இருக்கா? இப்போ ஓடிப்போன என் ஒய்ஃப்— அதுதான் சம்சாரம் திரும்பி வந்துட்டாள்.'

பல் தெரியச் சிரித்த அந்த ஆசாமியையே சாமியார் மேனி சிலிர்க்கப் பார்த்தார். அவர் சொன்னதுபோல் ஆறு மாதத்திற்கு முன்பு தாடியும் மீசையுமாய் அழுக்

கேறிய வேட்டியுடன் இதே இந்தக் கோவிலில் வந்து இரண்டு மாதம்வரை எழுந்தருளி, தேவாரம், திருவாசகம், திருவருட்பா போன்ற பாடல்களை மாறி மாறிப் பாடி, ஓடிப்போன மனைவியைத் தந்தருளும்படி ஈஸ்வரனிடம் முறையிட்டவர் இவர். ஒருநாள் யாரோ வந்து இவரை அழைத்துக்கொண்டு போனார். அப்போது போனவர் இப்போது வந்திருக்கிறார். மனைவியைத் திருப்பிக் கொடுத்த ஈஸ்வரனைத் திரும்பிப் பார்க்க வந்திருக்கிறார். நாளானாலும் பரவாயில்லை, நன்றி சொல்ல வந்திருக்காரே... சாமியார், அன்பு ததும்பக் கேட்டார்.

''கோவிலுக்கு வந்தியா? தேங்காய் ஊதுபத்திய எங்கே?''

நான் கோவிலுக்குன்னு வரல சாமி. இங்க அணை கட்டப்போறாங்க பாருங்க. ஒரு காண்டிராக்ட் விஷயமா நேற்றே வந்தேன். இப்போல்லாம் நேரமே கிடைக்க மாட்டேங்கு சாமி. இன்னொரு நாளைக்கு சௌகரியமாய் வாரேன். வரட்டுமா சாமி. குளிக்கணுமுன்னு வந்தேன். அதுக்குள்ள இன்னொரு காரியம் ஞாபகம் வந்துட்டு... வாரேன் சாமி ''

சாமியார் ஆச்சரியத்தில் இருந்து விடுபடுமுன்னாலேயே, அவர் போய்விட்டார். முன்பு விபூதி கொடுத்தால் ''நீங்களே பூசுங்க சாமி'' என்று கேட்பவன் இன்று அவரை பூசக்கூடச் சொல்ல வேண்டாம், தட்டில் இருக்கும் விபூதியை எடுத்துப் பூசியிருக்கலாமே. சிச்சீ. தப்பு. நேரமில்லாத மனிதன். விபூதி பூசுகிற நேரத்தில், டெண்டரைத் திறந்துவிட்டால்...

சாமியார் யோசித்தார்.

இவன் ஈஸ்வரனிடமே நன்றியில்லாமல் நடந்து கொள்கிறானே... ஒரு தடவை ஓடியவள், இன்னொரு தடவையும் ஓடமாட்டாளா என்ன? ஈஸ்வரா... நான்

ஓடணுமுன்னு சொல்லல. இரண்டுபேரும் நல்லா இருக்கட்டும். எப்படியோ அவள்பேர்ல சொத்தை எழுதி வச்சுட்டு, ஆப்பசைத்த குரங்குமாதிரி இருந்தவன் சந்தோஷமாய் இருக்கிறதுல சந்தோஷந்தான் ஆனாலும் ஈஸ்வரன்கிட்ட இப்படியா நன்றியில்லாமல்

சாமியார் தன்னுள்ளே சிந்தனையை மீண்டும் அலசிப் பார்த்தார்.

''இந்த ஈஸ்வரனுக்கு, இவன் நன்றியில்லாதவன் என்பது தெரியாதா என்ன? தெரிந்துதானே இவனை இரண்டு மாதம் கொண்டு வந்து போட்டிருப்பான். தெரிந்துதானே மனைவியை மீட்டுக் கொடுத்திருப்பான்... இவன், தன்னைப் பார்க்க வராமல் அணைக்கட்டு வேலைக்காக வந்தவனை, இங்கே இப்போது கொண்டு வந்து விட்டவனும் ஈஸ்வரன்தானே. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்று திருவாசகம் சொல்கிறது. அப்படியானால், இவன் அருளில்லாமல் அவன் இங்கே வந்திருக்க முடியுமா? நன்றி என்பது ஈஸ்வரனுக்கு அடுத்த படியான பெரிய வார்த்தை... நன்றி வந்தாலும் சரி, அதற்கு எதிர்மாறானது வந்தாலும் சரி. அவற்றை, சிவா அர்ப்பணமாக்கிவிட்டு, பலனை எதிர்பார்க்காமல் செயல் படுபவனே யோகி. அவனே ஈஸ்வர அருளுக்கு, தன்னை அருகதையாக்கிக் கொள்கிறவன். ஈஸ்வர அருள், போற்று பவனுக்கும், தூற்றுபவனுக்கும் ஒரே மாதிரி கிடைக்கக் கூடியது. அந்த அருளுக்கு, நாம் நம்மை தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டாமா என்பதுதான் உயிர்ப்பான தத்துவம். பாவம்! அந்த முதியவள் எப்படி இருக்காளோ? சொந்தத்தையே வீடாகக் கொள்ளாமல், சமூகத்தையே வீடாகக் கொண்டவனின் தாய். ஈஸ்வரன் நிச்சயம் 'வீடு' கொடுப்பான். இந்த காண்டிராக்டர்கள் மண்ணையும், கல்லையும் வைத்துக் கட்டுகிறார்களா, அல்லது மனித உடல்களை அடுக்கி, குருதியால் பூசுகிறார்களா?

சாமியார், ஏதோ ஒரு பெரிய சுமை இறங்கிவிட்டது போல் தலையை ஆட்டிக்கொண்டிருந்தபோது, இரவில் வந்த முதியவள், ஒரு கையில் தூக்குப் பையுடன் வந்து கோவிலுக்கு முன்னால் நின்று கரங்குவித்தாள். அவள் கும்பிட்டு முடிவது வரைக்கும் பொறுக்க முடியாமல் சாமியார் குறுகிட்டுக் கேட்டார். தனிப்பட்ட மனிதர் களிடம் சிக்கிக் கிடக்கும் எளியோரைப் பார்த்த நினைவு அப்போது ஒட்டுமொத்தமாக வந்து நின்றது.

''என்னம்மா செய்யப்போற?''

''திக்கில்லாதவங்க என்ன செய்வாங்களோ அதைத் தான் செய்யப்போறேன்.''

''அதாவது...''

''ஊரூஊராய், தெருத் தெருவாய், வீடு வீடாய், பிச்சை எடுக்கப்போறேன். ஒன் கையால போணி பண்ணு சாமி...நீ கொடுக்கற பத்து பைசா, எனக்குப் பத்தாயிரம் மாதிரி...ஈஸ்வரா! நீ, பிச்சையில உதவுறியோ இல்லியோ, ஒரு தடவையாவது இந்தக் கிழவி ஒன்னைப் பார்க்கதுக்கு வரம் கொடுப்பா. சாமி, ஒரு பத்து பைசா...''

சாமியார், யதார்த்தத்தின் சூடு தாங்கமாட்டாத வராய், அந்த முதியவளைப் பார்த்தார். அவள் முகத்தில், இப்போது புத்திர சோகம் இல்லை. எப்படிப் பிழைப்பது, எப்படி தன்னைக் காத்துக் கொள்வது என்ற ஒரு கவலை. ஒரே கவலைதான் அவளை ஆட்டுவித்துக் கொண் டிருந்தது. மௌனமாக ஐம்பது பைசா நாணயத்தை, அவளிடம் நீட்டினார். அந்த முதியவள், ஆகாயத்தை வளைத்துக் கட்டியது போலிருந்த லிங்கத்தையே பார்த்து விட்டு, கீழே வைத்த கைப் பையை தூக்கிக்கொண்டு நடந்து கொண்டிருந்தாள். சாமியாருக்கு ஊனெல்லாம் உருகி, உள்ளொளியாகி, அது அந்தக் கிழவியின் பின்னால்

போவது போலிருந்தது. லோகமாதா, அதோ போய்க் கொண்டிருக்கிறாள். சப்த லோகங்களைப் பிரசவித்தவள் தனியாகப் போகிறாள்.

சாமியார் ஆவேசப்பட்டவராய் வெளியே வந்தார். கோவில் முனையில் ஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த நடராஜர் சிலையையே விழியாடாமல் பார்த்தார். நடனம் வேகமாக நடைபெறுவதைக் காட்டும் கலைந்த சடை. மார்பிலே பாம்பாரம், ஒரு கையில் உடுக்கை, இன்னொரு கையில் அக்கினிக் குண்டம் வலதுகால் தூக்கி நிற்கிறது. இடதுகால் கொடுமையின் அவதாரமான முயலவன்மீது அழுந்தியிருக்கிறது. அந்த 'நாதாந்த, போதாந்த, யோகாந்த, வேதாந்த' சிலையையே உற்றுப் பார்க்கிறார். கண்கொண்ட குருடர்க்கு வழிகாட்டும் அந்தச் சிலையின் பின்னால் வள்ளலார் வந்து,

> 'நடராஜர் தன்னடம் நன்னடமே
> நடம் புரிகின்றதும் என்னிடமே'

என்று பாடுகிறார்.

அந்தப் பாட்டு, அவர் காதில் ஒலித்துக் கொண்டிருக்கும் அந்தச் சமயத்தில், கண்களுக்கு நடராஜர் சிலை, சிறிது சிறிதாக மாறுவதுபோல் தெரிகிறது. சூரிய சந்திரர் ஆழிகளாக, பதினான்கு உலகங்களும் தேர்த்தட்டுக்களாக, எண் திசை மலைகள் தூண்களாக, இமயமலை கொடியாக, வேதங்கள் பரிகளாக, பிரம்மா சாரதியாக, மகாமேரு வில்லாக, மகாவிஷ்ணு அம்பாக, திரிபுரம் எரிக்கத் தெய்வத் தேரில் புறப்படும் விரிசடைக் கடவுளின் தோற்றம் தெரிகிறது. அது தெரியத் தெரிய செயற்பாடே பக்தி என்று ஏதோ ஒன்று சொல்கிறது. அண்ட சராசரங்கள் சுழல்வதும், எதுவுமே இருந்த இடத்தில் இல்லாமல் நகர்வதும் புரிகிறது. தீமையை எதிர்த்து செயல்படுவதே ஈஸ்வர சேவை என்று ஏதோ ஒன்று உணர்த்துகிறது.

ஏழை எளியவர்களை வாட்டி வதைக்கும் புதிய முயலவன்களை எதிர்த்து அடக்குவதே ஈஸ்வர நடனத்தின் தாத்பரியம் என்று உள்ளுக்குள் ஒன்று—பெரிதான ஒன்று கூவுகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிமுறைகளைவிட எளியவர்களும் வாழ்வாங்கு வாழ, வழி காட்டுவதே ஈஸ்வர வழி என்று ஏதோ ஒன்று அவரை வழிப்படுத்துகிறது.

சாமியார் பிரபஞ்ச இயக்கத்தின் ஆதார சக்தியைப் பிரதிபலிக்கும் அந்த நடராஜர் சிலையையே பார்ப்பதை இன்னும் விடவில்லை. பார்க்கப் பார்க்க புதிய பார்வை உண்டாகிறது. இந்த சமூக அமைப்பில் ஏழை எளியவர்களுக்கு இடமில்லை. சூப்பப்பட்ட பனம் பழமாய் அவர்கள் வீசி எறியப்படுகிறார்கள். கண் முன்னாலேயே, அதுவும் கோவில் முன்னாலேயே. திக்கின்றித் திணறும் எத்தனையோ எளியவர்களைப் பார்த்தாகிவிட்டது. இனனும் பார்த்துக்கொண்டே இருப்பது, ஈஸ்வர நிந்தைக்குச் சமமாகும். ஏதாவது என்னளவில் செய்ய வேண்டும். இந்த முதியவளைப்போல் எத்தனைபேர், கண்ணில் கண்டுபிடிக்க முடியாத குக்கிராமங்களில் இருக்கிறார்களோ...இவர்களுக்காகப் பெரிய அளவில் செய்யமுடியாமல் போனாலும், இங்கே காண்டிராக்டர்களிடமும், வெடிப் பாறைகளிடமும் மாட்டிக்கொண்டு, சிதறிக்கிடக்கும் ஏழை எளியவர்களை ஒன்று சேர்த்து, மானுடத்தின் மேன்மைக்காகப் பாடுபடலாம். பாடுபட வேண்டும். அக்கிரமக்காரர்களை, பாடுபடுத்த வேண்டும்.

அப்போதுதான், ஞான-முக்தி பெற்றவர்போல், சாமியார் தொலைவில் மறையப்போகும் முதியவளைப் பார்த்து ''அம்மா... தாயே... தயவு காட்டி இங்கே வாம்மா'' என்று உரக்கக் கூப்பிடுகிறார். அவள் நின்று, நிதானித்து திரும்பி வருகிறாள். அவள் வருவது நிச்சயப்

பட்டதும் சாமியார், நடராஜர் சிலையை கைகூப்பி தொழுதபடி நிற்கிறார். இதற்குள் முதியவளும் அவர் அருகில் வந்து நிற்கிறாள். சாமியார், அந்த எளிய வர்க்கத்தின் பிரதிநிதியையும் பாமரவர்க்க நாதனாய் நிற்கும் நடராஜர் சிலையையும் மாறி மாறிப் பார்க்கிறார். பிறகு திடீரென்று தன் காவி வேட்டியைக் களைந்து உள்ளே போய் சதுரக்கல்லில் போட்டுவிட்டு, வெளியே வந்து லங்கோட்டுடன் நிற்கிறார். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்பதுபோல பயந்து ஒடுங்கிய முதியவளைப் பார்த்து அமைதியாகக் கேட்கிறார்.

''பையில்...ஒன் மகனோட வேட்டி சட்டை இருக்குதுன்னு சொன்னல்லா?''

''எதுக்கு சாமி?''

''நான் இன்று முதல் ஒன் மகன். இந்த நடராஜன் என் அப்பன். நீதான் என் ஆதிபராசக்தி .. வேட்டி சட்டையை எடு...உம்...சீக்கிரம்...''

முதியவள் ஒன்றும் புரியாமல் மகனின் வேட்டியையும், சட்டையையும் எடுத்து நீட்டுகிறாள். முன்பு தன் குருநாதரிடம் காவியாடையை எப்படி பயபக்தியோடு வாங்கினாரோ, அப்படி அந்த ஆடையை பயபக்தியோடு வாங்கிக் கொண்டே நடராஜரையே பார்க்கிறார். அவரையே சாட்சியாக வைத்துக் கொண்டதுபோல், அசுர வேகத்தில் தப்பு, ஆடலரசன் வேகத்தில் அந்த ஆடைகளை அணிந்துகொள்கிறார். பிறகு ''உம்... நடம்மா...ஒன் மகனை காண்டிராக்டர்கிட்ட சொல்லி, வேலையில சேரு...ஒன் இறந்த மகன் நினைத்ததை இந்த மகன் செய்து முடிப்பான். உம், நடப்போமா தாயே...!''

முதியவள், ஏதோ ஒன்று புரிந்தவள்போல முன்னால் நடக்கிறாள். சாமியாருக்கு கோவிலை விட்டுப் புறப்படும் போதும், காவியாடையைக் காணும்போதும் மனசு கனக்கிறது. உடனே அந்த கனத்தை, ஆடலரசின் தூக்கி நிற்கும் வலதுகால் தூக்கிப் பிடித்துக்கொள்கிறது! கீழே விழுந்து கிடக்கும் முயலவன, விழாமல் நிற்கும் முயலவன்களை நினைவுபடுத்துகிறான்.

உரிமையும், கடமையும் ஒன்றான மானுடத் தேரில் ஏறி, புதிய திரிபுரஙகளை அழித்து, ஆட்கொள்ளப் புறப்பட்டவர்போல், ராமையா அந்த முதியவள் பின்னால் போய்க்கொண்டிருக்கிறார்.

# கேள்வித் தீ

## 1

கனைக்காதது எப்படி கழுதையாகாதோ, அப்படி அந்த வீட்டுக்குள் போய் நாற்காலியில் உட்கார்ந்தோ அல்லது உரசிக்கொண்டு நின்றோ, வெற்றிலை பாக்கு போட்டு வெளியே வந்து கனைத்துக்கொண்டே துப்பி விட்டுப் போகாதவர்கள், ஊர்ப் பிரமுகர்களாக மாட்டார்கள். அன்றைக்குக் கொஞ்சம் 'வெத்தடி... வில்லடி' செய்ய வேண்டியது இருந்ததால், பிரமுகர்களின் 'சென்ஸஸை' அந்த வீட்டுக்குள்ளேயே எடுத்துக் கொள்ளலாம். சொல்லக்கூடிய கூட்டந்தான் என்றாலும், சொல்ல முடியாத, 'சுற்றி வளைத்த' பேச்சுக்களிலேயே பிரமுகர்கள், சுற்றிச் சுற்றி நாக்காடினார்கள்.

அந்த வீடு ஒரு அரண்மனை மாதிரி. அந்தக் காலத்தில் இருந்தே 'காரை வீடு' என்று அழைக்கப்படுவது. நான்கு பக்கத்து மதில் சுவர்களுக்கு மத்தியில் நடுநாயகமாக இருந்த அந்த வீடு, சமதரையில் இருந்து மூன்றடி உயர சமதளத்திற்கு மேலே, கிட்டத்தட்ட தாஜ்மஹால் மாதிரியே தோன்றும். அந்த வீட்டுக்குள் போகிறவர்கள் முன்னேறலாம் என்று சொல்லாமல் சொல்வதுபோல், நான்கைந்து படிக்கட்டுகளில் ஏறித்தான் போகவேண்டும்.

காம்பவுண்ட் சுவருக்கு அருகே, பூவரசு மரக் கட்டையை பொன்னையா கோடரியால் விறகுகளாகக் கிறிக் கொண்டிருந்தார். முந்தாநாள் நடந்த அம்மன் 'குடையில்' சுடலை மாடசாமியாக, சல்லடங்குல்லாய் தரித்து, வெட்டரிவாளை வைத்துக்கொண்டு, முறுக்குத் தடியைப் பிடித்துக்கொண்டு, 'வேட்டைக்குப்' புறப்பட்ட போது, அதோ அந்த முகப்பறையில் கூடியிருக்கும் பிரமுகர்கள் அனைவரும் இவரை விழுந்து கும்பிட்டு விபூதி வாங்கினார்கள். இப்போதோ இவர் விழுந்து விழுந்து வெட்டுவதைப் பார்த்து, தத்தம் முகங்களை அலட்சியமாக வெட்டிக்கொள்வதுபோல் தோன்றியது.

இந்தச் சாமியாடிக்கும் ஊர்ப்பிரமுகர்கள் தன்னைக் கும்பிட்டதுதான் ஞாபகம் வருகிறதே தவிர, இதர ஏழை பாழைகள் கும்பிட்டது, நினைத்துப் பார்த்தால்கூட வராது போலிருக்கிறது. அன்று 'வந்த ஜனம் மெச்ச' ஆடியவர் இப்போது வயிறு மெச்சுவதற்காக கோடரியை வைத்துக்கொண்டு மேலும் கீழுமாக ஆடுகிறார்—கிட்டத்தட்ட கோவிலில் ஆடியது மாதிரியே. அன்றைக் காவது, வாழைப்பழம், புண்ணாக்கு முதலியவற்றை சாமியின் பெயரில் சாப்பிட முடிந்தது. இன்றைக்கு அதுவும் இல்லை. ''அண்ணாச்சி... இன்னைக்கி ஒரு முக்கியமான விஷயம் நடக்கப் போவுது. கொஞ்சம்... கொஞ்ச நேரந்தான் விறகு கீறணும்? வருவியளா...'' என்று வீட்டுக்காரி ராசம்மா சொன்னபோதே பொன்னையா புரிந்துகொண்டார். கூலி கிடையாது. போனஸ் வெட்டு. தொலைவில் ஒரு மூட்டைக் கோதுமை மாவை கொட்டிவிட்டு, அதைக் கையால் தளம் முழுக்கப் பரப்பிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து, ''கொஞ்சம் தண்ணி கொண்டு வான்னு எத்தன தடவழா சொல்றது? எருது நோவு காக்கைக்கு தெரியாததுமாதுரி, என் தாகம் ஒனக்குத் தெரியல பாரு'' என்று பொன்னையா சீறினார். அவளும் பதிலுக்குச் சீறியிருப்

பாள். 'காலங் காத்தாலயே தலமறவா போயிடுமுன்னு சொன்னேனே, கேட்டீரா...நல்லா படும். ஒம்மா புத்தி தான ஒமக்கும் இருக்கும்' என்று நெஞ்சுக்குள் இருந்ததை வாய்க்குக் கொண்டு வரத்தான் போனாள்... ஆனால் பிரமுகர்களைப் பார்த்ததும், சொல்ல வந்ததை விழுங்கிக் கொண்டாள். 'வீட்டுக்கு வரட்டும்...'

வீட்டுக்கு மூத்த 'பிள்ளையான' தங்கப்பாண்டி சுவரோடு ஒட்டிப் போட்டிருந்த தேக்குக் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, தொங்கப் போட்டிருந்த கால்களை ஆட்டிக்கொண்டு, கட்டில் காலின் உருண்டு திரண்ட மேல் பாதியை, வலது கையால் தேங்காயை திருவுவது மாதிரி திருவிக் கொண்டிருந்தார். நாற்பத்தெட்டு வயதிருக்கும். கழுத்தில் 'எட்டு பவுன்' தங்கச் செயின் தொங்கியது. புலி நகம் போட்ட செயின். மேஜை இல்லாமலே, ஒரு நோட்டுப் புத்தகத்தை வசதியாக வைத்து எழுதுவதற்கு, வயிறு பருத்தும் பெருத்தும் வசதியாக இருந்தது. அவருடன் கிராம முன்ஸீப் மாடக்கண்ணு நெருங்கி உட்கார்ந்திருந்தார். அவருக்கு அருகே, தங்கப்பாண்டிக்குப் பெண் கொடுத்த மாமனாரான எழுபது வயதுக் கிழவர் ஆறுமுகம், ஜரிகைவேஷ்டி கட்டி, கழுத்தில் 'மேரியல்' போட்டு, சாவும்போது வசதியுள்ளவர்களை சிங்காரிப்பார்களே, அப்படிப்பட்ட சிங்காரத்தில் இருந்தார். அவரையடுத்து, சில பண்ணையார்கள் குறுக்கும் நெடுக்குமாக உட்கார்ந்திருந்தார்கள். கட்டிலுக்கு எதிர்த்தாற்போல் போட்டிருந்த நாற்காலிகளில் முதல் நாற்காலியில் இளைய 'பிள்ளை' ராஜலிங்கம் பேண்ட் சிலாக்கோடு உட்கார்ந்திருந்தார். போனதடவை ஊருக்கு வந்திருக்கும்போது, வெள்ளவெளேரென்று தெரிந்த தலைப் பகுதி, இப்போது 'கரு கருப்பாய்' இருப்பதற்கான காரணம் புரியாமல் பல கிழவர்கள் மயங்கினார்கள். ஒரு சிலருக்கு தங்களுக்கு 'கண் கெட்டுப் போயிருக்குமோ' என்று சந்தேகம். இன்னும் ஒரு சிலருக்கு

கண்ணாடி' போட்டதால், தங்களின் 'வெள்ளெழுத்து' நோய் போய்விட்ட திருப்தி. ராஜலிங்கத்திற்கு அருகே, கர்ணம், மளிகைக் கடையில் கருப்பட்டியைச் சுற்றிக் கொடுக்க வைத்திருக்கும் அசிங்கமான தாள்கள் மாதிரி, ஒரு கட்டுக் குப்பைக் காகிதங்களை கசக்கிப் பிடித்து வைத்துக்கொண்டிருந்தார். அடிக்கடி, அதைப் பிரித்துப் பிரித்துப் படித்துக்கொண்டார். 'அடங்கல் பட்டாவாம்'. இங்கேயும் கர்ணம் முன்ஸீப்புக்கு எதிரேதான் இருந்தார். அவரையடுத்து, ராஜலிங்கத்தின் மாமனார் சுருட்டைப் பிடித்துக் கொண்டு ஒரு காலைத் தூக்கி நாற்காலிச் சட்டத்தில் போட்டுக் கொண்டிருந்தார். அவரையடுத்து, 'மற்றும் பலர்'.

தங்கப்பாண்டியின் மனைவி ராசம்மா, அங்குமிங்குமாகச் சுற்றிக் கொண்டிருந்தாள். ராஜலிங்கத்தின் மனைவி மேரி புஷ்பம், ஒரு பொய்க் கொண்டையில் இலை தழையோடு கூடிய ஏதோ ஒருவித பூ மொந்தையை வைத்துக்கொண்டு, நரசிம்ம அவதாரம் மாதிரி, வாசல் படியில் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றாள். இந்த ராஜலிங்கம் திருநெல்வேலியில் கலெக்டர் ஆபீஸில் சேர்ந்தவுடனேயே அந்தக் காலத்தில் 'பத்திரகாளியம்மனாக' சாமியாடிய தாத்தாவின் சம்மதத்துடனேயே, 'ஜோசப் டேவிட்டாக' மாறி, குலதெய்வமான சுடலை மாடசாமி கோவிலில் மணமகள் வீட்டாருக்குத் தெரியாமலே பூஜையும் போட்டுவிட்டு, அப்புறம் பணக்கார வம்சத்தைச் சேர்ந்த மேரி புஷ்பத்தை சர்ச்சில் பிடித்தார். முதல் பிள்ளை நான்கு வயதில் சற்று இழுத்து இழுத்து நடந்ததால், சுடலை மாடசாமியின் 'கோபத்தைத்' தணிக்கும் வகையில் 'கொடைக்கு' 'வரி' கொடுத்ததோடு, சாமிக்கு வேட்டிகூட எடுத்துக் கட்டினார். சர்ச்சுக்குப் போவதைக் குறைத்தார். என்றாலும், இரண்டாவதாகப் பிறந்த பெண்ணும் மூளைக்கோளாறு உள்ளவள்போல் தோன்றியதும், பாதிரியாரிடம் போய் 'பாவமன்னிப்பு'ப்

பெற்றார். அப்படியும் மூன்றாவது பிறந்த பையன் ஒரு வருடத்திற்குள் 'துள்ளத் துடிக்க' இறந்ததும் மீண்டும் சுடலை மாடசாமியிடம் வந்தார். இப்போது சர்ச்சுக்கு ஜோஸப் டேவிட்டாகவும், சுடலைமாடனுக்கு ராஜலிங்க மாகவும் அவரால் நடமாட முடிகிறது.

பேச்சை எப்படித் துவக்குவது என்று ஒவ்வொருவரும் யோசித்துக் கொண்டிருந்தபோது, மேரி புஷ்பம் தன் எட்டு வயதுப் பையன் ஜாய்ஸ்லினைப் பார்த்து, "இவங்களுக்கு ஒரு பாட்டுப் பாடிக் காட்டுடா" என்றாள். அந்த எட்டு வயதுப் பொடியன் "டிவிங்கில்... டிவிங்கில் லிட்டில் ஸ்டார்" என்று சொல்லிக்கொண்டு கைகளை மேல்நோக்கிக் குவித்து, கால்களை ஆட்டினான். உடனே தரையில் பால் டப்பாவை எடுத்து வைத்துக் கொண்டு 'மேளம்' அடித்துக் கொண்டிருந்த தன் பெரிய மைத்துனர் தங்கப்பாண்டியின் மகன் குமாரை, ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டே "ஜாய்ஸ்லின், இந்த குமாருக்கு ஒரு மாசந்தான் சின்னவன். ஒரு மாசமா... ரெண்டு மாசமா... ஆமாம்... ஒரு மாசந்தான். இவன் ஜூன். அவன் ஜூலை..." என்றாள் மேரி புஷ்பம்.

ஒரு மாதம் முன்னால் பிறந்த குமாரால், இப்படிப் பாட முடியுமா என்பதுபோல் அவன் முகத்தை 'பாவமாக' வைத்துக் கொண்டபோது, பொன்னையாவிடம் 'அந்தா கிடக்கே... வாதமசக்கி... ஆயும்... கொஞ்சம் கீறுனா போதும்', என்று சொல்வதற்காக படியிறங்கிய ராசமமா, அங்கேயே நின்றாள். அவளையும் பார்க்கப் பாவமாகத் தான் இருந்தது. குமார் பயலோ, எதுவும் நடக்காதது போல் பல்லைக் கடித்துக்கொண்டே டின்னை அடித்தான்.

'டிவிங்கிலை' முடித்துவிட்ட ஜாய்ஸிலின், அம்மாக் காரி மேரி புஷ்பத்தைப் பார்த்தான். உடனே அவள் "டிராட்...டிராட், பாடு" என்றாள். 'பேபி கோஸ் டு

ஸ்கூல்...டிராட்...டிராட்' என்று துவங்கும் ஆங்கிலப் பாடலை கிட்டாம்பட்டி 'ஆக்ஸன்னோடு' பையன் பாடிக் கொண்டிருந்தான். அவன் கையை ஆட்டிய விதமும், காலைத் தூக்கிய லாகவமும், கவர்ச்சியாகத்தான் இருந்தது பிரமுகர்கள் மகிழ்ந்து போனார்கள்.

''பலே...நீதாண்டா ஒங்க தாத்தா பேர எடுத்தால் எடுக்கணும்'' என்றார் முன்ஸீப். அப்போது ராஜலிங்கமும், தங்கப்பாண்டியும், அவரைப் பார்த்து லேசாக முறைத்தார்கள்.

''அவரு இவனுக்கு எம்மாத்திரம்வே? நம்ம முன்ஸீப்புக்கு இக்கன்னா போடத்தான் தெரியும்... யார் யார் எப்படின்னு சொல்லத் தெரியாது... நம்ம குமார் கலெக்டரா வரப்போறான் பாருங்க...'' என்றார் கர்ணம், கையில் இருந்த அடங்கல் பட்டாவை ஆட்டிக் கொண்டே!

''எல்லாம் வளப்புல இருக்குவே... இவன் மேரி புஷ்பத்தோட மகனாச்சே...'' என்றார் இன்னொரு கிழவர்.

ஜாய்ஸ்லின் பயலுக்கு எப்படியோ, மேரி புஷ்பத்திற்கு பெருமை பிடிபடவில்லை. ''ஜாய்ஸ்...ஓல்ட் விச் ஸ்டோரியச் சொல்லு பார்க்கலாம்'' என்றாள். அந்தப் பயல் இப்போது 'ஓல்ட் விச்' கதையைச் சொல்லாமல், இன்னமும் 'மேளம்' அடித்துக் கொண்டிருந்த பெரியப்பா மகன் குமாரைப் பார்த்து ''காலையில் உதச்சியே, இப்போ பைட்டுக்கு வாரீயாடா... பேஸ்டர்ட் தேவடியா பிள்ளா'' என்று சவாலிட்டு குமாரின் கையைப் பிடிக்கப் போனதுடன், பிரபல பத்திரிகைகளில்கூடப் பிரசுரிக்க முடியாத கெட்ட வார்த்தைகளை, மேற்கொண்டும் பேசிக் கொண்டே போனான்.

எல்லோரும் அசந்துவிட்டார்கள். 'எல்லாம் வளப்புல இருக்குவே' என்று சொன்ன அதே கிழவர், மேரி புஷ்பத்தை வேறு விதமாக வெறித்துப் பார்த்தார். இன்னும் படியிலேயே நின்ற ராசம்மா மேரிபுஷ்பத்தை நோட்டம் விட்டுக்கொண்டே ''ஏய்!...குமார்...'நீராருங் கடலுடுத்த' பாடிக் காட்டுடா... இவனுக்குக் கெட்ட வார்த்தை சொல்லிக் கொடுத்தாலும் வராது'' என்றாள், அவற்றைச் சொல்லிக் கொடுத்துத் தோற்றவள்போல.

மேரி புஷ்பமும் போரில் தோற்ற ராவணன் 'ஜானகி நகுவாள்' என்று வருத்தப்பட்டதுபோல், பிரமுகர்களைப் பற்றிக் கவலைப்படாமல் 'ராசம்மா பாடுவாள்' என்று நாணினாள். இருந்தாலும், தேக்குத் தூண் அருகே, ஒரு நீளமான குச்சியில், அதைவிட சின்னக் குச்சியை குறுக்காக வைத்து, மத்தியில் ஒரு நூலை வைத்துக் கட்டிக்கொண்டிருந்த ஏழுவயது மகள் ஜெய்ஸியைப் பெருமையாகப் பார்த்துக்கொண்டே ''ஜாய்ஸ்லின் சில சமயம் இப்படித் தான் லூசாயிடுவான்...ஆனால் அவள் அப்படி இல்ல... ரொம்ப ரிலிஜியஸ். இப்பக்கூட சிலுவை செய்யுறத பாருங்க...'' என்றாள். எல்லோரும் ஜெய்ஸியைப் பார்த்தபோது, அந்தச் சிறுமியோ ''இது ஒண்ணும் சிலுவை இல்ல ஏரோப்பிளேன்'' என்றாள் வெடுக்கென்று.

சுவரில் மாட்டியிருந்த ரிவெக்ஸ் கடிகாரம் பன்னிரெண்டு தடவை அடித்தது. உடனே கர்ணம் ''சரி, மணியடிக்குது. நல்ல நேரம் பேச்ச ஆரம்பிப்போமா?'' என்றார்.

''ஏன்வே பட்டையில போட்ட நண்டு மாதுரி பறக்கியரு...?'' என்றார் முன்ஸீப்.

''இது நீரு பிரிச்ச வரியை கஜானாவுல கட்டாதது மாதிரி நிதானமாக நடக்கிற விவகாரம் இல்ல. இப்பவே

முடியப் போறது...என்ன சின்னையா... நான் சொல் லுறது...'' என்றார் கர்ணம்.

முன்ஸீப்பிற்கு சின்னையாவான கந்தசாமிக் கிழவர் ''இதுல என்னப்பா சொல்றதுக்கு இருக்கு? ராமன், லட்சுமணன் மாதிரி இருக்கிறவங்க...சும்மா...நாம பேச வேண்டியது உலக முறைக்கித்தான். சரி. சத்திரப் பட்டை பாசனத்துல எவ்வளவு இருக்கு...? நாலரைக் கோட்டை விதப்பாடா?'' என்றார்.

கர்ணம் இடைமறித்தார். ''நாலரைக் கோட்டையும் ஒருவர்பேர்ல இல்ல. சர்க்கார்ல இந்தக் கூறுகெட்ட குப்பங்க நிலச் சீர்திருத்தமுன்னு கொண்டுவரும்போது இவங்கய்யா என் காத கடிச்சாரு. இப்போ, பலர் பேர்ல பட்டா இருக்கு.''

முன்ஸீப் பதிலளித்தார். ''என்னவே, ஜமாபந்தில உளறுறது மாதிரியே உளறுறியரு? பட்டாவா இப்ப முக்கியம்? அதத்தான் எப்படி வேணும்னாலும் பண்ணிக் கலாமே. மொதல்ல நிலத்தப் பிரிச்சிப் பாப்போம்...''

கந்தசாமிக் கிழவர் தலையிட்டார். ''சரி. ஒங்க சண்டய கச்சேரில வச்சுக்கங்க. எப்பா, ராஜலிங்கம்! தங்கப்பாண்டி! சத்திரப்பட்டை குளத்துல நாலரைக் கோட்டையும், சீமப்பேரில இருக்கிற மூணு கோட்டை யும், சரியா இருக்கும் ஏன்னா சீமப்பேரிலே...எல்லாப் பயிரும் போடலாம் பாரு...யார் யாரு, எத எத எடுத்துக் கிடுறிய? சீக்கிரமாச் சொல்லுங்க, நாழியாவுது...''

ராஜலிங்கம் குழைந்தார்...''அண்ணன் எத வேணு முன்னாலும் எடுக்கட்டும். அவன் எடுத்ததுபோக மிச்சம் இருந்தால் தரட்டும்...''

தங்கப்பாண்டி, தம்பியை பாசத்தோடு பார்த்துச் சொன்னார். "அதெப்படிடா... நீ வெளியூர்ல இருக்கவன் நானாவது இங்க இருந்து எல்லாத்தையும் கவனிக்கிறவன். அதனால ஒனக்குப் பிடிச்சத எடுததுக்கிட்டு பிடிக்காதத தா, வாங்கிக்கிறேன்..."

"எங்க இருந்தாலும் நீதான் என் வயலையும் கவனிக்கப்போறி! ஒன் இஷ்டம் எத வேணுமுன்னாலும் தாங்க "

"சரி மாமா... தம்பிக்கு சீமப்பேரி பாசனத்தை கொடுத்திடுங்க. சத்திரப்பட்டையில சில சமயம் 'கமலை' அடிக்கணும். அது இவனுக்கு தோதுப்படாது."

முன்ஸீப், கையாட்டிக்கொண்டே பேசினார் "அப்டி பங்கு வைக்கது தப்பு. ஒவ்வொரு பாசனத்தையும் ரெண்டு ரெண்டா போடணும்... அப்பத்தான் ஒருவன் வயல இன்னொருவன் பார்த்துக்கலாம்."

கர்ணம் விடுவாரா? அதுவும் முன்ஸீப் பேசும்போது. "வே...பேசத் தெரிஞ்சா பேசும்...இல்லன்னா சும்மாக் கெடயும். போனவாரம் இப்படித்தான தாசில்தார்கிட்ட எடக்குமடக்கா பேசி மாட்டிக்கிட்டியரு...ஒரு பாசனத்த ரெண்டா பிரிச்சா...பம்பு ஸெட்ட எப்படிவே பிரிப்பியரு? டிராக்டர எப்படிவே பிரிப்பியரு? பிரிவினன்னு வந்த பிறவு, அவன் பாப்பான் இவன் பாப்பான்னு சொல்லுததுல அர்த்தம் இருக்காவே? படுகளத்துல ஒப்பாரிவச்சு என்னவே அர்த்தம்..."

கந்தசாமிக் கிழவர், அவர்களை கையமர்த்திவிட்டுப் பேசினார். "சரிப்பா. சத்திரப்பட்ட பாசனம் மூத்தவனுக்கு! சீவலப்பேரி இளையவனுக்கு! அப்புறம் கடையம பாசனத்துல இருக்கிற மூணு கோட்ட விதப்பாட்ட எப்படிப் பிரிக்கிறது...?"

''தம்பிக்கிட்ட கொடுத்திடலாம்... அவன் திருநெல் வேலியில இருந்து பஸ்ல வந்து நிலத்தைப் பார்த்துட்டுப் போவ வசதியா இருக்கும். நான் அதுக்குப் பதிலா பேச்சியம்மன் குளத்துல மூணு கோட்டை புஞ்சைய எடுத்துக்கிடுறேன்...''

''நீ ரொம்ப விட்டுக் கொடுக்க அண்ணாச்சி...புஞ்சை யும் நஞ்சையும் ஒண்ணாகுமா? அதோட அந்த நிலத்துக்கு அப்பாவுக்குத் தெரியாமலே அட்வான்ஸ் கொடுத்தது நீதான்...நான் மட்டும வச்சிக்கிட்டா நியாயம் இல்ல...''

முன்ஸீப் கர்ணத்தைப் பார்த்து கண்ணடித்துப் பேசினார்: ''பாத்தியராவே... அண்ணன் தமபின்னா இப்டில்லா இருக்கணும்... நீரு ஒம்ம தம்பிகிட்ட இப்டி நடந்திருந்தா இப்போ கோர்ட்டுக்கு அலைய வேண்டியது மிச்சமில்லா...''

கர்ணம் தோற்றதற்கு அடையாளமாகக் கோபப் பட்டார். ''வே...நான் அப்புறம் கிளறுனேமுன்னா, நீரு அசல் குப்பையா ஆயிடுவீரு...''

கந்தசாமிக் கிழவர் மீண்டும் அவர்களை கையமர்த்த வில்லை. ''சரி...கடையம் வயல பாதிப் பாதியா பிரிச் சுடலாம். அண்ணன் தம்பிங்க எங்கயாவது ஒரு இடத்துல சந்திக்கணுமில்லியா ...அப்புறம் வீட்டுக்கு வருவோமா...'' என்று சொல்லிக்கொண்டே, கிராம முன்ஸீப்பையும் கர்ணத்தையும் அலட்சியப்படுத்தினார். இதற்குள் பள்ளி ஆசிரியை சரஸ்வதி காபி டம்ளர்கள் கொண்ட ஒரு தட்டோடு தோன்றினாள். வீட்டுக்குள்ளே இன்னொரு ஆசிரியை பார்வதி, அடுப்பிற்கு மேலிருந்த வாணலியில், கடலைமாவை, உருட்டி உருட்டிப் போட்டுக்கொண்டிருந் தாள். வாணலியில் இருந்து 'ஷ்...ஷ்...' என்று கிளம்பிய ஓசை இனிமேல் விவகாரமே இல்லை என்பது போலவும், இனிமேல்தான் இருக்கிறது என்பது போலவும் சொல்லா

மல் சொன்னது. இதற்குள் தலைமை ஆசிரியர் தங்கசாமி வெளியே இருந்து ஒரு 'சிவப்பு' வெற்றிலைக் கட்டுடன் உள்ளே வந்தார்.

பிரமுகர்கள், காபியை குடித்துக்கொண்டே, பிரிவினையை ஏறக்குறைய தீர்த்துவிட்டார்கள். அண்ணன் தம்பி இருவரும், யார் கர்ணன் என்பதை தெளிவாக்குவதற்காக 'விடு' என்று சொல்லுமுன்னாலேயே விட்டுக் கொடுத்ததால், சில பிரமுகர்களுக்குக் குறிப்பாக கந்தசாமிக் கிழவருக்கு, ஏன் வந்தோம் என்பது போலிருந்தது. மாந்தோப்பு பெரியவருக்கும், தென்னந்தோப்பு சின்னவருக்கும் கொடுக்கப்பட்டன. டிராக்டர், பெரியவர்க்கு...அதற்குப் பிரதியாக திருநெல்வேலியில் ஓடும் 'டாக்ஸி' சின்னவருக்கு...ஊருக்குச் சற்று ஒதுங்கிய இடத்தில் 'வந்த விலைக்கு' வாங்கிப் போட்டிருந்த ஒரு சின்ன வீடே தனக்குப் போதும் என்று சொல்லிவிட்டார் சின்னவர். ''நீ அதிகாரியாய் இருக்கறவன். நாலுபேர கூட்டிக்கிட்டு வாரவன். ஒனக்கு இந்த வீடுதாண்டா லாயக்கு. நான் வாத்தியார். எதுல வேணுமுன்னாலும் இருந்துக்குவேன்!'' என்று மூத்தவர் சொன்னபோது, இளையவர், தன் மனைவியை தெரியாத்தனமாக எதிர்த்துப் பேசிவிட்டவர்போல் பதைபதைத்து, ''இல்ல அண்ணாச்சி... நான் எப்பவாவது எட்டிப் பாத்துட்டு வந்த வேகத்துலேயே ஓடிப் போறவன்...நீ பிள்ள குட்டிக் காரன். ஒனக்குத்தான் இந்த வீடு...'' என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டார்.

கர்ணத்தால் மேலும் பேசாமல் இருக்க முடியவில்லை. ''எதுக்கும் ஒரு செட்டில்மென்ட் பத்திரம் போட்டுடுவோம். அப்படியே திருஷ்டி சுத்திப் போடுங்க. இந்த மாதுரி சுமுகமா, எந்த வீட்லயும் பாகம் பிரிச்சது கிடையாது'' என்றார்.

மேரி புஷ்பம், படிதாண்டி வெளியே வந்து, கந்தசாமிக் கிழவரைப் பார்த்துக் கேட்டாள். ''அப்புறம், ஸ்கூல் யாருக்குன்னு பேசிட்டியளா... இனிமேல்தான் பேசணுமா...?''

கர்ணம் எழுதப் போவதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த தங்கப்பாண்டி திடுக்கிட்டார். கண்டுக்காதது மாதிரி ''உம்...சீக்கிரமா எழுதும்...'' என்று சொல்லிவிட்டு ஓரக்கண்ணால் தம்பியின் மனைவியைப் பார்த்தார். அவள் மீண்டும் கேட்டாள்: ''ஸ்கூல் எங்களுக்குத் தானே?''

தங்கப்பாண்டி, கர்ணத்தோடு சேர்ந்து தலை நிமிர்ந்தார். தம்பி, 'அமுக்கடி கள்ளன்' மாதிரி மேலே ஓடிய மின்விசிறியைப் பார்த்தபோது, அவர் கந்தசாமிக் கிழவரைப் பார்த்துக் கண்களால் கெஞ்சினார். கிழவரும் தன் 'தங்கச்சி மகன்' விஷயத்தை நினைத்துக் கொண்டும், ரெண்டுபடப் போகும் வீட்டில் தனக்கு 'தொக்கு' கிடைத்த திருப்தியிலும் அமைதியாகப் பேசினார். ''இருபது இருபத்திரண்டு வருஷமா, அவன்தான் ஸ்கூல கட்டி அழுவுறான்...வச்சிட்டுப் போறான்...''

மேரிபுஷ்பம் அனாவசியமாகப் பதிலளித்தாள்: ''அதனாலதான் கேக்கோம்... அவரு இருபத்திரண்டு வருஷமா அனுபவிச்சுட்டாரு...நாங்களும் கொஞ்ச காலத்துக்கு வச்சிட்டுப் போறோம்!''

கந்தசாமிக் கிழவர் அதட்டினார். ''நீ சும்மா இரு அம்மாளு. பள்ளிக்கூடம்—பொல்லாத பள்ளிககூடம்... இன்னைக்கோ நாளைக்கோன்னு சுவருவ நிக்குது. இருக்கதுல்லாம் ஓட்டப் பெஞ்சு...கட்டடம் ரெண்டாயிரம் ரூபாய்க்குப் பொறாது. இது வந்துதானா ஒனக்கு நிறையப் போவுது? கணக்கப்பிள்ள...நீ ஏய்யா எழுதாம முழிக்கே...எழுது. ஸ்கூலு தங்கப்பாண்டிக்குன்னு ஒரு வரி எழுதிடு...''

மேரி புஷ்பம், ரோஷத்தோடு பேசினாள்: ''கர்ணம் கொஞ்ச நேரம் சும்மா இரும்... சித்தப்பா, நீங்க இப்படி பேசுறது தப்பு. ஒரு கண்ணுல சுண்ணாம்பும் இன்னொரு கண்ணுல வெண்ணெயும் வைக்கது தப்பு. ஓரம் சாய்ந்து வழக்குப் பேசுறவரோட குடி ஒரேயடியாய் போயிடும். ஒங்களுக்கு ரெண்டுபேரும் ஒரேமாதிரி தெரியணும் என்கிறது தெரியல...''

கந்தசாமிக் கிழவரின் உதடுகள் துடித்தன: ''அப்படின்னா...நாங்க ஓரம் சாஞ்சி பேசறோமுன்னு சொல்றியா? என் குடி கெட்டுப் போகுமுன்னு சாபம் போடுறியா? நீ மவராசியா ஒன் மச்சானோட பேசி முடிச்சுக்க. வாங்கடா நாம போவலாம். இனும நமக்கு இங்க வேல இல்ல... எந்திரிங்கப்பா...''

'இனுமதான் வேலை இருக்கு' என்பதுபோல் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். எழுந்து நின்ற கந்தசாமியை, ராஜலிங்கத்தின் மாமனார் 'உட்காரும்வே' என்று ஒப்புக்கு கையைப் பிடித்தபோது, அந்தக் கிழவரும் 'டங்கென்று' ஒரேயடியாய் உட்காருபவர்போல் உட்கார்ந்தார். இதற்குள் ராசம்மாவும் அங்கே வந்து கொண்டிருந்தாள். வந்துகொண்டே பேசினாள்: ''தலயே போனாலுஞ் சரி...பள்ளிக்கூடத்த குடுக்க முடியாது...''

''அப்டிப் பேசாதக்கா...பள்ளிக்கூடம் ஒப்பா வீட்ல இருந்து நீ கொண்டு வரல.''

''ஆமா...நீதான் ஒய்யா வீட்ல இருந்து இவ்வளவு பெரிய பள்ளிக்கூடத்த கொண்டு வந்தியாக்கும்...''

தடித்த அந்த இரண்டு பெண்களின் வார்த்தைகளும் இப்போது தடிப்பதுபோல் தெரிந்ததால், தங்கப்பாண்டி, தம்பியை நேராகப் பார்த்துக் கேட்டார்: ''ஒன் பெண்டாட்டி பேசுறதுல, ஒனக்கு சம்மதமாடா?''

''சம்மதமில்லாட்டா இந்நேரம் அவள தடுத்திருப் பேனே...எனக்கும இந்த ஊர்ல ஒரு பிடிப்பு இருக்கண் டாமா? நிலத்தை குத்தகைக்கு அடச்சிடலாம். ஊருக்கு வராமலே நெல்ல வாங்கிக்கலாம். ஸ்கூல் எனக்குன்னா, நான் அடிக்கடி வரலாம். பிறந்த மண்ண மறக்க மாட்டேன்.''

''ஒனக்கு, ஒன் கூட பிறந்தவனவிட, மண்ணு பெரிசா யிட்டு?''

''ஒனக்கு, நான் இந்த ஊருக்கு வரப்படாதுன்னு ஒரு எண்ணம் வந்துட்டு.''

''ஏய்... பள்ளிக்கூடம் யார் பேருக்கு இருந்தா என்னடா?''

''அப்படீன்னா, என் பேருக்கே இருக்கட்டுமே.'

இதுவரை பேசாமல், சும்மா வெறும் வாயை மென்று கொண்டிருந்த கீழத்தெரு மணிமுத்து ஆவேசமாய் பேசினார். அவருடைய அய்யாகூடப் பிறந்த அத்தையைத் தான் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்திய சுடலைமாடனுக்கு கொடுத்திருந்தது. அத்தைக்காரியை, மாடன் அப்புறம் தள்ளிவைத்து விட்டாலும். மணிமுத்து, தன்னை அந்த வீட்டுக்குள் அடிக்கடி தள்ளிக்கொண்டு வருபவர், உணர்ச்சிப் பிழம்பாகப் பேசினார். இவ்வளவுக்கும் அண்ணன்—தம்பி இருவரும் சுடலைமாடனின் 'இளையோடியாள்' பிள்ளைகள். அவர் அத்தை பிள்ளை பெறுவதற்கு, சுடலைமாடன் வாய்ப்பே கொடுக்காமல் தள்ளி வைத்து விட்டார்.

''பூனைங்க ரொட்டிக்கு சண்டைபோட்டு, குரங்கு கிட்ட போன கதை மாதுரி பண்ணிப்படாதிங்கடா...எங்க அத்த புருஷன் அஞ்சி படிச்சிட்டு, அப்புறம் எதையோ ஒன்னப் படிச்சிட்டு, திண்ணயில பள்ளிக்கூடம் ஆரம் பிச்சது இன்னும் ஞாபகமா நெஞ்சில இருக்குடா... அவரு,

'காலேலரைக்கால் துட்டுக்கு நாலேலரைக்கா வாழைக்காய், நாலேலரைக்கா துட்டுக்கு எத்தன வாழைக்கா'ன்னு இப்ப தான் கேக்கறதுமாதிரி இருக்கு மாகாணி வாய்ப்பாட்டச் சொல்லலன்னு என் முதுகில அடிச்சத நினைச்சா இப்பகூட வலிக்குது. தழும்புகூட இன்னும் மறையல... வீடு வீடா போயி, நாயி மாதுரி காத்துக் கிடந்து, பிள்ளியளக் கொண்டு வந்து ஆரம்பிச்ச பள்ளிக்கூடண்டா இது... இப்ப எட்டாப்பு வரைக்கும் வந்து, இன்னும் பத்தாப்பு வரைக்கும் வரவேண்டிய பள்ளிக்கூடண்டா இது...வெண்ண திரளும்போது தாழிய உடைச்சிடாதியடா. இந்தப் பள்ளிக்கூடம் வந்த பிறவுதான், இந்த வீட்ட கட்டுனாரு. இது வந்த பிறவுதான் சத்திரப் பட்டையில நாலரைக் கோட்ட நிலமும் கடயத்துல மூணு கோட்ட நிலமும் வாங்க முடிஞ்சுது. அதுக்கு முன்னால, எங்க மாமன் வெறும் ஓட்டாண்டிதான். என் நிலமயில தான் இருந்தாரு. அப்படி கட்டிக் காப்பாத்துன பள்ளிக் கூடத்த ஒண்ணு கிடக்க ஒண்ணு பண்ணிப்பிடாதிங்கடா. இது கற்பகத்தருடா...ஒங்களுக்கு வீடுவாசலையும் பால் பவுடரையும் கொடுத்த காமதேனுப் பசுடா.''

தங்கப்பாண்டி அவரை நீதிபதியாக நினைத்து வாதாடினார். ''இந்தப் பள்ளிக்கூடத்த கட்டிக் காப்பாத்த என்ன பாடுபட்டேன்னு ஒமக்கே தெரியும். கவாலிப் பயலுவ என்ன கேள்வில்லாம் கேட்டாங்க... வாத்தியாருங்ககூட பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னால எப்டி 'செட்டு' சேர்ந்தாங்க... 'வடக்கூர்ல' வேதப் பள்ளிக்கூடம் போட்டியா வந்தபொறவு, பிள்ளிங்க எண்ணிக்கை குறைஞ்சுது... நான் நம்ம ஊர் ஆளுங்க காலுல கையில விழுந்து எப்படிச் சேர்த்தேன். நாயே பேயேன்னு பேசுன டி.இ.ஓ. கிட்ட கூடல்லாம் எப்டி எப்டி குழஞ்சேன்...இன்னையோடு அந்தப் பள்ளிக் கூடத்துல என் கால்பட்டு இருபத்தோறு வருஷம் ஆவுது தம்பி...அந்தக் காலை ஒதைக்கப் பார்க்கது நியாயமா?

பள்ளிக்கூடமே பழின்னு கிடக்கிற என்கிட்ட இருந்து அத பிடுங்கினால் நான் இருக்கதுல அர்த்தமில்ல. இந்த சனியன் பிடிச்ச பள்ளிக்கூடத்துக்காவ என்ன பாடெல்லாம் பட்டிருக்கேன்.''

மேரி புஷ்பம், கணவனைப் பார்த்துக் கேட்டாள்: ''ஏன் பேசாமல் இருக்கீங்க? நீங்க மட்டும் கலெக்டர் ஆபிஸ்ல இல்லாட்டா, இவரு...டெப்டி இன்ஸ்பெக்டர அடிச்சதுக்கு...ஜெயிலுக்கு போகாம இருக்க முடியுமா? வாத்தியாருங்க கொடுத்த மனுவால குளோஸாகப் போன பள்ளிக்கூடத்த, நீங்க மட்டும் இல்லாட்டா திறந்திருக்க முடியுமா? பணம் வாங்கிக்கிட்டு மத்தியானச் சாப்பாடு போடாததுக்கு, பி.டி.ஓ. ரிப்போர்ட் பண்ணினார். நீங்க அவருகிட்ட போய் பேசாட்டா பள்ளிக்கூடம் இருந்திருக்குமா? வாத்தியாருங்க எழுதிப் போட்ட மொட்ட மனுக்காக டி.இ.ஓ. ஆபிஸ்ல போய்ப் பார்த்து, அந்த மனுக்களயே இவருகிட்ட கொண்டுவந்து காட்டாட்டா...இவருதான் 'மொட்ட மனு' வாத்தியாருங்கள, அடையாளம் கண்டு அவங்கள நீக்கி இருக்க முடியுமா? அவங்கதான் அடங்கியிருப்பாங்களா? இதுக்காக ஒங்க கைல இருந்து எவ்வளவு காசு செலவாகி இருக்கும்? சொல்லுங்க ''

ராசம்மா வாயைத் திறந்தபோதே, 'ஆவி' வெளியேறியது. ''சும்மா அப்பாவி வாத்தியானை ஏமாத்திப் பிடலாமுன்னு பாக்கியளோ...அதுதான் நடக்காது...எதக் கொடுத்தாலும் கொடுப்போம்...பள்ளிக்கூடத்த மட்டும் கொடுக்க முடியாது...''

''ஒனக்கு கஷ்டமாத்தான் இருக்கும். பாடஞ் சொல்லிக் கொடுக்க வேண்டிய வாத்திமார்களை வீட்டு வேலைக்கு ஏவ முடியாது பாரு...கோதுமையைக் காயப் போட முடியாது பாரு...எண்ணை டின்கள, அடுக்கடுக்கா

அடுக்க முடியாது பாரு... இதுக்குமேல வளையல் பண்ண முடியாது பாரு...கஷ்டமாத்தான் இருக்கும். ஒன் வீட்டுக்கு வந்து ரெண்டு நாளாச்சு. ஒரு நல்ல சாப்பாடு உண்டா? நேத்து வச்ச குழம்ப இன்னைக்கு ஊத்துற. பள்ளிக் கூடத்துக்கு வார கோதுமையில ஒரு படியாவது கொடுத்திருக்கியா? பள்ளிக்கூடம் எங்களுக்குத்தான் வேணும்''

கர்ணம் வாயைத் திறந்தார்: ''நான் ஒண்ணு சொல்றேன். நடக்க முடியுறதத்தான் சொல்லப் போறேன்!''

''நீரு திருஷ்டி சுத்தணுமுன்னு சொன்னவுடனேயே எல்லாம் நடந்தாச்சு. இனும் என்னத்தவே பேசறதுக்கு இருக்கு?'' என்றார் சமயம் பார்த்திருந்த முன்சீப்.

கர்ணம், அழுத்தந் திருத்தமாகப் பேசினார்: ''எதுக்கு வீணா அடிச்சிக்கிடுறிய. பேசாம மேனேஜ்மெண்ட் கமிட்டி போட்டுறலாம். இவங்க ரெண்டுபேரோட நான், நம்ம முன்சீப்பு, இவரு சுந்தசாமி மச்சான், இன்னும் ரெண்டுபேர்னு போட்டுட்டா வம்பில்ல. அதோட பள்ளிக்கூட இடம் பட்டா நிலம் இல்ல. நத்தம் புறம் போக்குத்தான்.''

கிராம முன்சீப், கர்ணத்தை முதல் தடவையாக குளிர்ச்சியாகப் பார்த்தபோது, ராஜலிங்கத்தின் மாமனார், மருமகன் சார்பில் ''எவ்வளவு மொய் வேணு முன்னாலும் வாங்கிக்கட்டும். பள்ளிக்கூடத்த தந்திடணும்'' என்றார்.

உடனே தங்கப்பாண்டியின் மாமனார், ''நான் இப்பவே இந்த இடத்துலயே ரூபாய் தாரேன். பஞ்சாயத்துல எவ்வளவு சொல்றாவுளோ, அவ்வளவையும் தாரேன். ஆனால் பள்ளிக்கூடம் இவருக்குத்தான்'' என்றார்.

''ஒருக்கா லும் தரமுடியாது. நீங்க தலைகீழ நின்னா லும் தரமுடியாது'' என்றார் தங்கப்பாண்டி. ராஜலிங்கத் திற்கும் கோபம் வந்தது. 'உடன் பிறப்பை' உற்றுப் பார்த்தார்.

''அந்தக் காலத்துலயே, நான் காலேஜ் படிக்கையில், எங்கண்ணன் 'இவனை எப்படிப் படிக்க வைக்கலாம். என்னை எஸ் எஸ். எல்.சில விட்டுட்டு இவனுக்கு மட்டும் காலேஜா'ன்னு கேட்டவன். அப்போ இருந்த பொறாமப் புத்தி இன்னும் போகல! இவன் வாத்தியா னுக்கு மானேஜர் அந்தஸ்து வேணுமுன்னு நினைச்சால், நான் ஆபிஸர் கேட்கறதுல என்ன தப்பு?''

கந்தசாமிக் கிழவர் கிட்டத்தட்ட சாபமிட்டார். தங்கச்சி மகன் விவகாரம், சாபத்தின் குரலை வலுவாக் கியது.

''ஏ ராஜலிங்கம்! காலேஜ்ல பணம் கட்ட, வாத் தியாருங்க வாயில அடிச்சு, அந்தப் பணத்த, காலேஜுக்குக் கொண்டுக்கிட்டு வந்தவண்டா ஓங்கண்ணன்! அப்படிப் பட்ட உத்தமனை பொறாமைக்காரன்னு வாய்க்கு வந்தபடி பேசாதடா. சொந்த அண்ணண்டா. வச்சிட்டுப் போட்டுண்டா...''

'பூனைக்கதை' சொன்ன மணிமுத்து மீண்டும் பேசினார். ''எங்க அத்தய தள்ளிவச்ச பாபம், இப்படி வந்து நிக்குதுன்னு நெனக்கேன். ஏய் சொல்றதக் கேளுங்கடா. திருவுளச்சீட்டு போட்டுப் பார்க்கலாம்''

''அதெல்லாம் முடியாது. என்னைக் கொன்னுட்டு வேணுமுன்னா அவன் ஸ்கூல எடுத்துக்கட்டும்.''

மணிமுத்து இறுதியாகப் பேசினார். ''சரி...இதுக்கு ஒரே வழிதான். பேசாம ஏலம் போடறேன். ஏலுறவன் எடுத்துக்கட்டும்.''

''சீச்சீ...ஏலமா?''

''இதுல என்ன முன்சீப் தப்பு? குளத்துல இருக்கிற விறால் மீனை ஏலம் போடுறோம். கோயிலுல போட்ட பந்தல் 'கம்பு கணியள' ஏலம் போடுறோம். மானத்த தவிர எத வேணுமுன்னாலும் ஏலம் போடலாம். சரியப்பா கேளுங்க...''

• மணிமுத்து மார்பை நிமிர்த்திக் கொண்டார்.

''ஐயாயிரம் ரூபாய்'' என்றார் தங்கப்பாண்டியின் மாமனார்.

''பத்தாயிரம்'' என்றார் ராஜலிங்கம் மாமனார்.

''பதினையாயிரம்.''

''இருபதாயிரம்!''

''இருபத்தையாயிரம்!''

''இருபத்தையாயிரம் ஒரு தரம்! இருபத்தையாயிரம் ரெண்டு தரம்! இருபத்தையாயிரம்...''

''இருபத்தெட்டு!''

''இருபத்தெட்டு!...ஒரு தரம் இருபத்தெட்டு!...தங்கப் பாண்டி கேக்கணுமுன்னா கேளு...அப்புறம் வருத்தப்படப் படாது...இருபத்தெட்டு...!''

''முப்பாதாயிரம்!''

''முப்பதாயிரம்...ஒரு தரம் முப்பதாயிரம்...ராஜலிங்கம்...கேக்கணுமுன்னா கேளு! ஒரு தரம் முப்பதாயிரம்... ரெண்டாந்தரம் முப்பதாயிரம்...''

ராஜலிங்கம் மேற்கொண்டு கேட்கப் போனார். உடனே மேரி புஷ்பம், அவரது வாயை பகிரங்கமாகப் பொத்திக் கொண்டாள். குசேலர் அவலை, கிருஷ்ணன் தின்னும்போது, ருக்மணியோ, லட்சுமியோ தலையிட்டது போல...

''விட்டுடுங்க... அவரு மவராசனா வச்சுக்கட்டும்...''

ராசம்மா பதிலளித்தாள். ''மவராசனா வச்சிக்கல... முப்பதாயிரம் ரூபா பேசி வச்சிக்கிடுறோம்!''

ராஜலிங்கம் மனைவியின் கையை வாயிலிருந்து வலுக்கட்டாயமாக நீக்கிக் கொண்டு மேற்கொண்டு கேட்கப் போனார். அங்குமிங்குமாக முண்டினார். ஆனால் அவள் கை அவர் வாயிலிருந்து அகலவில்லை.

மணிமுத்து ''மூணாந்தரம்! பள்ளிக்கூடம் தங்கப் பாண்டிக்கு'' என்று முடித்தார்.

செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டது, மானேஜ் மெண்ட் ஏலத்தை எழுதினால் தப்பு வரும் என்பதால், மொட்டையாக மானேஜ்மெண்ட்டும் அது சம்பந்தமான சொத்தும் இப்போது இருப்பது போலவே தங்கப்பாண்டி யிடம் இருக்கும் என்று எழுதப்பட்டது தங்கப்பாண்டி வீட்டுக்குள்ளும் வெளியேயும் போய், அரைமணி நேரங் கழித்து வந்து, தம்பியிடம் பத்தாயிரம் ரூபாயை நீட்டி னார். ''மீதிய அப்புறமா தாரேன். நம்பிக்கை இருக்கா இல்லியா...?'' என்று அவர் கேட்டபோது, மேரி புஷ்பம் ''இன்னையோட உறவு முறிக்கதுக்கு நீங்கதான் பாக்கிங்க. நாங்க அப்படி நினைக்கல...'' என்றாள். எல்லாம் முடிந்தது. சில இனிப்பு வகையறாக்களையும், கார வகையறாக்களையும் சாப்பிட்டுவிட்டு, எல்லோரும் போய்விட்டார்கள்.

சிறிது நேரத்தில், தென்காசிக்கு வாடகைக்குப் போயிருந்த டாக்சி வந்தது. ராஜலிங்கம், மனைவி மக்க ளோடும், மாமனாரோடும் காரில் ஏறிக் கொண்டார். ராசம்மா எட்டிப் பார்க்கவில்லை. தங்கபாண்டி வந்தார். அவரும் ஒப்புக்கு வந்தவர்போல் அவர்களைப் பார்க் காமல், தொலைவில் தெரிந்த பள்ளிக்கூடத்தைப் பார்த் தார்—ஏலத்தில் கேட்ட பணத்தை அங்கே புதைத்து வைத்திருப்பவர்போல.

கார் போய்விட்டது. அதன் சத்தம் சன்னமாகி, பிறகு அடியோடு இல்லாமல் போனபிறகு, ராசம்மா அடியெடுத்து வந்தாள். தங்கப்பாண்டி கன்னத்தைக் கைகளால் பிதுக்கிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அவரருகே ராசம்மா வந்து "முப்பதாயிரம் ரூபா... எப்படிச் சரிக்கட்டவோ..." என்று சொன்னாள். தங்கப்பாண்டி பதிலே பேசவில்லை.

ராசம்மா, காம்பவுண்ட் சுவர்க்கருகே வந்தாள். ஆசிரியை சரஸ்வதி, இன்னும் விறகு கீறிக்கொண்டிருந்த தன் தந்தை பொன்னையாவுக்கு காபி டம்ளரை நீட்டிக் கொண்டிருந்தாள் ராசம்மாவைப் பார்த்ததும் "தாகமா இருக்குதுன்னார். அதனால்தான்..." என்று குற்றவுணர்வில் இழுத்ததை, ராசம்மா கவனிக்காமல், இன்னொரு மரத்துண்டு கிடப்பதையும் கவனித்தாள். வாகை மரத்தின் 'தூர்'. மணி பகல் இரண்டு. பொன்னையா காபி குடிப்பது வரைக்கும் காத்திருந்தாள். அது அவர் தொண்டைக்குள் போனதும், தனது தொண்டையைக் கனைத்துக்கொண்டே "அண்ணாச்சி...இந்தத் துண்டயும் ரெண்டு கீறு கீறுங்க... ரெண்டே... ரெண்டு கீறு கீறினா போதும்..." என்றாள்.

பொன்னையா, மூன்று ரூபாய் கூலி போய்விட்டதே என்று மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், கோடாரியைத் தூக்கியபோது, ராசம்மா, முப்பதாயிரம் ரூபாயை நினைத்தபடி வீட்டுக்குள் போனாள். சரஸ்வதியும் இன்னொரு ஆசிரியையான பார்வதியும் வெற்றிலைக் கட்டோடு வந்து வெறும் வயிற்றோடு நின்ற தலைமை ஆசிரியர் தங்கச்சாமியும் பள்ளிக்கூடத்தைப் பார்த்துப் போனார்கள்! சரஸ்வதி மட்டும், கலையரங்கம் போலிருந்த அந்த வீட்டின் முகப்பறையை திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டே போனாள். அங்கே 'சீன்ஸெட்' இல்லாமலே ஒரு நாடகம் நடந்து முடிந்தது போல் அவளுக்குத் தோன்றியது.

# 2

உலகிலேயே மக்கள் தொகையின் அடர்த்தி அதிகமாக உள்ள இடம் எது என்ற கேள்விக்கு எந்த நகரத்தின் பெயரையாவது விடையாகச் சொல்பவர்களை இந்த கிட்டாம்பட்டியில் உள்ள இந்து உயர்தர ஆரம்பப் பாடசாலைக்குக் கூட்டிவர வேண்டும். மண்ணடர்த்தி இல்லாத மண் சுவர்களுக்கு மத்தியில் இருக்கும் வகுப்புக்களை வந்து அவர்கள் பார்க்கட்டும். யார் யார் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை வகுத்துப் பார்க்க முடியாத அளவிற்கும் ஒவ்வொரு வகுப்பிலும் மாணவ மாணவியர் முண்டியடித்து உட்கார்ந்திருந்தார்கள்.

சிறு வயதிலேயே பிள்ளைகள் ஒருவரோடொருவர் நெருக்கமாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்தில் அந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கலாம்.

இரண்டு கிழட்டு மாடுகள் சேர்ந்தாற்போல் படுத்திருப்பது மாதிரி தோன்றும் அந்தக் கட்டிடம் இரண்டு பிரிவுகளாக, தனித்தனி கட்டிடங்களாக உள்ளன. அந்த இரண்டுக்கும் நடுவில் உள்ள 'இடுக்கில்' பழைய பாத்திரங்களும், கிழிசல் குவியல்களும் போடப்பட்டிருந்தன. அந்த இடுக்கிற்கு, சொல்லக்கூடாத, ஒரு சரித்திரமும் உண்டு. ஒரு கட்டிடம் 'யானைமார்க்' ஓடு போட்டது. இன்னொன்றின் மேல் ஓலைப் பாய்தார் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன. அப்பப்போ சில செங்கற்கள் விழுந்தாலும், இதுவரை உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதில்லை.

உருப்படியாகக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் 'நான்கடி' வாணம் வெட்டப்பட்டு காரை, சுண்ணாம்பு, கருங்கல் முதலியவற்றோடு துவக்கப்பட்ட கட்டிடந்தான் இது இருபது ஆண்டுகளுக்கு முன்பு, 'வடக்கு ஊரில்' கிறிஸ்தவ மிஷின் பள்ளிக்கூடம் ஒன்று துவக்கப்பட்டதும் 'தெக்கூர்' காரர்களான இந்தப் பகுதி மக்கள், தாங்களாகவே பணங் கொடுத்து, சுடலை மாடனை கட்டிடம் கட்டச் சொன்னார்கள். அதற்கு முன்பு, நான்கு திண்ணையில்தான் வகுப்புகள் நடந்தன. மாடன், கட்டிடத்திற்கு கால் போட்டபோது, அவரது தந்தை இசக்கி, "எனக்கு ஊருக்குப் பக்கத்திலேயே ஒரு சமாதி கட்டணும்" என்றார். அந்தக் காலத்தில், வசதியுள்ள வயதானவர்களுக்கு உயிரோடு இருக்கும்போதே, குழி வெட்டப்பட்டு சுற்றிலும் சுவரெழுப்பி 'நினைவுச் சின்னம்' எழுப்பி வந்தார்கள். தந்தைக்கேற்ற மகனான சுடலைமாடன், பள்ளிக்கூடம் கட்ட வைத்திருந்த கருங் கல்லையும், காரையையும் எடுத்து, அப்பனுக்குச் சமாதி கட்டிவிட்டார். பள்ளிக்கூடத்தை வெறும் மண்ணை வைத்து எப்படியோ, 'ஒப்பேத்தி' விட்டார். இப்படி எடுத்த எடுப்பிலேயே 'சமாதி தானம்' செய்த பெருமை, அந்தக் கட்டிடத்திற்கு உண்டு இன்னும் பெரிய அளவில் இதே மாதிரியான தானத்தை வழங்குவதற்கும் அது தயாராக இருப்பதுபோல் தோன்றுகிறது. எப்படியோ, மண்ணாய் போனவர் காரைக் கட்டிடத்திலும், மாணவ மாணவியராய் போனவர்கள், இந்தக் கிழட்டுக் கட்டிடத் திலும் இருக்கிறார்கள்.

ஆறாவது வகுப்பும், ஐந்தாவது வகுப்பும், அவற்றின் 'பி' செக்ஷன்களும கூரைக் கட்டிடத்தில் பாதியிடத்தை ஆக்ரமித்திருந்தன. ஆறாவது வகுப்பின் இரண்டு செக்ஷன்களும், ஒரே செக்ஷனாக்கப்பட்டிருந்தது. காரணம், 'ஏ' செக்ஷனின் ஆசிரியர் கோவிந்தன், தங்கப் பாண்டியனின் மச்சான். ராசம்மாவின் அண்ணன்.

அடிக்கடி 'டவுனில்' 'ஏ' படம் பார்க்கப் போகிறவர். எப்போது வருவார், அப்படியே வந்தாலும், வகுப்புக்கு வருவாரா என்பதைச் சொல்ல முடியாது. இன்றைக்குச் சம்பள தினம். நிச்சயம் வருவார். மானேஜர் அறைக்காவது வருவார். இந்த செக்ஷன்களை ஹரிஜனப் பெண்ணான மாரியம்மாள் கவனிக்கிறாள். 'பி' செக்ஷன் ஆசிரியை வடிவு 'மெட்டர்னிட்டி' லீவில் போய்விட்டதால், 'லீவ் வேகன்சியில்' வந்திருப்பவள் சமீபத்தில்தான் அவள் 'டீச்சர் ட்ரெயினிங்கை' முடித்திருந்தாள். தான் கற்ற 'பேசிக் டிரெயினிங்படி நிற்பவள்போல், பாடம் நடத்தினாள்.

'பருத்தி எங்கே விளையும்' என்று ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு, அதை மாணவர்கள் வாயிலிருந்து பறிப்பதற்காகக் காத்திருந்தாள் பருத்தி, எந்த மண்ணில் ஏன் விளைகிறது என்று சொல்லி 'பூகோளத்தையும்' விளைந்த பருத்தியை எப்படிப் பிரித்து நூற்கிறார்கள் என்று கேட்டு 'விஞ்ஞானத்'தையும், இந்தப் பருத்தியானது பண்டைக் காலத்தில் எப்போது, எங்கெங்கே விளைவிக்கப்பட்டது, என்ன மாதிரி ஆடைகளாக அணியப்பட்டது என்பதைச் சொல்லி 'சரித்திரத்தையும்' பாரி மகளிர் கொடுத்த நீலச் சிற்றாடையை, ஔவையார் எதனுடன் ஒப்பிட்டார் என்று கேட்டு விளக்கி 'தமிழையும்' ஒரு ஏக்கரில் எவ்வளவு பருத்தி விளையும் என்று சொல்லி 'கணக்கையும்' பருத்தியின் ஆங்கில வார்த்தையைக் கேட்டு 'ஆங்கிலத்தையும்' சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பது அவள் திட்டம். திட்டத்தை அவள் செயல்படுத்த கேள்வியாக்கியபோது, ஒரு சிறுமி ''டீச்சர்...இவன் என் முதுகைக் கடிக்கான்'' என்றாள். அந்தச் சிறுமிக்குப் பின்னாலிருந்த பயலோ ''நான் கடிக்கல டீச்சர். முகத்த வேறுபக்கமா வைக்க இடமில்ல டீச்சர். இவளை 'கூன்' போட்டு உட்காராண்டாமுன்னு சொல்லுங்க டீச்சர்'' என்று டீச்சருக்கே

உபதேசம் செய்தான். மாரியம்மாள் தன் பருத்தி ஆடை முந்தானையைச் சரிப்படுத்திக் கொண்டு, பிள்ளைகளை எப்படி எப்படி இடம் மாற்றி உட்கார வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

'ஐந்தாறு' வகுப்புகளைத் தாண்டி, ஏழாவது வகுப்பு. ஐந்தாவது வகுப்பு ஆசிரியரான ஐம்பத்தைந்து வயது சீனிவாசன் "க ங ச எழுத்துக்களை பதினெட்டு தடவ எழுதுங்கடா" என்று உத்தரவிட்டார். பிள்ளைகள் 'சிலேட்டில்' எழுதிக்கொண்டிருந்தார்கள். ஓரிருவர் எழுதி முடித்துவிட்டு, எழுதியதை அவரிடம் காட்டிய போது, அவர் அந்த எழுத்துக்களை அழித்துவிட்டு, "இன்னொரு தடவ எழுதுங்கடா" என்றார். இதனால் வேகமாக எழுதிக் கொண்டிருந்த சில பயல்கள், மெதுவாக எழுதினார்கள். இன்னும் எழுதாமலேயே இருந்தவர்கள், அப்படியே இருந்தார்கள். கேட்டால் "இப்பத்தான் அழிச்சேன்" என்று சொல்லலாம். பாவம், சீனிவாசன் கவலை சீனிவாசனுக்கு. தங்கப்பாண்டி இன்னைக்கு சம்பளத்துல எவ்வளவு பிடிக்கப் போறானோ? வாயும் வயிறுமாக வந்து, இப்போது பிள்ளையும் கையுமாக உள்ள மகளை நாளைக்கு புருஷன் வீட்டுக்கு அனுப்பி வைக்கணும். அவனுக்கு சென்னையில் வேலை.

காரைக் கட்டிடத்தில் எட்டாவது வகுப்பும், அதன் செக்ஷன்களும், இன்னும் சில வகுப்புகளும் இருந்தன. 'ஏ' செக்ஷன் ஆசிரியை இந்திரா, மானேஜர் அறையில் தான் இருப்பாள். தலைமை ஆசிரியர் தங்கச்சாமிதான் அவளுக்கும் சேர்த்து 'அழ' வேண்டும். வெளியூர்க் காரரான இந்த ஐம்பது வயது ஆசாமியால் 'இடக்கு மடக்கு' செய்ய முடியாது என்றுதான், தங்கப்பாண்டி இவர் தலையில் ஆசிரியர்களை வைத்திருக்கிறார். வாயில்லா ஜீவன்.

பள்ளிக்கூடத்தில், மொத்தம் பதினாறு ஆசிரியர்கள்; பிள்ளைகள் வருகைப் பதிவேட்டின்படி முன்னூற்றுக்கு மேலே. வருவதோ...வேண்டாம். வெளியில் சொல்லப் படாது.

தலைமை ஆசிரியர் தங்கச்சாமிக்கு, அன்று கடுமையான கோபம். மானேஜர் சொல்படி, வெற்றிலைக் கட்டை வாங்கி வந்த அவசரத்தில் சாப்பாடு கொண்டுவர மறந்து விட்டார். தங்கப்பாண்டி வீட்டில் பலகாரங்கள் தின்னப்பட்டபோது, இவர், பள்ளிக்கு ஒரு காரியமாக ஓடிவந்துவிட்டு, வந்த வேகத்துலேயே திரும்பிப் போனார். எல்லாவற்றையும் தின்றுவிட்டு, பத்தாதது போல், அவரையே தின்பவர்கள்போல், பிரமுகர்கள் அவரைப் பார்த்தார்கள். ஆகையால் ''நன்றி ஒருவர்க்கு—தெரியாதவங்கெல்லாம் எழுந்திருங்கடா'' என்றார், கையில் பிரம்பைத் தயாராக வைத்துக் கொண்டு. மானேஜர் மகனோடு, மொத்தம் பத்துப்பேர் கம்பீரமாக எழுந்தார்கள்! தங்கசாமி தலையை தாழ்த்திக்கொண்டு பிரம்பை மேஜையில் வைத்தார். ஒருவனால் ஒன்பது பேருக்கு லாபம்!

ஆறாவது 'பீரியட்' முடிந்து ஏழாவது பீரியட் துவங்கியது. சில வகுப்புகளுக்கு 'விளையாட்டு 'பீரியட். ஒரு சில ஆசிரிய—ஆசிரியைகள் மைதானத்தில் பிள்ளை களை மேய்த்துக்கொண்டே, பேசிக்கொண்டு நின்றார்கள்.

தங்கப்பாண்டி வீட்டில், கோதுமை ரவையும், பஜ்ஜியும் செய்த ஆசிரியை பார்வதி, மாரியம்மாளின் கையைப் பிடித்துக் கொண்டே கேட்டாள்: ''என்ன மாரி, நாளையோட ஒன்னோட லீவ் வேகன்ஸி முடியப் போவுதே, என்ன செய்யப்போறே?''

''அதுதான் எனக்குத் தெரியல...''

''மானேஜர்கிட்ட கேட்டுப் பாத்தியா?''

''நான் கேட்டா அவரு இன்னொன்ன கேப்பாரு போலுக்கு...'' மாரியம்மாள், கண் கலங்க தலை கவிழ்ந்தாள். இருபது வயதிருக்கும். கறுப்புக்கு அழகுண்டு என்பதைக் காட்டுவதற்காகப் பிறந்தவள்போல் தோன்றினாள். கையில், கண்ணாடி வளையல்கள். காதுகளில் 'எட்டணா' கம்மல்கள்.

மைதானத்தில் தனியாக நின்ற ஆசிரியை இந்திரா போய்விட்டாள். முப்பது வயதுக்காரி. அவள், காது கேட்க முடியாத தூரத்திற்குப் போய்விட்டாள் என்பதை குதிகாலை நிமிர்த்தி எட்டிப் பார்த்து அனுமானித்துக் கொண்டே நான்காவது வகுப்பு ஆசிரியை கனகம் கிசுகிசுத்தாள். ''ஒனக்கு கொஞ்சங்கூட மூளையில்ல மாரி, இதோ போறாளே...இவள் சரியான கள்ளி...மேனேஜர் கிட்ட நீ சொன்னதைச் சொல்லப் போறாள் பாரு.''

''சொன்னால் சொல்லட்டும்!''

''நீ என்ன செய்யப் போற?''

''அதுதான் எனக்கும் தெரியலே. தம்பி தறுதலையா சுத்துறான். அப்பாவுக்கு உடம்பு முடியல. அம்மாவால வயல் வேலைக்குப் போக முடியல இந்த ரெண்டு மாசமா நான் அனுப்புன பணத்துல ஏதோ பட்டினி கிடக்காமயாவது இருக்காங்க...என்ன பண்ணுறதுன்னு புரியல.''

''மானேஜர் கிட்ட பக்குவமா கேட்டுப் பாரேன்.''

''பக்குவமான்னா என்ன அர்த்தம்?''

இதற்குள் 'க ங ச' எழுதச் சொன்ன முதிய ஆசிரியர் சீனிவாசனும் சத்தம் போட்டு பாடம் நடத்தும் வேலாயுதமும் அங்கே வந்ததால், ஆசிரியைகள் பேச்சை முடிக்க முடியாமலும், தொடர முடியாமலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். சீனிவாசன், தன்முகத்தைத் தானே பார்ப்பவர்போல் அண்ணாந்து பார்த்துக்கொண்டே

நின்றார். வேலாயுதம் மட்டும் மாரியம்மாளை 'ஒரு தினுசாக'ப் பார்த்தான். இதற்குள் பொன்னையா மகள் சரஸ்வதியும் அங்கே வந்துவிட்டாள். அவள் இடுப்பு நனைந்திருந்தது. ஆடையை பிழிந்துவிட்டுக் கொண்டாள்.

''என்னம்மா, மானேஜ்மென்ட் யாருக்குப் போச்சுது?''

''தங்கப்பாண்டி மாமாவுக்குத்தான். ஏலத்துல எடுத்தாரு முப்பதாயிரம் ரூபாய் ஏலம். சீ...நினைச்சிப் பார்க்கவே கேவலமா இருக்கு. ஏலம் போட்டாலும் பள்ளிக்கூடத்தயா ஏலம் போடுறது?''

''இதவிட இவனுவ பொண்டாட்டிவள ஏலம் போடலாம்''

''அதுக்குத்தான் நம்ம இந்திரா இருக்காளே! முப்ப தாயிரத்துக்கு ஏலத்துல எடுத்தவன், நம்மள எப்படில்லாம் ஏலம் போடப்போறானோ? இன்னைக்கு சம்பளம் தரப்போறானோ இல்லியோ? அடேயப்பா முப்பதாயிரம ரூபாய்க்கா போச்சுது?''

சரஸ்வதி, தான் கண்டுபிடித்ததைச் சொன்னாள். ''தங்கப்பாண்டி மாமா கவலப்படுறது மாதுரி தெரியல.''

கனகம், அதன் காரணத்தை விளக்கினாள். 'அவன் ஊரு தாலிய அறுக்கிறவன்; அவன் ஏன் கவலப்படணும்? நாமல்லா கவலப்படணும். இருநூறு பிள்ளிங்களுக்கு பகலுணவு போட றதா பேப்பர்ல காட்டுறான் கொடுக்கிற கோதுமையையும், எண்ணெயையும் வழி யில்யே வித்துப்புடறான். நம்ம சம்பளத்துல வேற கமிஷன் பிடிக்கான். மொத்தத்துல, ஏலத்துல எடுத்தவன் அவன்; கொடுக்கப் போறது நாம்.''

வேலாயுதம், பாடம் நடத்துவதுபோல் சத்தம் போட்டான். ''இன்னைக்கு சம்பளம் கிடைக்காதுன்னு கேள்விப்பட்டேன். இப்போ...நம்ம சண்முகம் இருந்திருந் தால் ரகளை நடக்குமே.''

பார்வதி, இடைமறித்தாள். ''அப்படில்லாம் நடக் காது. ஏன்னா...தங்கப்பாண்டி மகள் ஊமைப் பிசாச சண்முகததுக்குக் கொடுக்கப்போறதா ஒரு பேச்சு அடிப்படுத.''

சரஸ்வதி, இப்போது கொஞ்சம் 'இன்ட்ரஸ்ட்' காட்டினாள்: ''சண்முகம் ஸார் அவள விரும்புறாரா?'' என்று வாய்த்தவறாமல் கேட்டபோது, அனுபவஸ்தரான சீனிவாசன் லேசாகச் சிரித்துக் கொண்டார்.

மாரியம்மாள் ஆச்சரியத்தோடு கேட்டாள். ''அப்ப டின்னா இந்த ஸ்கூல்ல மிட்டேய் மீல்ஸ் திட்டம் இருக்கா?''

''மெள்ள பேசும்மா. இந்திராவுக்கு பாம்புக் காது. பேப்பர்ல சோறு பொங்கி, பேப்பர்லயே கஞ்சி காச்சி ஊத்தறாங்க. இந்த அநியாயத்த யாரு கேக்கப் போறாங் களோ?''

''ஓ! அதனாலதான் ஏலம் போட்டாங்களா?''

''ஆயிரந்தான் இருந்தாலும், ஒரு பள்ளிக்கூடத்த ஏலம் போடுறது என்கிறது சரஸ்வதி தேவியையே போடுறது மாதிரி...''

சீனிவாசன் விளக்கினார்: 'பணம் பண்ணணுமுன்னு ஒருவனுக்கு ஆசை வந்துட்டா, பெத்த தாயைக்கூட ஏலம் போடுவான். பள்ளிக்கூடம் எம்மாத்திரம்? இப்போ நாட்டோட போக்கே புரியல. மானேஜ்மென்ட் ஏலம்! எம்.பி.பி.எஸ். சீட்டு ஏலம்! மாப்பிள்ளை ஏலம்! இதனால் தான் டாக்டருங்க நோயாளிங்கள ஏலம் போட றாங்க.

அரசியல்வாதிங்க நாட்டை ஏலம் போடறாங்க. எல்லாமே ஏலமயமாயிட்டு. நம்ம நாட்டுப் பாடலுல 'ஏலேலோ ஐலஸா'ன்னு ஒரு பாட்டுவரும் பாருங்க... அந்தப் பாட்டை எல்லோரும் வேற மாதிரி புரிஞ்சிக் கிட்டது மாதிரி தோணுது. வசதியுள்ளவங்கெல்லாம், வசதியப் பெருக்கிக்க ஏலம் போடுறதுனால, ஏழைங்க தங்களோட வயித்த ஏலம் போட வேண்டிய காலமா போயிட்டுது. இந்தப் பொன்னையா இப்பத்தான் வந்து புலம்பிட்டுப் போறான். நாலு மணிநேரம் விறகு வெட்டுனானாம். மூணுபைசாகூடக் கொடுக்கலியாம். சரஸ்வதி தினமும் மாட்டுத் தண்ணி எடுத்து ஊத்துறாளாம். ஒரு ஏழைப் பொண்ணுக்கு வேலை போட்டு கொடுத்ததுக்காக இப்படியா கொத்தடிமையா நடத்துறது? சரஸ்வதி... நான் ஒன்னோட வயசுல பெரியவன். என் மகளவிட வயசில சின்னவள் நீ. நான் சொல்லுறதை தப்பா நினைக்க மாட்டியே?''

''உங்க வாயில தப்பித் தவறி தப்பு வந்தாக்கூட அந்த தப்புகூட தன்னைச் சரிக்கட்டிக்கிட்டு நல்லதா வரும். சும்மாச் சொல்லுங்க.''

''எப்படிச் சொல்றதுன்னு புரியல. சரி...எப்படியும் சொல்லித்தான் ஆகணும். ஒப்பன் வேணுமுன்னா விறகு கீறட்டும் ஒம்மா வேணுமுன்னா கோதுமை புடைக் கட்டும ஒன் தம்பி வேணுமுன்னா மாட்டைக் கட்டட்டும். ஆனால் நீ தங்கப்பாண்டி வீட்டுக்குப் போகக்கூடாது. ஊர்ல நாலுபேரு நாலு விதமாச் சொல்லுதாங்க.''

''என்ன சார் நீங்க தராதரம் தெரியாம...அவரு எனக்கு அப்பா மாதிரி...''

''தராதரம் தெரிஞ்சதாலத்தான் சொல்லுறேன். இன்னொருத்தின்னா சொல்லமாட்டேன். தங்கப் பாண்டிய...நீ அப்பா மாதிரி நினைக்கலாம். அதனாலயே

அவன் உன்னை மகள் மாதிரி நினைக்கணுமுன்னு எதிர்பார்க்கக் கூடாது. அப்படியே அவன் நினைச்சாலும் ஊரு நம்பாது. இந்தப் பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கிற எல்லா வாத்திச்சிகளையும் ஒரு மாதிரி பார்க்கிற ஊர்க்காரனுவ...அவன் வீட்டுக்குப் போற ஒன்னை, வாயில போடாம விட்டு வைப்பாங்களா?''

பார்வதி, மானேஜர் வீட்டு வாணலியில் கொதிக்க வைத்த எண்ணெய் மாதிரி கொதித்தாள். ''புறம் பேசற துக்கு ஊர்க்காரனுவளுக்கு என்ன யோக்கியதை இருக்கு? எவ்வளவோ அநியாயம் நடக்கு... அதப் பாத்துட்டு இருக்கிற இவங்களுக்கு நல்ல வார்த்தை பேசறதுக்குக்கூட யோக்கியத கிடையாது.''

''நான்தான் சொல்லிட்டேனே காலத்தோட கோளா றுன்னு. கழுதய விடு. ஊர்க்காரங்களுக்கு யோக்கியதை இருக்கோ இல்லியோ, அவுங்க பேசுற வார்த்தைக்கு சரஸ்வதியோட கல்யாணத்த நிறுத்தற சக்தி இருக்கு. அப்படியே அவளுக்குக் கல்யாணம் நடந்துட்டாலும், அவள் புருஷன் அவளை தள்ளி வைக்கதுக்கு சந்தர்ப்பம் கொடுக்கிற சக்தி அவங்க வாயில இருக்கு நான் சொல்றத அவள் கேட்டாக் கேட்கட்டும்! விட்டா விடட்டும்.''

இதற்குள் இந்திரா அங்கே வந்துவிட்டாள். உடம்பு முழுவதையும் குலுக்காமல், தனி நடையாக நடப்பவள். மாநிறம் என்றாலும், நல்ல முகவெட்டு. சினிமாக்காரர் கள் எப்படி இவளை விட்டு வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

சீனிவாசன் இப்போது வேறுவிதமான வாய்பாட்டுக்கு வந்தார். ''நமக்கு நல்ல காலம், மானேஜ்மென்ட் ஆண்டவன் அருளால், நம்ம தங்கப்பாண்டிக்கு வந்துட்டு. ராஜலிங்கத்துக்குப் போயிருந்தா பள்ளிக்கூடத்துல கழுத மேயும். அல்லி ஆட்சிதான் நடக்கும். மேரிபுஷ்பம் அந்த

ரெண்டு வார்த்தைக்கும் எதிர் அர்த்தமுள்ளவள். தங்கப் பாண்டி வழி வருமா? பாவம், முப்பதாயிரம் ரூபாய்க்கு என்ன பண்ணப்போறானோ? கடவுள்தான் வழி காட்டணும்!''

சரஸ்வதிக்கு, சற்று நேரத்திற்கு முன்புவரை, தக்க சமயத்தில் வழிகாட்டியவர்போலத் தோன்றிய அந்தக் கிழவர்மீது இப்போது வெறுப்பு ஏற்பட்டது. 'ஒரே நாக்கு...ஒரே சமயத்துல எப்படில்லாம் பேசுது. இந்தக் கிழவனவிட, அந்த இந்திரா எவ்வளவோ மேலு. இவரு, என்னைப்பற்றி ஊர்ல தப்பா பேசுறதா சொன்னதுகூட தப்பாத்தான் இருக்கும்.'

ஹரிஜனப் பெண் மாரியம்மாள் யோசித்தாள். இந்திராவிடம் மன்றாடி வேலையை மேற்கொண்டு தொடர முடியுமா என்று நினைத்தாள். பிறகு 'தேவடியா கிட்ட யாசகம் கேட்கிறது, தேவடியாளா மாறுறதுக்கு 'பேஸிக்' பயிற்சி பெறுவது மாதிரி' என்று நினைத்துக் கொண்டவள்போல், இந்திராவை அலட்சியமாகப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

''எப்படியோ ஒரு வழியா முடிஞ்சுது...'' என்ற குரலைக் கேட்டதும், எல்லோரும் நிமிர்ந்து பார்த்தார்கள் தங்கப்பாண்டி வருவது தெரிந்தது. ஊர்க்காரர் ஓரிருவரின் கேள்விக்கு, அவர்களை லட்சியப்படுத்தாமலே பதிலளித்துக் கொண்டு, காரைக் கட்டிடத்திற்குள் அவர் நுழைந்தபோது, இந்திரா தவிர, மீதி எல்லோரும் அலறி அடித்துக்கொண்டு, விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் பக்கமாகப் போனார்கள்.

தங்கப்பாண்டி, தனது நிர்வாக அறைக்குள் வந்து சுழல் நாற்காலியில் உட்கார்ந்து லேசாக ஆடிக் கொண்டார். அந்த அறையின் வாசல்பக்கம் தயாராக இருந்த

பதினெட்டு வயதுப் பெருமாள், மின்சார விசிறியை தட்டிவிட்டான். மானேஜரின் 'லதர் பேக்கை' பௌவிய மாக வாங்கி, ரேக்கில் வைத்தான். இவன், அந்தப் பள்ளிக் கூடத்தில் 'பார்ட் டைம்' தையல் ஆசிரியன்; ஒன்பதாம் வகுப்பு பெயில்; சட்டையில் காசா போடத் தெரிந்தவன். 'லதர் பேக்கை' மானேஜர், தன்னிடம் கொடுத்ததில் இருந்து, அந்தப் பைக்குள் பணம் இல்லை என்பதும். ஆசிரியர்களுக்கு பைகள் கனக்காது என்பதையும் கணக்கெடுத்துக் கொண்டான். உடனே ஓடிப்போய் சீனிவாச ஆசிரியரிடம் விண்டுரைக்க நினைத்தவனைப் பார்த்து 'ஒரு தலவலி மாத்திர வாங்கியாடா' என்றார் தங்கப்பாண்டி.

தலைமை ஆசிரியர் தங்கச்சாமி, தங்கப்பாண்டிக்கு எதிரே வந்து நின்று, அவர் கண்களை மறைக்கும்படி, அவர் கண்ணளவிற்குக் குனிந்து, கைகளைத் தூக்கி கும்பிடு போட்டுவிட்டு நின்றார். மானேஜர் உட்காரச் சொல்லவில்லை. தலைமைக்கு உட்காரப் பயம். ஒரு தடவை இப்படி உட்காரப் போனபோது, ''இப்ப என்ன ராமாயணமா நடத்தப் போறோம். அப்படியே நின்று விஷயத்தக் கேட்டுப்புட்டு போகாம...'' என்று 'கட் அண்ட் ரைட்டாக' தங்கப்பாண்டி சொல்லி விட்டார். தலைமை ஆசிரியர் மானி...ஆகையால் உட்கார வில்லை.

வீட்டில் பரமசாது மாதிரி, பதுங்கி உட்கார்ந்து இருந்த தங்கப்பாண்டி இப்போது சிங்கம் மாதிரி நிமிர்ந்து பார்த்தார். அது என்னமோ தெரியவில்லை...இந்த சுழல் நாற்காலியில் உட்கார்ந்ததும், அதுவும் இந்த தலைமை ஆசிரியரைப் பார்த்ததும் மானேஜருக்கு ஒரு மிடுக்கு வந்து விடும். போலீஸ்காரர் யூனிபாரத்தை போட்டதும் துள்ளுவாரே அப்படி. பேப்பர் வெயிட்டை எடுத்து, தன்

கன்னத்தில் அழுத்திக் கொண்டே, தங்கப்பாண்டி தலைவலி மாத்திரையை எதிர்பார்த்து இருந்தபோது, தலைமை ஆசிரியர் இழுத்தார்:

''சம்பளம் எப்டி...?''

''எல்லாரும் கையெழுத்துப் போட்டுட்டாங்களா?''

''இனுமதான்.''

'மொதல்ல அதைச் செய்யுங்க சார்.''

ஏற்கெனவே ஸ்டாம்ப் வைத்து, எழுதப்பட்டிருந்த சம்பளப் பட்டியலை எடுத்து தலைமை ஆசிரியர் புரட்டிப் பார்த்தபோது, தையல் ஆசிரியப் பையன் பெருமாள், தலைவலி மாத்திரையோடு வந்துவிட்டான். தலைமை ஆசிரியர், அந்த மாத்திரையை வாங்கிக்கொண்டு அவனிடம் சம்பளப் பட்டியல் ரிஜிஸ்டரை நீட்டினார்... வாயால் சொல்லவேண்டிய அவசியமில்லாதபடி அவன் ஆசிரியர்களிடம் கையெழுத்து வாங்கப் போனபோது, தலைமை ஆசிரியர் தங்கசாமி, பிளாஸ்கில் இருந்த காபியை கண்ணாடி டம்ளருக்குக் கொண்டு வந்துவிட்டு, அதை மாத்திரையோடு மானேஜரிடம் நீட்டினார். தங்கப் பாண்டி முகத்தைச் சுழித்துக்கொண்டு, மாத்திரையையும் காப்பியையும் விழுங்கிவிட்டு, கடிகாரத்தைச் சுற்றிய தங்கச் செயினில் தெரித்த காபி துளிகளை, மேஜையில் கிடந்த டஸ்டரால் துடைத்துக் கொண்டிருந்தபோது, கந்தசாமிக் கிழவர் செருமிக்கொண்டே வந்தார்.

தங்கப்பாண்டி, தலைமை ஆசிரியரைப் பார்த்து ''நோட்ஸ் ஆப் லெசன்ஸை எல்லாம் போய் செக்கப் பண்ணுங்க ஸார்'' என்றதும், அதன் நோட்டத்தைப் புரிந்துகொண்ட தலைமை ஆசிரியர் வெளியேறினார்.

கந்தசாமிக் கிழவர், எதிர் நாற்காலியில் உட்காரப் போனார். தங்கப்பாண்டி, அவரை 'சைட்' நாற்காலியில்

உட்காரச் சொன்னார். முக்கியமான புள்ளிகளும், புள்ளி போட வேண்டிய முக்கிய ஆசாமிகளும் உட்காரும் நாற்காலி அது.

கிழவர் செருமிக்கொண்டே பேசினார். ''எனக்கு இன்னும் மனசு கேக்க மாட்டக்குப்பா... நீயும் மானேஜ் மெண்டை தரமுடியாதுன்னு ஒத்தக் காலுலயே நின்னுருக்கணும். நான் பாட்டுக்கு ஒனக்காவ... கரடி மாதிரி கத்துறேன். இந்த மணியமோ, கர்ணமோ ஒப்புக்காவ கூட சப்போர்ட் பண்ணல பாரு... எத்தன தடவ ஒன் கிட்ட கோதும மாவ வாங்கியிருக்காங்க. அவங்க பொண்ணுங்களுக்கும் வேல போட்டு வேற கொடுத்திருக்கே. ஒரு நன்றி இல்ல பாரு... இந்தமாதிரி ஆளுங்களுக்குத்தான் நீ உதவுவ.''

''நீரு என்ன கேட்டு, நான் என்ன செய்யல...? நேத்துகூட அத்தகிட்ட மூணுபடி கோதும மாவு...''

''நான் அதச் சொல்லலடே... என் தங்கச்சி மவனுக்கு ஒரு வேல போட்டு கொடுடான்னு கரடியா கத்துறேன். ஆறு மாசமா என் தங்கச்சி வீட்டுக்கு நடையா நடக்கா. நீ நினைச்சா முடியாதா? சவத்துப் பயலுக்கு வாத்தியார் வேல கிடச்சிட்டா என் மவள கட்டி வச்சிருவோமில்ல ''

''கொஞ்சம் பொறும். இப்போதைக்கு வேல எதுவும் காலியா இல்ல. மூணு வாத்திச்சிங்க கல்யாணம் ஆகாம இருக்காளுவ. எவளாவது ஒருத்திக்குக் கல்யாணம் ஆவட்டும். காரியத்த முடிச்சிடலாம்.''

''எவளுக்குக் கல்யாணம் முடிஞ்சுது? இந்த பறப்பய மொவள வேலையில சேர்த்த...''

தங்கப்பாண்டிக்குக் கோபம் வந்தது. கந்தசாமிக் கிழவரை, மானசிகமாக வாசலுக்கு வெளியே கழுத்தைப் பிடித்துத் தள்ளினார். மானசிகமாகத்தான்! என்ன

பண்றது? கெஜட்டட் ஆபீஸரா இருக்கிற தம்பி ராஜலிங்கம் இனிமேல் உதவுவது சந்தேகந்தான். பள்ளிக்கூடத்துல எதாவது பிரச்னை வந்தால் இந்தக் கிழவன் தேவை. இவனோட கொழுந்தியா மகன் இன்னொரு மாவட்டத்தில் கல்வி அதிகாரியாய் இருக்கான்.

கந்தசாமிக் கிழவர், ''என்னடே பேசமாட்டக்கே. அவனும் மெட்ராஸ்ல வேல பாத்துட்டு, வேல பிடிக்கலேன்னு வந்துட்டான். ஒரு வருஷமா ஊரச் சுத்துறான். நீ ஒரு வேல போட்டுக் கொடுத்தால், என் மகளை ஒப்படைச்சிடுவேன். ஒனக்கு என்னடான்னா, அந்த பறப்பய மவள், உசத்தியாப் போயிட்டு...'' என்றார்.

தங்கப்பாண்டி, சற்று காரமாகவே பதிலளித்தார். ''விஷயம் தெரியாமப் பேசப்படாது மாமா! என்னோட சரிக்கு சமமா உட்கார்ந்திட்டால் ஒமக்கு விஷயம் தெரிஞ்சதா ஆயிடாது.''

''சரி... தெரியாதவனுக்குத்தான் சொல்லிக் கொடேன்.''

''அப்படிக் கேளும்... இப்போ சர்க்கார்ல ஒரு ரூல் போட்டிருக்காங்க. அதன்படி ஒரு பள்ளிக்கூடத்துல, ஒரு வேல காலியிருந்தால், முதல்ல ஹரிஜனங்கள்ல ஒருத்தருக்கு அந்த வேலய கொடுக்கணும். வேற யாருக்கும் கொடுக்கக் கூடாது. ரெண்டாவதா வேலை வந்தால் பேக்வேர்ட்-. அதாவது நம்மள மாதுரி பிற்பட்ட ஜாதியச் சேர்ந்த ஒருவருக்குக் கொடுக்கணும். மூணாவதா வேல வந்தால், எந்தச் சாதிய சேர்ந்தவருக்கும் தகுதிப்படி வேல கொடுக்கலாம்.''

''இழவுல இவ்வளவு சிக்கல் இருக்கா?''

''கரெக்டா சொல்லிட்டீங்க... இது கிட்டத்தட்ட இழவு மாதிரிதான். இருந்தாலும், சர்க்கார் கோலத்துல பாஞ்சால், நாங்க குதிருக்குள்ள பாயிறவங்க.''

''புரியும்படியாச் சொல்லு.''

''அதாவது, முதல் வேலய ஹரிஜனத்துக்குக் கொடுக்கணுமுன்னு சட்டம் சொல்லுது. இதுக்காக என்ன பண்ணுறோம் தெரியுமா? யாரையாவது ஒரு ஆசிரியரை ரெண்டுமாசம் லீவுல போகச் சொல்லுறது. இருபத்தோறு நாளைக்கு மேல ஒருத்தர் லீவுல போனாலே, இன்னொரு வாத்தியார போடலாமுன்னு ரூல் இருக்கு. லீவுல போற வாத்தியாருக்குப் பதிலா ஹரிஜன வாத்தியாரப் போடுவோம். லீவுல போன வாத்தியார் டூட்டில சேர்ந்ததும் ஒரு ஹரிஜன ஆசாமியோட வேல ரத்தாயிடும். அப்புறம் யாருக்காவது கல்யாணம் நடந்தோ இல்ல கருமாந்திரம் நடந்தோ ஒரு வேகன்ஸி வருதுன்னு வச்சுக்குவோம், அதுல பிற்படுத்தப்பட்ட ஜாதில இருந்து ஒருவர போட்டுடலாம். இப்ப எல்லாருமே இப்பிடி லீவ் வேகன்ஸீல ஹரிஜன போட்டுட்டு, பெர்மணன்ட் வேகன்ஸீல, வேண்டிய ஆளப் போடுறாங்க. கவர்மெண்ட் எங்கள ஒண்ணும் ஆட்ட முடியாது. சர்க்காருக்கும் இது தெரியும். அவங்க அடிக்கது மாதிரி அடிக்கிறாங்க... நாங்க அழுகிறது மாதிரி அழுகிறோம்... அவ்வளவுதான்.''

கந்தசாமிக் கிழவர் கிட்டத்தட்ட எம்பி எம்பிக் குதித்துப் பேசினார். ''தங்கப்பாண்டி... நீ எலெக்ஷன்ல நிற்க வேண்டிய ஆளுப்பா. இந்த பரட்டத்தலைக்குள்ள எவ்வளவு பெரிய மூளப்பா? நான் சரியான கூமுட்டை... இது தெரியாம ஒன்னத் தப்பா நினைச்சுட்டேன். சரி... இந்தப் பறப்பய மவளுக்கு வேல எப்ப முடியுது?''

''இன்னையோட சரி.''

''அப்போ நம்ம பயலுக்கு?''

''கொஞ்சம் பொறும். இந்த சரஸ்வதிப் பொண்ணுக்கு ஒரு மாப்பிள்ள பார்த்திருக்கேன். மாப்பிள்ளைக்கு செங்கல்பட்டு ஜில்லாவுல வேலை. அநேகமாக குதிரும்.

அவளுக்குக் கல்யாணம் செய்து, புருஷனோட அனுப்பி வச்சிடலாம். அந்த இடத்துக்கு நம்ம பயலைப் போட்டுட லாம்.''

''ஆண்டவன் புண்ணியத்துல நீதான் அந்தப் பொண்ண கரையேத்தணும். பாவம் ஏழப் பொண்ணு. கல்யாணம் இந்த வைகாசில முடிஞ்சிடுமா?''

''அநேகமா பழந்தான். அப்புறம் ஒம்ம பயல் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்ல பதிஞ்சிருக்கானா?''

''அப்படித்தான் சொன்னான்.''

''அப்படின்னா கவல இல்ல. இருந்தாலும் ஒரு சிக்கல். அவன் பேரு லிஸ்ட்ல இல்லாட்டா கஷ்டம்.''

''இல்லாட்டா ஒண்ணும் பண்ண முடியாதோ?''

''பண்ணலாம். எம்ப்ளாய்மெண்ட் லிஸ்ட்படி வந்த வங்க சரியில்லன்னு, லிஸ்ட திருப்பி அனுப்பலாம். இப்படி ரெண்டு மூணு தடவ புதுசு புதுசா லிஸ்ட் வாங்கி, நம்ம பயல உள்ள தள்ளிடலாம். ஆனால் கொஞ்சம் செலவாகும்.''

''ஏண்டே மூடி மூடிப் பேசுற? ஒன் ரேட்டுத்தான் எவ்வளவு?''

''இந்த சர்க்காரே சுத்த மோசம் மாமா. கிறிஸ்டியன் பள்ளிக்கூடம் மைனாரிட்டிங்க நடத்துற ஸ்கூலாம். அத னால அதுக்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீசுக்கு போக வேண் டாமாம் அவங்களே யார வேணும்னாலும் போட்டுக்க லாமாம். ஆனால் நான் போகணுமாம் இதனால என்ன ஆகுது தெரியுமா? அவங்க இஷ்டப்படி யார வேணும் னாலும் போட்டுக்கிடலாம். அதுக்கு பத்தாயிரம் ரூபாய் வாங்குறாங்க. நான் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ சரிகட்ட, நாயா அலையுறேன். இவ்வளவுக்கும் ஐயாயிரந்தான் வாங்குறேன்.''

கந்தசாமிக் கிழவரும், தங்கப்பாண்டியும் சம்பந்தப் பட்ட விவகாரத்தைப் பேசிவிட்டு, சம்பந்தமில்லாத விவகாரங்களைப் பேசப்போனபோது, மணி நாலரை. நான்கு இருபதுக்கு மணியடித்து, பிள்ளைகள் போய்விட்டார்கள். ஆசிரிய—ஆசிரியைகள் காத்து இருந்தார்கள். ஒரு சில ஆசிரியர்கள் இடுக்கில் நின்றபடியே உள்ளே, எட்டிப் பார்த்தார்கள். சிலர் தண்ணீர் குடிக்க வருகிற சாக்கில் அந்தப் பக்கமாக வந்து, தலையைக் காட்டினார்கள். இந்திரா வாசல் பக்கமாக வந்து. தங்கப்பாண்டியை விநோதமாகப் பார்த்தாள். உடனே அவர் "சரி மாமா, மீதி விஷயத்தை நாளைக்குப் பேசிக்கிடலாம்" என்று சொல்லிவிட்டு நாற்காலியை விட்டு எழுந்தாலும், கிழவர் எழவில்லை. ஆகையால் தங்கப்பாண்டியே வெளியே வந்தார்.

இடுக்குக்குள் நின்றுகொண்டிருந்த ஆசிரியர்களைப் பார்த்து நேராகப் போனார். அவர்கள் சிலிர்த்து நின்றார்கள். தங்களைக் கூப்பிடாமல், அவரே வந்ததன் ஆபத்தைப் புரிந்துகொண்டார்கள்.

தங்கப்பாண்டி, அவர்களை சிங்கம்போலப் பார்த்துவிட்டு கம்பீரமாகப் பேசினார்: "இன்னும் ஒரு வாரம் பொறுத்துக்கங்க. அடுத்தவாரம் தந்துடுறேன்."

சொல்லிவிட்டு திரும்பப்போன தங்கப்பாண்டியின் காதுகளில் விழும்படி, சீனிவாசன் பௌவியமாகக் கேட்டார்:

"நாளைக்கி என் மகள அனுப்பணும். மாரியம்மாள் வேற நாளைக்கி ஊருக்குப் போவணும். இல்லன்னா ஒங்ககிட்ட இருந்தா என்ன எங்ககிட்ட இருந்தா என்ன? பாதிப் பணத்தையாவது..."

தங்கப்பாண்டி. அவர்களை தன் தம்பி ராஜலிங்கத்தின் கூறுகளாக நினைத்துக்கொண்டு, கூர்மையாகப் பேசினார்: "ஒரு வாரம் பொறுத்துக்கப்படாதா?

ஊரவிட்டு ஓடியா போறேன்? ஒங்களுக்கெல்லாம் ராஜலிங்கம்தான் லாயக்கு. கசக்கிப் பிழிஞ்சி எடுத்திருப்பான். ஏதோ ஒரே குடும்பமா இருந்து தொலைச்சிட்டமேன்னு, முப்பதாயிரம் ரூபாய் ஏலத்துல எடுத்திருக்கேன். அவசரத்துக்கு உங்க பணத்தை கொடுத்திட்டேன் ஒரு வாரம் பொறுக்கப்படாதா? நியாயமாப் பாத்தால், இந்த மாசம் ஒங்களுக்கு சம்பளமே கொடுக்கப்படாது. ஏன்னா, என்னோட சேர்த்து, நீங்களும் ராஜலிங்கத்துகிட்ட சிக்காம இருக்கதுக்கு முப்பதாயிரம் ரூபாய் செலவளிச்சிருக்கேன். இந்தக் காலத்துல நல்லது செய்தாக்கூட கெட்டதாத்தான் முடியுது. சரி ஒரு வாரம் பொறுத்துக்கங்க. சீனிவாசன் ஸார், என் பசங்களுக்கு ஸ்பெஷல் கோச்சிங் கொடுத்திட்டுப் போங்க.''

தங்கப்பாண்டி போய்விட்டார். இந்திரா இருந்ததால் எதுவும் பேச முடியாமல் அங்கே இருந்த ஆசிரியாகள் அத்தனை பேரும் விக்கித்து நின்றார்கள். இறுதியில் ஒவ்வொருவராக நகர்வது தெரியாமலே நகர்ந்தார்கள்.

சீனிவாசன் மட்டும், அடைபட்டுக் கிடந்த நான்காவது வகுப்பு மாணவர்களிடம் வந்தார். 'வீட்டுக்கு எந்த முகத்தோடு போவது? உண்பதற்கே நெல் இல்லை, விற்பதற்கு ஏது? மருமகப் பிள்ளையோ கறார் பேர்வழி. நாளைக்கு எப்படியும் மகளை அனுப்பியாக வேண்டும். சென்னைக்கு டிக்கட் முப்பது ரூபாய். கூடப் போகும் மனைவிக்கு முப்பது. அவள் திரும்பி வர முப்பது. செலவுக்கு ஐம்பது. பேரனுக்கு கால் பவுன் மோதிரம் போட இருநூறு மொத்தம்...''

சீனிவாசன் சுக்கு நூறாக உடைந்து போய், வீட்டை விட, வகுப்பறையே தேவலை என்பதுபோல் பையன்களிடம் போனார். இந்தப் பிள்ளைகளுக்கு 'அபிஷியல்' ஆசிரியர் தங்கப்பாண்டி. அவர் வகுப்புக்கு வநததே கிடையாது. ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு வாரம் முழுவதும் சாயங்காலம் குறைந்தது ஒரு மணி நேரமாவது இவர்

களுக்கு ஸ்பெஷல் 'கோச்சிங்' நடத்த வேண்டும். இதே போல் இவர் மச்சான், கோவிந்தன் வகுப்புக்கும். சில ஆசிரியர்கள் ஆசிரியப் பணி அல்லாத தங்கப்பாண்டியின் காரியங்களுக்கு அனுப்பப்படும்போதும், அவர்கள் வகுப்பு களுக்கும் 'கோச்சிங்' எடுக்க வேண்டும்.

சீனிவாசன், ஒரு கழித்தல் கணக்கைப் போட்டுவிட்டு வகுப்பதிரக் கேட்டார்.

''சைபருக்கு ஒன்பது போகுமாடா?''

''போகாது ஸார்...''

''போகாட்டா என்ன பண்ணணும்?''

''இர்ண்டாவது ஸ்தானத்துல கடன் கேட்கணும்.''

''எப்படிக் கேட்கணும்? புண்ணாக்குக் கழுதைகளா! சொல்லிக் கொடுத்தது மறந்துபோச்சா? சொல்லுங்கடா. எப்படிச் சொல்லணும்? ஓ...இரண்டாவது...''

பிள்ளைகள் திருப்பிச் சொன்னார்கள்: ''ஏ...இரண் டாவது ஸ்தானத்துல இருக்கிற இரண்டே! ஒரு பத்தை கடன் தா...ஒரு பத்தை கடன் தா...''

''என்ன தா...?''

''ஒரு பத்தைக் கடன் தா...ஒரு பத்தைக் கடன் தா...''

சீனிவாசனுக்கு திடீரென்று கோபம் வந்தது.

''ஏ கடன்காரப் பசங்களா! இனிமேல் கடன் தா, கடன்தான்னு சொல்லப்படாது. நான் சொல்றது மாதிரி சொல்லணும். நல்லா கவனிங்க. ஏ இரண்டாவது ஸ்தானத்துல இருக்கிற இரண்டே...ஒன்கிட்ட இருந்து, ஒரு பத்தைப் பறிக்கப் போறேன். எதைப் பறிக்கப் போறேன்? சொல்லுங்கடா...''

சிறுவர்-சிறுமியர் உற்சாகமாகக் கத்தினார்கள். ''ஒரு பத்தைப் பறிக்கப் போறேன்...ஒரு பத்தைப் பறிக்கப் போறேன்...''

# 3

பஞ்சாயத்துக் கிணற்றின் வட்டமான சுவரைச் சுற்றி ஒரே பெண்கள் கூட்டம். முப்பதடி ஆழமுள்ள அந்த கிணற்றுக்குள், நான்கடி உயரத்திற்கு தண்ணீர் நின்றது. பஞ்சாயத்து போட்ட குழாய்கள், வழக்கம் போல் பழுதடைந்து இருந்ததால், மின்விளக்கு வீட்டில் மெழுகுவர்த்தி இருப்பதுபோல், 'தோண்டிப்பட்டை' வைததிருந்த பெண்கள் கூட்டம், கிணற்றை மொய்த்தது. கிட்டத்தட்ட இருபது பெண்கள், உடலின் பாதிப் பகுதியை, சுவரோடு சேர்த்துக் கவிழ்த்து, கயிற்றை கிணத்துக்குள் விட்டு நீர் மொண்டு கொண்டிருந்தார்கள். எல்லாப் பெண்களும் இப்படி ஒரே சமயத்தில் குனிந்தது, தாமரை மலர்போல் தோன்றியது. இதற்குள் சில சுறுசுறுப்பான இளம் பெண்கள், சீக்கிரமாக நீரை மொண்டு, முதுகை நிமிர்த்தி, கிணற்றுச் சுவரை ஒட்டி யிருந்த பானைகளில் நீரை ஊற்றிவிட்டு, மீண்டும் குனிவதும், அவர்கள் இப்படி குனியும்போது, சில நடுத்தரப் பெண்கள் நிமிர்வதையும் பார்த்தால், ஒரு ரம்மியான கும்மியாட்டம் அங்கே நடப்பதுபோல் தோன்றியது. சில 'நாவிதப் பெண்களும்' சலவைத் தொழிலாளப் பெண்களும், தத்தம் வெற்றுக் குடங்களைக் காட்டிக் கொண்டு, ''சீக்கிரமா தண்ணி ஊத்துங்கம்மா'' என்று குடங்களுக்கருகே இருந்த பெண்களைக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். இது பஞ்சாயத்துக் கிணறு தான் என்றாலும், இங்கே அந்தப் பெண்கள் 'தோண்டிப் பட்டையைப்' போட்டு நீரிறைக்க முடியாது.

சரஸ்வதி பால் பவுடர் டின்னை வைத்து, தண்ணீர் மொண்டு கொண்டிருந்தாள். மானேஜர் வீட்டு மாட்டுத் தொட்டியில் இதுவரை பத்துக் குடங்களை ஊற்றியாகி விட்டது. இன்னும் பத்துக் குடங்கள் ஊற்றியாக வேண்டும். மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும், வீட்டுக்குப் போய் தலையைக் காட்டிவிட்டு, மானேஜர் வீட்டிற்குப் போய் குடங்களை எடுத்துக்கொண்டு வந்து விட்டாள். பள்ளிக்கூடத்தில் கத்திக் கத்தி தொண்டை வலித்தது. இப்போது அந்த வலியை, வளைந்து வளைந்து நிமிர்ந்ததால் ஏற்பட்ட முதுகுவலி விழுங்கியது. அருகே இருந்த பெண்ணிடம் முதுகுவலி தீரும்வரை பேசுவது என்று, எதையோ அவள் பேசிக் கொண்டிருந்தபோது, கீழத் தெரு சுப்பையா வீட்டில் நடந்த 'சடங்குக்குப்' போய்க் கொண்டிருந்த மானேஜரின் மனைவி ராசம்மா, ''ஏய் சரசு! சீக்கிரமா வேலய முடியேண்டி. எவ்வளவு நேரமா தண்ணி எடுக்கப்போறே? கொஞ்சம்கூட இது இல்லையே'' என்று நின்று நிதானமாகச் சொல்லிவிட்டு நடந்தாள். பிறகு திரும்பி நடந்து வந்து ''ஏய் மங்காத்தா! ஒன்னு கடனை அடைக்கணும், இல்லன்னா வட்டி கட்டணும். ரெண்டும் பண்ணாட்டா எப்டி? சோறுதான திங்கற?'' என்று சொல்லிவிட்டுப் போனாள். மங்காத்தா திரும்பிப்போன ராசம்மாவின் முதுகைக் குத்துவதுபோல் கையை ஓங்கிக் கொண்டாள்.

சரஸ்வதிக்கு என்னவோ போலிருந்தது. பெற்ற தாய் கூட நான்குபேர் முன்னிலையில் இப்படிப் பேசமாட்டாள். பக்கத்தில் நின்ற ஒரு பெண், அவளை உசுப்பினாள். எல்லாப் பெண்களும், சரஸ்வதியை ஒட்டுமொத்தமாகப் பார்த்தார்கள். மங்காத்தாவை, ராசம்மா இப்படிக் கேட்பது வழக்கம். அவள் இப்போது 'அசிங்கமாக'த் திட்டினாள். கேட்பவர்களையும் திட்டுவாள். ஆகையால் அவளை விட்டுவிட்டு, சரஸ்வதியைச் சாடினார்கள்!

''ஏன் சரசு, வாத்தி வேலயில் முந்நூறு ரூபாயாவது கிடைக்கும். இன்னுமா கூலிக்கு தண்ணி எடுக்கணும்?''

''இவள் கூலிக்கு தண்ணி பிடிக்கலடி. அந்தப் பள்ளிக் கூடத்தில வேல கிடைச்சதுக்கு லஞ்சமா தண்ணி எடுக்காள். இவளால ஐயாயிரம் கொடுக்க முடியாது பாரு. அத...தண்ணியா தீர்த்துக் கட்டுறாள்.''

''சர்க்கார் பணத்தத்தான் சம்பளமா வாங்குகிறாள். இதுக்கு எதுக்கு தண்ணி எடுக்கணும்?''

''ராசம்மாவோட திமிரப் பாரேன்? நாம 'மெய்க் கணுமுன்னு'...இவள அதட்டிட்டுப் போறாள். அதாவது படிச்ச பெண்ணு தன்கிட்ட வேலக்காரியா இருக்கத காட்டிக்கிறாளாம்.''

''எல்லாம் இவளால. இவள் எதுக்கு இன்னும் பழைய வேலைக்காரியா நடந்துக்கணும்? தலயயா வாங்கிடு வாங்க? ஊசி...இடங்கொடுக்காமே, நூல் நுழையுமா? கொடுப்பாரக் கண்டால் பய பிசாசு கொனச்சி கொனச்சி ஆடுமாம்.''

''மேயுற மாட்டக் கெடுக்குமாம், நக்குற மாடு. ஒனக்கென்ன அம்மாளு...இவா பாடு, அவா பாடு.''

ஒவ்வொரு தடவையும், கயிற்றை கிணற்றுக்குள் விடும்போதும் தானே அந்தக் கிணற்றுக்குள் விழுவது போல், சரஸ்வதி தவித்தாள். முன்பு லேசாகத் தெரிந்த அந்த டின், இப்போது தூக்க முடியாத சுமையாகத் தெரிந்தது இந்தப் பெண்கள் சொல்வதுபோல், ராசம்மா தன்னை அதட்டிவிட்டுப் போனது அவளுக்கு அடிமைத் தனமாகத் தெரிந்தது. இவ்வளவுக்கும், மானேஜர் மற்ற வர்கள் சம்பளத்தில் ஐம்பது ரூபாய் பிடித்தால், தன் சம்பளத்தில் நூறு ரூபாய் பிடிப்பதும், அப்போது

அவளுக்கு மாபெரும் கொடுமையாகத் தெரிந்தது. மடமடவென்று நான்கைந்து குடங்களை நிரப்பிவிட்டு தன் வீட்டுக்குப் போனாள்.

சரஸ்வதி அந்த ஓலைவீட்டின் 'முற்றத்திற்கு' வந்த போது குடிசைக்குள் பொன்னையாவும் அம்மாவும், தன்னைப்பற்றி பேசுவது கேட்டதால், அவள் அங்கேயே நின்றாள்.

''ஒமக்கு மூளையே கிடையாது. மிஞ்சி மிஞ்சி இருந் தால், அவளுக்கு இப்போ இருபது இருக்கும். இன்னும் ரெண்டு வருஷம் கழியட்டுமே. நாம இப்பதான் ஏதோ சாப்பிடறோம்.''

''அப்படி இல்ல பிள்ள. மாப்பிள்ளைக்கி செங்கல் பட்டு பக்கத்துல, ஒரு மில்லுல பெரிய வேலையாம். பூர்வீகம் குட்டாம்பட்டியாம். எழுநூறு ரூபாய் வாங்கு றானாம். கல்யாணம் ஆன ரெண்டு வருஷத்துல பெண் டாட்டி இறந்துட்டாளாம்... ஏழு வயசில ஒரு பையன் மட்டும் இருக்கானாம்... இவ்வளவுக்கும் வயது முப்பதாறு தானாம்.''

''நான் உயிர விட்டாலும் விடுவேனே தவிர. என் மவள ரெண்டாந்தாரமா அதுவும் 'பாதிக் கிழவனுக்கு' கொடுக்க மாட்டேன்.''

''ஏமுழா வீம்பு பிடிக்கே? நம்ம தங்கப்பாண்டி பாத்த மாப்பிள்ளை நாம தட்ட முடியுமா? வாக்கு கொடுத்துட்டேன்னு வேறே சொல்லுதான்.''

''அவனுக்குத்தான் ஒரு மகள் இருக்காளே. அவள கொடுக்கச் சொல்லும்.''

பொறிகலங்கிப் போனவள்போல், சரஸ்வதி திடுக் கிட்டாள். அப்படியானால், அவள் இந்த ஊரை விட்டு

விட்டுப் போய்த்தான் ஆக வேண்டுமா? அதுவும் அம்மா சொன்னதுமாதிரி ஒரு பாதிக் கிழவனுக்கு... முடியாது... என்ன ஆனாலும் முடியாது... இந்தத் தங்கப்பாண்டி மாமாவுக்கு நான் என்ன கொடுமை செய்தேன்? அப்பா ஏன் அவர் வாக்கை தேவ வாக்கா எடுக்கார்? இந்த தங்கப்பாண்டியை மட்டும் தட்டுறதுக்காவது நான் மாட்டேன்... மாட்டேன்...''

திடீரென்று, அவள் நினைக்காமலே, சண்முகம் அவள் நெஞ்சுள் வந்து நின்றான். உடம்பின் ஒவ்வொரு அணுவிலும், அவன் ஊடுருவி நிற்பது போன்ற பிரமை. அப்பா... அம்மா பேசுவதை அவன் அசரீரியாக நின்று கேட்டுக்கொண்டிருப்பது போலவும், தக்க சமயத்தில் தலையிடுவான் என்பது போன்றும் ஒரு எண்ணம். ஒரு கற்பனை... ஒரு நப்பாசை. இதுவரைக்கும் அவள் அவனிடம் தனியாகப் பேசியதில்லை. 'சரசு' என்று சொல்லமாட்டாரா என்று ஏங்கும் அவளை, இன்றுவரை 'டீச்சர்' என்றுதான் கூப்பிடுகிறான். படித்த கர்வம் இல்லாமல், உள்ளூர் டீக்கடைகளில் மற்ற ஏழைகளோடு அமர்ந்து, மசால் வடையைத் தின்றுகொண்டே, அவர்களோடு வாயால் மல்லாடுவதும், பாமர மக்களுக்கு கடிதங்கள் எழுதுவதும், சில சமயம் அவர்களை அநியாயங்களில் இருந்து மீட்பதும், ஆதரவு கொடுப்பதும் அவனுக்குப் பொழுதுபோக்கு... பொழுதுபோக்கல்ல— ஒரு விசுவாசமான தொண்டு. ஊரில் எல்லா பிரமுகர்களுக்கும் அவன் 'கவாலி'. இது ஒன்றே போதும், அவன் நல்லவன் என்பதற்கு.

அவரு இல்லாத பள்ளிக்கூடம், 'களை' இல்லாம போயிட்டு...! எப்டி கலகலப்பா பேசுவாரு. எப்டி வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசுவாரு. இவ்வளவுக்கும் எனக்கு ஜூனியர். வேலையில சேர்ந்து மூணு மாதந்தான் ஆகுது. மானேஜர இப்படியே விடப்

படாது. கொஞ்சங் கொஞ்சமா எதிர்த்துப் பேசணுமுன்னு எப்படிச் சத்தம் போட்டு கத்துவாரு. அதுவும் இந்திரா இருக்கும் போதுகூட. அவரப் பார்த்ததும பிள்ளிங்ககூட 'ஸார்... கதை சொல்லுங்க ஸார்னு' எப்டி மொய்க்கு துங்க. அடிக்காமலே அவங்கள வசியப்படுத்துற வேலய எங்க கத்துக்கிட்டாரு? அவங்கள மட்டுமா 'வசக்கி' வைத் திருக்காரு? ஒவ்வொரு ஆசிரிய ஆசிரியைக்கும் 'வக்கணை' வச்சிருக்க... இந்த பிள்ளிங்ககூட அவருக்கு... வக்கணையே வைக்கலியே. தங்கப்பாண்டி, தொந்திப் பாண்டியாம் கனகம் டீச்சர், தார்க்குச்சியாம். தங்கச்சாமி... பிள்ளப் பூச்சியாம். வேலாயுதம், 'கரும்பனையாம்.' நான், மேல கண்ணியாம். ஆனால சண்முகத்துக்கு மட்டும் வக்கணை கிடையாதாம்! எல்லோரையும் அதட்டுற மானேஜர் மாமாகூட, அவரப் பார்த்துச் சிரிக்காரே. ஒருவேள இவரும் அவரு மகள விரும்புறாரோ? அதனாலதான் அவரப் பார்த்ததும் தானாச் சிரிக்கிற என்னை 'டீச்சர் டீச்சர்னு' சொல்லுதாரோ? 'ஸெட் கணக்குல' 'டிரெயினிங்' எடுக்க மதுரைக்குப் போனவரு... எப்போ வரப் போறாரோ... பார்த்து எவ்வளவு நாளாச்சு? 'பாவி மனுஷன்' ஒரு தடவ வந்தா என்ன? நான் இவரை நினைச்சி, அந்த நெனப்புலயே சுகத்த அனுபவிக்கையில மாப்பிள்ள பாக்காங்களாம் மாப்பிள்ள. பாத்துப் புடலாம்.' வீட்டுக்குள் சத்தம் வலுத்துக் கேட்டது. சரஸ்வதி, ஒரே தாவாகத் தாவி தந்தை முன்னால் போய் நின்றாள். "எப்பா! நான் என்ன ஒங்க தலையிலயா உட்கார்ந்திருக்கேன்...? சுமக்க முடியாம கஷ்டப்படுறீங்க. எனக்கு இப்போ 'அது' ஒண்ணும் வேண்டாம்."

பொன்னையா, மகளை ஆழமாகவும், அகலமாகவும் பார்த்தார்! "ஒரு வயதுப பெண், தன் கல்யாணத்தைப் பற்றிப் பேசுவதா... அதுவும் பெத்த அப்பனிடம். இந்த விஷயத்தில் தலையிட இந்தப் பய மவளுக்கு என்ன ரைட் இருக்கு? எல்லாம் இந்த கழுத முண்ட கொடுக்கிற

செல்லம்.'' பொன்னையா கத்தினார். ''பாத்தியாடி... ஒன் மவள் பேசுற பேச்ச? வர வர அவளுக்கு நான் அப்பனா தெரியாமப் போச்சுப் பாத்தியா? ஏன பேச மாட்டாள்? இருநூற்று ஐம்பது ரூபாய் சம்பாதிக்கால்லா. இந்த மரம் வெட்டி கண்ணுக்குத் தெரியுமா?''

சரஸ்வதி, முதலில் சாந்தமாகத்தான் பேசினாள். ''ஒம்ம மனசு நோவக்கூடாதுன்னு ரெண்டு வருஷமா மானேஜர் வீட்ல தினமும் தண்ணி எடுத்து வைத்தேறன். சில சமயத்துல பாத்திரத்த தேக்கிறேன். தண்ணிக் கிணத்துல கேவலமாப் பேசுறாளுவ. ராசம்மா அத்த வேற, நாலுபேரு முன்னால அதட்டிட்டுப் போனாள். ஊர்ல கசாமுசான்னு பேசுறாங்களாம். வாத்திச்சி வேல பாக்கற ஒவ்வொருத்தியும், ராணிமாதிரி இருக்கையில, நான்... இன்னும் நாயிலயும் கேவலமா வேல பாக்கேன். எல்லாம் ஒம்ம மனசு நோவக்கூடாது என்கிறதுக்காக. அப்படியும் நான் ஒமக்குப் பிடிக்கல. செங்கல்பட்டு கிணத்துல தள்ளப்பாக்கீங்க.''

சரஸ்வதி விம்மினாள். சுவரில் தலையை வைத்துக் கொணடு கேவிக் கேவி அழுதாள். பொன்னையா எழுநதார் மகளை அடிக்கப் போகிறாரோ என்று மனைவிக்காரி படபடப்போடு எழுந்தாள்

ஆனால்—பொன்னையா, சரஸ்வதியின் இரண்டு கை களையும் பிடித்துக்கொண்டு நின்றார். மகள்... உள்ளு ரப்பட்ட வேதனை, மரம் வெட்டி மரம் வெட்டி மரமாகப் போன அவருக்கு, இப்போதுதான் உறைத்திருக்க வேண்டும்.

''ஏம்மா அழுவுற? ஒன் இஷ்டத்த மீறி எதையும் செய்யமாட்டேன். இனிமேல் நீ தங்கப்பாண்டி வீட்டுக்கு மட்டுமல்ல, நம்ம வீட்டுக்கும் தண்ணி எடுக்கப் போகாண்டாம்—என்ன ஆனாலும் சரி ''

# 4

மானேஜரின் அறையில் பாதிக்கதவு மூடப்பட்டு, மீதிப் பாகத்தை தையல் ஆசிரியன் பெருமாள், தன் முதுகை வைத்து மறைத்துக்கொண்டிருந்தான் என்றால், உளளே தங்கப்பாண்டிக்கும் இந்திராவுக்கும் 'அந்தரங்கமான' ஆலோசனை நடப்பதாக அர்த்தம். மானேஜரைப் பார்த்துவிட்டு, 'ஜி.பி.எப்.' பணத்துக்கு விண்ணப்பம் கொடுக்கப்போன கனகம், பாதி வாசலை மறைத்த பெருமாளைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டாள். அவளுக்கு உள்ளூற உதறல். நேற்று 'ஏலத்துல பணம் கொடுக்கணுமுன்னா, பேங்க்ல போட்டிருக்கிற பணத்தை எடுத்து கொடுக்கது நம்ப சம்பளந்தானா கிடைச்சுது?' என்று இந்திரா காதுபடச் சொல்லிவிட்டாள். இந்நேரம், அவளோ, தங்கப்பாண்டியின் காதில், வாய்ப்பட சொல்லிக்கொண்டிருப்பாள். ஜி.பி.எப். கடன் கிடைச்சது மாதிரிதான்... வயித்துக் கட்டியை ஆபரேஷன் பண்ணுனது மாதிரித்தான்.

அவள் நினைத்தது உண்மை என்பது மாதிரி உள்ளே உரையாடல் நடந்தது. தங்கப்பாண்டி கோபமாகக் கேட்டார். "அப்படியா... அந்தத் தார்க்குச்சி சொன்னாள்...?"

"வரவர நான் சொல்றத நீங்க நம்பமாட்டேங்கறீங்க? ஒங்களுக்கு இப்போ சரஸ்வதிதான் அழகாத் தெரியும். ஒங்க 'ஒய்ப்' ஒரு தடவ இங்க வந்து என்னைத் திட்டிட்டுப் போனாள். இப்போ சரஸ்வதிய வீட்டுக்குள்ள கூப்பிடுறாள். ஒங்க புத்தி தெரியாம... உம்... என்னைத் திட்டுன பாவம் அவள சும்மா விடுமா?"

''சரி, அதெல்லாம் பேச இப்ப டயம் இல்ல. அப்புறம் வேற ஏதாவது விஷயம் உண்டா?''

''இந்த மாரிக்கு எக்ஸ்டன்ஷன் கொடுக்கிறது தப்புன்னு தோணுது.''

''ஏன்?''

''சீனிவாசன்கூட எப்பப் பார்த்தாலும் கிசுகிசுன்னு பேசிக்கிட்டு இருக்காள். வேலாயுதம் மேல ஒரு கண்ணு போடுறாள். அவனும் பல்லக் காட்டுறான். சீனிவாசனும் சகுனிமாதிரி 'லீவ் வேகன்ஸி'க்கு ஹரிஜன்... பெர்மனன்ட் வேகன்ஸிக்கு பேக்வேர்ட்... இல்லன்னா பார்வர்டுன்'னு அவள்கிட்ட சொல்லுக்குச் சொல்லு சொல்லிக்கிட்டு இருக்கார்.''

தங்கப்பாண்டி எதுவுமே பேசவில்லை; லேசாகச் சிரித்துக்கொண்டார். இதற்குள், இரண்டாவது பீரியடுக் கான மணியடித்தது. இந்திரா, வெளியே வந்தாள். அவளைப் பார்த்ததும் கும்பல் கும்பலாக நின்று பேசிக கொண்டிருந்த ஆசிரிய—ஆசிரியைகள், வகுப்புக்களைப் பார்த்து ஓடினார்கள். தார்க்குச்சிமாதிரி ஒல்லியாக இருந்த 'ஜி பி.எப்.' ஆசிரியை கனகம் மட்டும், இந்திரா வைப் பார்த்து, ''இந்த சேலை... ஒனக்குன்னே நெய்தது மாதிரி இருக்கும்மா... இன்னும் சேலய... உடம்போட சேர்த்து இறுக்கிக் கட்டினால், ஒனக்கு எடுப்பா இருக்கும். இப்படி... தொளதொளன்னு சேலைய வைக்காத'' என்றாள். அப்படிச் சொல்லிவிட்டதால், தனது 'ஜி.பி. எப்' காய், பழுத்துவிடும் என்று நினைத்துக்கொண்டாள். இந்திரா முகத்தை ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு, தன் வகுப்புக்குப் போனாள். போனவுடனேயே ''கண்ணகியை ஏன் கற்புக்கரசின்னு சொல்கிறோம்?'' என்று கேள்வி கேட்டதும், பயல்கள் அமுக்கலாகச் சிரித்தார்கள். இரண்டு கட்டிடங்களுக்கும் மத்தியில் இருந்த 'இடுக்கை'ப் பார்த்து, கண்ணடித்துக் கொண்டார்கள்.

சீனிவாசன், மானேஜர் அறைக்குப் போகப் புறப்பட்டார். அவர் மகள போக வேண்டிய ரயிலுக்கு இன்னும் நேரமிருக்கு. இப்போகூட தங்கப்பாண்டிகிட்ட கேட்டுப் பார்க்கலாம். அவர் புறப்படப்போனபோது, எதிரும் புதிருமான உள்ளூர் அரசியல்வாதிகள், மானேஜரைப் பார்க்க வந்துவிட்டார்கள். ரயில் போவதற்குமுன்பு, அவர்கள போவார்களா என்பது சந்தேகம். இந்தச் சமயத்தில் இங்கிதம் பார்ப்பது இங்கிதமல்ல...

சீனிவாசன், மானேஜர் அறைக்குள் நுழையப் போன போது, 'பார்ட் டைம்' தையல் ஆசிரியப் பையன், தன் உடம்பெல்லாம் பார்ட் பார்ட்டாக ஆட "அப்புறமா வந்து பாரும். இப்போ எப்டி பார்க்க முடியும்?" என்று நிஜமாகவே அதட்டிப் பேசினான்.

சீனிவாசன், வகுப்பிற்குள் போகாமலும், அங்கே நிற்காமலும், 'இடுக்கில்' வந்து நின்றுகொண்டார். ஒரு தடவை இப்படி 'இடுக்கில்' நின்றபோது, எட்டாவது வகுப்புப் பயல்கள், அவரையும் பார்த்துச் சிரித்தார்கள்.

அரசியல் வாதிகள் போவதாகத் தெரியவில்லை. தென்காசிக்கு வேட்பாளர் தேர்வுக் குழுக்கள் வருகிறதாம். சர்வ கட்சிகளிலும் அங்கம் வகிக்கும் தங்கப்பாண்டி தேர்தல் குழுக்களிடம் போய், 'இவர் இவரை' சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். தங்கப் பாண்டி, தேவடியாள் சிரிப்பு ஒன்றை, உதடு முழுவதும் உலவ விட்டுக்கொண்டிருந்தார். எப்படியோ அரசியல் வாதிகள் போய்விட்டார்கள். சீனிவாசன் மானேஜர் அறைக்குள் நுழைந்தார். "இப்ப... கொஞ்சம் பிஸி... என்ன விஷயம்?" என்றார் தங்கப்பாண்டி.

"இன்னைக்கு, என் மகள வண்டியேத்தணும்... கொஞ்சம் பணம் இருந்தால்..."

''ஆமா... ஒம்ம வகுப்புல ஒரு பெஞ்சி உடஞ்சி கிடக்கே... ஏன்?''

''அதுவா? நேத்து... 'முழுக்கள்' என்றால் என்னன்னு ஒரு கேள்வியைப் போட்டேன். பதில் சொல்லாத பயலுவள பெஞ்சி மேலே ஏத்துனேன். அந்தப் பெஞ்சி ஏற்கனவே இத்துப் போனது. சடசடன்னு உடைஞ்சிட்டு...''

''வேணுமுன்னே உடைச்சிருப்பாங்க. இனிமேல் எவனையும் பெஞ்சி மேலே ஏத்தாதிங்க. தெரியாத கேள்விகள ஏன் கேட்கிறிய...? எனக்கே இதுக்கு பதில் தெரியாது ''

''ஆனால் நிறைய பயலுவ பதில் சொன்னாங்க. ஒங்கள மாதிரி, கொஞ்சம் பேருக்குத்தான் தெரியாது. இப்போ உள்ள சிலபஸ்படி... 'முழுக்கள்'... மிகை எண். குறை எண், கணங்கள் இந்தமாதிரி டெர்ம்ஸுக்கு அர்த்தம் தெரிஞ்சாத்தான், மேல்கொண்டு பாடம் நடத்த முடியும்.''

''சரி போகட்டும்; என்ன விஷயம்?''

''அதுதான் சொன்னேமில்லா... என் மகளை... இன்னைக்கி அனுப்பியாகணும். கையில சத்தியமாக் காசு இல்ல...''

''என்ன ஸார் நீங்க? ஒரு அவசரத்துக்கு பணத்த ஒரு வாரம் வச்சிக்கப்படாதா? ஓடியா போகப் போறேன். ஒங்களுக்காக எப்படில்லாம் வளைஞ்சி கொடுக்கேன். இருநூறு பிள்ளிங்களை... முந்நூறுக்கு மேல காட்டுறேன். முப்பது பேருக்குக் கீழே இருந்தால் ஒரு செக்ஷன்தான். நான் இருபத்தஞ்சு பிள்ளிங்களை வச்சிக்கிட்டு, ரெண்டு செக்ஷனா காட்டுறேன். ஒரு வகுப்ப மட்டுமா காட்டுறேன்...? எல்லாம் யாருக்காக? என் பாட்டுக்கு இருக்கிற

பிள்ளிங்களை மட்டும் காட்டினால் ஆறு பேரோட வேல போயிடும். ஒங்களுக்கு உபகாரம் செய்தாலும், உபத்திரந்தான் சாமி... சரி. சரி... போங்க.

சீனிவாசன் தன்னை சிறுகச் சிறுக நகர்த்தி தலையைத் திரும்பத் திரும்பத் திருப்பி வெளியே வந்தார். அவர் போனதும்,ம ானேஜர் மோவாயை பன்றி ஆட்டுவது மாதிரி ஆட்டிக்கொண்டார். சரஸ்வதி வந்தாள். ''கூப்பிட்டிங்களா ஸார்?''

''ஒனக்கென்ன கேடுகாலம்... மாமான்னு கூப்பிடு றவள், ஸார்னு சொல்றே?''

இந்திரா தன்னிடம் சரஸ்வதியைப் பற்றி காலையில் பேசியதில் இருந்து, அவருக்கும் ஒரு 'கிக்'. சரஸ்வதி எதுவும் பேசவில்லை; மௌனமாக உதட்டைக் கடித்துக் கொண்டிருந்தாள். அவளையே சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தவர், பிறகு ''சரி வீட்ல ஏதோ வேல இருக்காம். அத்த வரச் சொன்னாள் போ. ஒன் வகுப் பயும் சீனிவாசனை சேர்த்துக் கவனிச்சுக்கச் சொல்லு'' என்று சொல்லிவிட்டு, அவளைப் பார்ப்பதற்கு, அவர் தலையை நிமிர்த்து முன்னாலேயே, சரஸ்வதி வெளியேறி விட்டாள்.

வெளியே நின்றுகொண்டிருந்த மாரியம்மாள், உள்ளே வந்தாள். 'விடுப்பில்' போயிருந்த ஆசிரியை வடிவு, இன்று வேலையில் சேர்ந்து விட்டாள். இன்றை யோடு அவளுக்கும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது.

மாரியம்மாளைப் பார்த்ததும், தங்கப்பாண்டி ''இன்னும் நீ ஊருக்குக் கிளம்பலியா?'' என்றார்.

மாரி திக்கித் திணறிக் கேட்டாள். ''ஸார், நீங்க மனசு வச்சால்...''

''நான் மட்டும் மனசு வச்சால் எப்படி? நீயும் மனசு வைக்கவேண்டாமா? ஒனக்கு ஹெல்ப் பண்ணணும்னால், எனக்கும் ஒரு இன்ட்ரஸ்ட் வேண்டாமா? சரி சரி. சாயங்காலமா ரோட்டுப் பக்கமா இருக்கிற வீட்டுக்கு வா, பேச வேண்டியதைப் பேசிக்கலாம். ஏதாவது ஒரு வழி பண்ணப் பாக்கேன்.''

''அங்கே பேசுறத இங்கேயே பேசலாமே. நீங்க எனக்கு அப்பாமாதிரி. சொந்த மகளமாதிரி கேக்கேன். இன்னும் ஒரு மாதம் வேலையில் இருந்தால், வீட்டுப் பிரச்னையை குறைக்கலாம்.

மெழுகாகக் குழைந்த தங்கப்பாண்டி, இப்போது மின்சாரக் கம்பம்மாதிரி நிமிர்ந்து கொண்டார். ரப்பர் மாதிரி இருந்த முகத்தை, இரும்புமாதிரி ஆக்கிக்கொண்டார் 'அப்பாவாம்... அப்பா... அடேயப்பா.'

''லீவ் வேகன்ஸி முடிஞ்சுட்டுதுன்னா, நான் என்னம்மா பண்ண முடியும்? இப்போ யாரும் லீவுல போகல. யாரையும் நான் போகச் சொல்லவும் மாட்டேன். அவங்களா போனால் ஏதாவது செய்யலாம்.''

தங்கப்பாண்டி பேச்சை முடிக்கும் முன்னாலயே சரஸ்வதி அங்கே நுழைந்தாள்.

''எனக்கு மூணு மாசம் லீவு இருக்கு, மாரிக்காக நான் வேணுமுன்னால் ரெண்டு மாசம் லீவுல போறேன்.''

தங்கப்பாண்டி, கோபப் பாண்டியானார். சரஸ்வதியைப் பார்த்து திரும்பிய திரும்பலில் சுழல்நாற்காலி கிரீச்சிட்டது. அதன் கால்கள் பின்னால் நகர்ந்தன. மேஜை முன்னால் நகர்ந்தது. பல்லைக் கடித்துக்கொண்டே கேட்டார்:

"நீ இன்னும் வீட்டுக்குப் போகலியா? அத்தை ஆளனுப்பி அரைமணி நேரமாவுது, இன்னுமா போகல? ஓஹோ... அம்மா தியாகம் செய்ய வந்திருக்கியளோ? ஒங்களுக்கு ஒரு சிலை வச்சுட வேண்டியதுதான். மூஞ்சையும் முகரக் கட்டையையும் பாரு. இரும்பு அடிக்கிற இடத்துல ஈய்க்கு என்ன வேலன்னேன். சீக்கிரமா வீட்டுக்குப் போ. மாட்டுக்குப் புண்ணாக்கு கலக்கணுமாம் இன்னுமா நிக்கே?"

சரஸ்வதி, அவரைப் பார்த்து ஏதோ சொல்லப் போனாள். முகத்தாட்சண்யமோ, அல்லது தாத்தா காலத்தில் இருந்து கொத்தடிமையாக வேலை பார்த்ததால் ஏற்பட்ட வேர்வையே ரத்தவோட்டமாக மாறி விட்டதாலோ என்னவோ, அவளால் பேச நினைத்தும் பேச முடியவில்லை. மாரியம்மாளை ஒரு தடவையும், தன்னைத்தானே இரு தடவையும் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு, வெளியேறினாள். மானேஜரின் வீட்டுக்குப் போகாமல் நேராக வகுப்புக்குப் போனாள்.

தங்கப்பாண்டி, மாரியம்மாளை கம்பீரமாகப் பார்த்துப் பேசினார்: "சரிம்மா, சீக்கிரமா ஊர்ப் போய்ச் சேருங்க. எனக்கும் வேல இருக்கு."

"என் சம்பளத்த இன்னும் கொடுக்கலியே?"

"எந்தச் சம்பளம்?"

"போன மாதச் சம்பளம்."

"தெரியாமத்தான் கேக்கேன், சண்டை போடணு முன்னே வந்திருக்கியா?"

"எனக்குச் சண்டையில அடிபட்டுத்தான் பழக்கமே தவிர, அடிச்சுப் பழக்கமில்ல ஸார். வேலை பார்த்ததுக்கு சம்பளம் கேக்குறேன், அவ்வளவுதான்."

''ஒன்னோட பெரிய தொணதொணப்பா போயிட்டு. ரெண்டு மாதச் சம்பளத்துல, ஒரு மாதம் உனக்கு, இன்னொரு மாதம் எனக்குன்னு பேசித்தான் ஒன்னை நியமிச்சது. இதுதான், ஒன்னை கூட்டிக்கிட்டு வந்தானே... ஒன் அக்கா புருஷனோ... அத்த புருஷனோ... ராமசாமி... அவன்கிட்ட பேசி, முடிவு பண்ணுன விவகாரம். போய் அவனைக் கூட்டிக்கிட்டு வா.''

''ஸார், தொண்டை கட்டும்படி பாடம் நடத்துனது நான். ராமசாமி இல்ல.''

''இப்போ என்ன செய்யணுங்கற?''

''சட்டப்படி சேர வேண்டிய சம்பளத்த தரச் சொல்றேன்.''

''சட்டப்படி ஒனக்குத் தரவேண்டியதில்ல நீ கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாச்சு.''

''ஸார், நீங்க சம்பளம் தராம நான் போகமாட்டேன். போக முடியாது.''

''என்னடி நினைச்சிக்கிட்டே, பறமுண்ட. ஊருக்கு ஒழுங்கா போய்ச் சேரணுமுன்னு நினைக்கியா, இல்ல வழியிலயே யாரையாவது விட்டு தூக்கிட்டுப் போகச் சொல்லணுமா? தப்பு என் மேலத்தாண்டி. முதல் மாதமே சம்பளத்த எடுத்திருக்கணும். முள்ளங்கிபத்த மாதிரி முழுசா தந்தேன் பாரு...நீ ஏன் பேசமாட்டே? ஒன் பறப்புத்திய காட்டிட்டல்லா...''

எதிர்பாராத 'அடிப்' பேச்சால், மாரியம்மாள் அதிர்ந்துவிட்டாள். உடம்பு முழுவதும், அக்கினிக் குழம்பானதுபோல் எரிந்தது. 'இவன், இவ்வளவு மட்டமான மனுஷனா? இவன், நான் சம்பளம் கேட்டதுக்காக இப்படிப் பேசல. அவன் மறைமுகமாக் கேட்டத கொடுக்காததுக்காக இப்படிப் பேசுறான். இவனை என்ன செய்யலாம்? என்ன செய்தாலும் தகும். என்ன செய்ய

முடியும்? இந்த ஏழைப் பெண்ணால என்ன செய்ய முடியும்? அழலாம்... ஆண்டவன்கிட்ட முறையிடலாம்...வேறு யார் கிட்ட முறையிடலாம்? யார் இருக்கா? கடவுளே...அடி என்று சொன்ன இவன் ஒடம்புல ஒவ்வொரு அடியும் புழுத்துப் போகணும். பற முண்டன்னு கேட்ட இவனை யாராவது கைவேறு, கால்வேறா வெட்டிப் போடணும். எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேணும். பக்கத்துல இருக்கிற சேரியில என்னோட ஜனங்களோடு என்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளாமல், இந்தக் கிராமத்துல தனியா வீடுயெடுத்து, தனிச் சாதின்னு காட்டிக்கிட்ட என் புத்திய செருப்பால அடிக்கணும்.'

மாரியம்மாள், விக்கித்து நின்றாள். விம்மலை அடக்க முடியாமல் அடக்கினாள். சுவரைப் பிடித்துக்கொண்டாள் இன்னொரு கையால் சுக்கு நூறாகப் போவது போல் துடித்த தலையைப் பிடித்துக் கொண்டாள். தங்கப் பாண்டியை எரித்துவிடுபவள் மாதிரி பார்த்தாள். பிறகு எரிக்கப் போகிறவள்போல பார்த்தாள் ஏதோ ஒரு வைராக்கியம் நெஞ்சில் நெருப்பாகி, இமையில் முட்டிய கண்ணீர் எரிமலைக் குழம்பாக வடிய, வெளியே வந்தாள்.

'என்ன ஆச்சு' என்று கேட்டுக் கொண்டு, அவளை எதிர்கொண்டழைப்பவள்போல வந்த சரஸ்வதியின் மார்பில் சாய்ந்தாள். கழுத்தைக் கட்டிக்கொண்டு, விம்மல்கள் வெடிப்புக்களாக, கண்ணீர் வெள்ளமாக, உள்ளத்தில் ஏற்பட்ட கதறல், உதடு வழியாக சன்னமான ஓலமாக, ஒப்பாரியாகக் கேட்டது. எல்லா ஆசிரிய-ஆசிரியைகளும் அவளைச் சுற்றி வந்து நின்று கொண்டார்கள் சரஸ்வதி, அவள் முதுகை ஆதரவாகத் தட்டிவிட்டு, பிறகு அவள் முகத்தை நிமிர்த்தினாள். என்ன நடந்தது என்று எல்லோரும் கண்களாலேயே கேட்டார்கள். காரைக் கட்டிடத்தில் இருந்த வேலாயுதம் படபடப்போடு வந்தான்.

மாரியம்மாள் விக்கிக்கொண்டே ''நான் பறமுண்டயாம், ஆளவச்சி தூக்கிட்டுப் போகச் சொல்லுவானாம்'' என்று சொன்னபோது, எல்லோரும் சப்த நாடிகளும் அடங்கி, அடங்கியவை ஆக்ரோஷமாக எழுந்ததுபோல் மானேஜர் அறையைப் பார்த்தார்கள். தங்கப்பாண்டி. சாவகாசமாக வெளியே போய்க் கொண்டிருந்தார். தையல் ஆசிரியன், தோல் பையைத் தூக்கிக்கொண்டு, அவர் பின்னால் ஓடிக் கொண்டிருந்தான்.

மாரியம்மாள், கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். சோகத்தால் கீறப்பட்ட முகத்தோடு, ''நான் போறேன்'' என்று சொல்லிக் கொண்டு, நான்கடி நடந்துவிட்டு மீண்டும் திரும்பி வந்து, சரஸ்வதியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, மீண்டும் கேவிக்கேவி அழுதாள். ''எனக்குப் பயமா இருக்கு. வழில...அவன் சொன்னது மாதிரி...சொன்னது மாதிரி...'' என்று சொல்லிவிட்டு, எல்லோரையும் அவள் பரிதாபமாகப் பார்த்தாள்.

உடம்பின் எங்கோ ஓரிடத்தில் முளைத்திருந்த வீரம், சரஸ்வதியின் வாய்க்கும் கண்களுக்கும் தாவியது: ''நீ கவலப்படாத மாரி. எந்தப் பய வரான்னு பார்த்துப் புடுவோம். மொதல்ல என் வீட்டுக்கு வா. சாயங்காலமா எங்கப்பா மரம் வெட்டிட்டு வருவாரு. அவர...ஒன்னை ஒன் வீட்லயே கொண்டுவிடச் சொல்றேன். வழில... எவனாவது வந்தாமுன்னா, கோடாரியாலயே விறகக் கீறுறது மாதிரி கீறிப்பிடுவாரு. வா...எங்க வீட்டுக்குப் போகலாம்...''

சரஸ்வதி, மாரியை தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். இந்திராவும் தங்கப்பாண்டியின் 'ஆசிரிய மச்சான்' கோவிந்தனும், இன்னும் ஒரு ஆசிரியரும், பல்லைக் கடித்துக் கொண்டார்கள். சீனிவாசன், முக்கியப் பிரச்சினைபற்றிக் கேட்டார். ''நேற்றே கையில காசு இல்லன்னு சொன்னியே? பஸ்ஸுக்கு காசு வச்சிருக்கியா?''

மாரியம்மாள் வெறுமையோடு பார்த்தாள். தன் மானத்திற்கும், பிரத்யட்ச நிலைக்குமிடையே தவித்துக் கொண்டு அவரைப் பரிதாபமாகப் பார்த்தாள். உடனே, பெரும்பாலான ஆசிரியர்கள் தங்களிடம் இருந்த எட்டணா, ஒரு ரூபாய் சொத்துக்களைப் பிரித்தார்கள். ஏழரை ரூபாய் தேறியது மாரியம்மாள், கூனிக் குறுகக் கூடாது என்பதற்காக, சீனிவாசன், வசூலித்த பணத்தை சரஸ்வதியிடம் கொடுத்தார்.

சரஸ்வதியின் அணைப்போடு "போறேன், போறேன். ஒங்கள இனிமேல் எந்தக் காலத்துல பார்க்கப் போறேனோ" என்று அழுதழுது சொல்லிவிட்டு, மாரியம்மாள் விம்மினாள். சீனிவாசன் கண்களைத் துடைத்துக் கொண்டார். தலைமை ஆசிரியர் தங்கச்சாமி, காரைக் கட்டிடத்தின் வாசலில் நின்றுகொண்டே, அழப்போவதுபோல் பார்த்தார். கனகம் ஓடிப்போய், மாரியின் கழுத்தைக் கட்டிக்கொண்டே விம்மினாள். இந்திராவிற்குக்கூட கண் கலங்கியது. கண் கலங்கி நின்ற வேலாயுதம், போகப் போகிறவளை, கண்களால் வழி மறிப்பதுபோல் பார்த்தான். அந்தக் கட்டிடமே அவனுக்குச் சமாதியாகத் தெரிந்தது. "மாரி நீயாவது உயிரோட போற. இனிமேல் நான்...இங்கே...உயிரில்லாமல்தான் இருப்பேன் மாரி..."

மனதில் லேசாக வந்துபார்க்கும் வேலாயுதத்தை, மாரியம்மாளும் 'தனிப்படுத்தி'ப் பார்த்தாள். தங்கப்பாண்டியின் பேச்சால், இதுவரை, தனக்கும் ஒரு நேசன் இருந்தான் என்பதை தற்காலிகமாக மறந்துபோன பெண், அவனை நினைவுபடுத்திக்கொண்டு பார்த்தாள். ஏதோ ஒன்றை—விடக்கூடாத ஒன்றை—அங்கேவிட்டு விட்டுப் போவதுபோல் துடித்தாள். இருப்பது வரைக்கும் பெரிதாகத் தெரியாத ஒன்று இழக்கப்படும்போது, அவளை இழுத்துப் பிடித்தது. கண்களை கைகளால் மூடிக்கொள்ளச் செய்தது.

# 5

பள்ளிக்கூடம் மாறிவிட்டதா அல்லது, தான் மாறி விட்டோமா என்று யோசித்துக் கொண்டே, சரஸ்வதி, மறுநாள் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தாள். ஆசிரிய-ஆசிரியைகள், கும்பல் கும்பலாக நின்று பேசிக்கொண்டு நின்றார்கள். இன்னும் 'பிரேயர்' மணி அடிக்கவில்லை. மாரியம்மாளின் ஆறாவது வகுப்பு மாணவ—மாணவிகள் எதையோ பறிகொடுத்தவர்கள் மாதிரி பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிறுமி, சரஸ்வதியிடம் வந்து 'டீச்சர்...எங்க டீச்சர் இனிமேல் வரவே மாட்டாங்களா' என்று சொன்னபோது, சரஸ்வதிக்கு கண்கள் நிறைந்தன. இழப்பின் ஆற்றாமையில் அல்லாடிக் கொண்டிருந்தவள், சீனிவாசன் ஆசிரியரிடம் எதையோ விவாதித்துக் கொண்டு நிற்கும் இளைஞனைப் பார்த்தாள். அவள் மனம் மறக்க நினைத்தாலும், மறக்க முடியாத சண்முகம், எல்லோருடைய ஆடைகளையும் மறைக்கும்படியும், மறக்கும்படியுமான 'பளிச்சென்ற' ஆடையில் தோன்றினான். 'அப்பாடா பார்த்து எவ்வளவு நாளாச்சு...ரொம்ப ஸ்டைலாதான் இருக்கார். கிராப்பக் கூட மாத்திக்கிட்டார் போலுக்கு. மதுரையில வைகை ஆறு, ஆசாமிய தளதளன்னு மாத்திட்டு.''

சரஸ்வதி, பத்தடி இடைவெளியை, மூன்றே எட்டில் முடித்துவிட்டு, சீனிவாசன் அருகே போய் நின்றாள். அவனைப் பார்க்காதது மாதிரியான 'பாவலா' கண்களுடன், அவன் வருகை தன்னை ஒன்றும் பாதிக்கவில்லை என்பதுபோல நின்றாள். 'அவரே பேசட்டுமே...'

அவளை அப்போதுதான் கவனித்த சண்முகம் ''டீச்சர் ஒங்களுக்கு வயசு நூறு...'' என்றான்.

சரஸ்வதி குறும்பாகக் கேட்டாள்: ''இப்பவா? பிறகா?''

''இப்பன்னுகூட சொல்லலாம். ஏன்னா... ஒங்க குடும்பத்துக்கும், மானேஜர் குடும்பத்துக்கும் இருந்த ஆண்டான்—அடிமை உறவைப் பார்த்தால் ஒங்களுக்கு நூறு வயது வருவது வரைக்கும் அடிமைப் புத்தியில இருந்து மாறமாட்டீங்கன்னு நினைச்சேன். நீங்க என்னடான்னா, ஒரு நொடில மாறிக் காட்டிட்டீங்க.''

அவள் அவனைப் பொய்க் கோபத்துடன் பார்த்தாள். பிறகு ''அப்பா ஒங்கள திருநெல்வேலியில பார்த்தாராமே'' என்றாள். அப்பா என்ற வார்த்தையை 'ஒங்க மாமனார்' என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள் சீனிவாசன் துளைத்து எடுத்தார்:

''அப்புறம் சொல்லுடே....மாரியம்மாள மாவட்டக் கல்வி அதிகாரிகிட்ட கூட்டிக்கிட்டுப் போனே... அப்புறம்?''

''அவர்கிட்ட நடந்த விஷயத்த விளக்கினேன். மாரியம்மாளை ஒரு கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுக்கச் சொன்னார். அதே சமயத்தில், சம்பளப் பட்டியலுல, அவள் கையெழுத்து போட்டிருக்கதுனாலே, மானேஜர், மான நஷ்ட வழக்குப் போட்டால் தான் ஜவாப்புல்லன்னும் எச்சரித்தார்

''ஏதேது, இந்த ஆசாமியே தங்கப்பாண்டிக்கு சொல்லிக் கொடுப்பான் போலுக்கு...''

''அவர் மாரியம்மாளோட மனுவ வாங்கிக்கிட்டார். 'ஆவன செய்யுறேன்'னு சொன்னார். இதுக்கெல்லாம் அவங்களை எதிர்பார்க்கப்படாது. கோளாறு நம்மகிட்ட தான் இருக்கு.''

சரஸ்வதியால் பேசாமல் இருக்க முடியவில்லை. மனதுள் பயமாகத் தோன்றிய சந்தேகத்தை, வாய்விட்டே கேட்டாள். ''மாரியம்மாளுக்கு ஆறுதல் சொன்னீங்களா? எங்கப்பாவை போகச் சொல்லிட்டு, நீங்க அவளை ஊர்ல கொண்டு விட்டுவிடுறதாய் சொன்னீங்களாம்.''

''ஆமாம்...நான்தான் வீட்ல கொண்டுவிட்டேன். அவங்க குடும்ப நிலைமை ரொம்ப மோசமாக இருக்கு. இந்தப் பொண்ணு வேலைக்கு வந்த பிறகுதான், அந்த வீட்ல ராத்திரி தீ மூட்டி இருக்காங்க.''

''மாரியோட பாவம் மானேஜரை சும்மா விடாது.''

''பாவ புண்ணியத்தைப் பேசிப் பேசியே நாம் அழிஞ்சி போயிட்டோம். பாவம்...அது பாட்டுக்கு பாவம் கிடக்கட்டும். நாம ஏதாவது செய்யணும்...''

''மதுரை டிரெயினிங் ஒங்கள ரொம்பத்தான் மாத்தியிருக்கு.''

''உண்மைதான். டிரெயினிங்குன்னு பார்த்தா, அது சரியான குப்பை. ஆனால், அங்க பல்வேறு வகையான ஆசிரியர்களை பார்க்க முடிஞ்சுது. நம்ப மானேஜ்மெண்ட் சங்கதியக் கேட்டுட்டு, நம்பளத்தான் குற்றம் சொல்றாங்க. பல இடங்கள்ல இந்த மாதிரி அக்கிரமங்கள் நடந்ததை எதிர்த்து, ஆசிரியர்கள் போராடி ஜெயிச்சுகிட்டு வாராங்களாம். ஆசிரியர்களை எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் மூலந்தான் நியமிக்கணுமுன்னு சட்டம் வந்ததே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களோட போராட்டத்தாலத் தான். பெடரேஷன் செகரட்டரியப் பார்த்தேன். நடக்கிற அநியாயத்தெல்லாம் சொன்னேன். எல்லாத்தையும் பொறுமையாக் கேட்டுட்டு, கடைசில 'ஒங்களத் தாய்யா மொதல்ல உதைக்கணு'முன்னார். சம்பளத்துல கமிஷன் கொடுக்கதுக்கு வெட்கப்படாண்டாமான்னு கேட்டார். 'மதிய உணவு பொய்க்கணக்கு எழுதறது

மானமுள்ள ஆசிரியர் செய்யுற வேலையா'ன்னு கேட்டார். நான் ரெண்டும் இல்லாதவன் மாதிரி தலையைக் குனிஞ்சேன். 'சரிசரி... மொதல்ல சங்கத்துல சேருங்க, எல்லாம் சரியாயிடும்' என்றார்.'' இந்தாங்க... உறுப்பினர் பாரம். 'பில்லப்' பண்ணித் தாங்க.

சீனிவாசன் சலிப்போடு சொன்னார்: ''இந்த சங்கம் கிங்கமுன்னு பேசாதீங்க. எல்லாம் அசிங்கம். நான் முன்னால ஒரு சங்கத்துல இருந்தேன். அதன் முக்கியஸ்தரில் ஒருத்தன், கார் பங்களா வாங்கிட்டானாம். இன்னும் கணக்கே கொடுக்கலியாம்.''

''குழந்தை பிறக்கும்போது, கொடி சுற்றித்தான் பிறக்குது. கொடியை அறுத்துட்டு குழந்தய பிரிக்கலியா? இதுமாதிரிதான், நல்லது செய்யும்போது கெட்டது கூடவே வரும். நல்லதைப் பிரித்து காப்பாத்தாண்டாமா? இந்த பெடரேஷனுக்கு ஒரு திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கை இருக்கு. பழைய சங்கக் காரியதரிசி, எல்லா ஜாதியையும் மதிச்சவரு. இந்த சங்கத்துக் காரியதரிசி, எல்லா ஜாதியையும் மிதிக்கவரு. என்ன யாருமே பாரத்த வாங்க மாட்டேங்கறீங்க? ஒங்கள யாராலும் காப்பாத்த முடியாது சாமி. கடவுளாலயும் முடியாது. தங்கப்பாண்டி பிறக்கல... நீங்கதான் பிறக்க வச்சிருக்கீங்க.''

சரஸ்வதிக்கு, அவன் பேசப் பேச, ஏதோ புரியாத ஒன்று, புதிரான மாயையை விலக்கிக்கொண்டு, விஸ்வரூபத்துடன் நிற்பதுபோல் தோன்றியது. சண்முகத்தையே, விழியசையாது பார்த்தபோது, சீனிவாசன் மன்றாடினார். ''கொஞ்சம் விட்டுப் பிடிப்போம். இவன் கிட்ட இருக்கிற பிடியை மொதல்ல எடுத்துக்குவோம். ஆனால் நான் கொடுத்திருக்கிற பிடி, அசல் மரணப் பிடி.''

''பிடிபடாமல் ஏன் சார் பேசுறீங்க?

''எப்படிடே சொல்லுதது ?''

ஆசிரியை பார்வதி குறுக்கிட்டாள். ''ஒங்க சங்கதி தெரியும் ஸார். அஞ்சு வருஷத்துக்கு முன்னால, ஆக்டிங் ஹெட்மாஸ்டராய் இருக்கையில, மானேஜர் தூண்டுதலால் ஒண்ணுமே படிக்காத 'மேலத்தெரு' அருணாசலதுக்கு, எட்டு படிச்சதா பொய் சர்டிபிக்கட் கொடுத்தீங்க. அதத்தான சொல்ல வாறீங்க?''

''அதேதான். ஏதோ பியூன் வேல கிடைக்கப் போகுதுன்னான். தங்கப்பாண்டியும் கொடுன்னான். சரி... நம்மளால ஒருவனுக்கு வேல கிடைக்கப் போகுதுன்னா, 'இடுவார் பிச்சை கொடுவார் கெடுப்பார்' என்கிற மாதுரி ஆகக்கூடாதுன்னு கொடுத்தேன்.''

''ஒண்ணும் படிக்காதவனுக்குக் கொடுக்கலாமா?''

''இந்த ஸ்கூல்ல, எட்டு படித்தவனுக்கு மட்டும் என்ன தெரியும்? தங்கப்பாண்டிக்கு முழுக்கள்ளா என்னன்னா தெரியல சரி...விடு கழுதய. சரி...கொடுதேனா, கொடுத்தேன் அப்புறம் விசாரிச்சுப் பார்த்தால் தங்கப்பாண்டி அவன்கிட்ட நூறு ரூபாய் வாங்கியிருக்கான். எனக்கு பைசா தரல. அப்படிப் பாக்காதடே. சரி...போவட்டும். ஒரு நாள்...'ஒரு நாளைக்காவது மத்தியானச் சாப்பாடு போடாண்டாமா'ன்னு கேட்டேன் அவ்வளவுதான்... தங்கப்பாண்டி யாரையோ விட்டு நான் பொய் சர்டிபிக்கட் கொடுத்ததாய் ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதச் சொல்லி என்கிட்ட விளக்கம் கேட்டான். கதையை எப்படித் திருப்பிட்டான் பாரு? சஸ்பெண்ட் பண்ணுவேன்னான் அவன் காலு கையில விழுந்து ஒரு மன்னிப்பு லட்டர் எழுதிக் கொடுத்தேன். அஞ்சு வருஷத்துக்கு முன்ன எழுதிக் கொடுத்தத இன்னும் அப்படியே வச்சிருக்கான். இவ்வளவுக்கும் தென்காசில பிரிண்டான

'டி.ஸி' பாரத்தை தந்ததே அவன்தான். நேற்றுகூட, ஒரு 'கீறல்' பயலுக்கு, ஆறு படிச்சதா கொடுத்தான். ஆனால் ரேட்ட கூட்டியிருப்பான். விலைவாசி கூடிட்டுப் பாரு. எல்லாம் தலைவிதி. என்னை மாதுரி சொத்து பத்தோ, சொந்த பந்தமோ இல்லாதவன் கதை ஆப்பசைத்த குரங்கு மாதிரித்தான். செய்தாலும் குற்றம், செய்யாட்டாலும் குற்றம்.''

சண்முகம் அமைதியாகப் பதிலளித்தான். ''நான் சொன்ன பெடரேஷன் ஒமக்கு சொத்து மாதிரி; சொந்த பந்தம் மாதிரி.''

''சரியான ஆளுப்பா நீ. பேச்சில மடக்கிப் போட்டே. இருந்தாலும்...''

சரஸ்வதி, பொறுமை இழந்தாள். ''சண்முகம் ஸார், என்கிட்ட ஒரு பாரம் தாங்க. நான் ஒங்களோட சேரத் தயார். ஸாரி...பெடரேஷன்ல சேரத் தயார். நம்ம சீனிவாசன் ஸாருக்கு பையங்களுக்கு மட்டும் 'ஏ ரெண்டே, ஒன்கிட்ட ஒண்ணப் பிடுங்கப் போறேன்னு' சொல்லத் தெரியும். வேற வழியில்லாமல் செய்கிற தப்பு தப்பாகாதுன்னு அவரு புரியமாட்டாரு. இவ்வளவுக்கும் அவர் மகளை நேற்று புருஷன் வீட்டுக்கு அனுப்ப முடியல. கொடுங்க ஸார் பாரத்த.''

சண்முகம், சரஸ்வதியிடம் நீட்டிய பாரத்தை, சீனிவாசன் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டார். இதற்குள், காரைக் கட்டிடத்தில் இருந்து வந்த ஆசிரியை கனகம், ''நான் மானேஜர் ரூமுக்கு தற்செயலாப் போனேன். ஆறு பேர், ஆறு மாதத்துக்கு முன்ன போட்ட ஜி.பி எப். லோன் அப்ளிகேஷன் எல்லாம், அவரோட ரேக்குல கிழிஞ்சி போய்க் கிடக்கு! அவங்க என்னடான்னா லோன் இன்னைக்கு வரும், நாளைக்கு வருமுன்னு,

எதிர்பார்த்துக்கிட்டு இருக்காங்க...இந்த லட்சணத்துல நான் வேற லோன் போடப் போனேன்'' என்றாள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பதறினார்கள்.

சண்முகம், சிரித்துக் கொண்டான். அவன் சிரித்ததால், தன்னையறியாமலே தானும் சிரித்த சரஸ்வதி ''ஏன் ஸார், அவங்க சொல்றது ஒங்களுக்கு சிரிப்பா இருக்கா?'' என்றாள் சண்முகம் மேலும் சிரித்துக்கொண்டே விளக்கினான்: ''நம்ம அடிப்படைச் சம்பளத்துல ஆறு சதவிகிதத்தை மானேஜ்மெண்ட் பிடிச்சு, போஸ்ட் ஆபிஸ்ல போடணும். இதற்கான 'பாஸ் புக்' சட்டப்படி நம்மகிட்ட இருக்கணும். இங்க நடக்கது என்ன? ரெண்டு வருஷமா நம்ம மானேஜர் நம்ம சம்பளத்துல பிடிச்சி, பணத்த போஸ்ட் ஆபீஸ்ல போடல. அதனால விணணப் பங்கள அனுப்பல.''

''இந்த அநியாயத்த கேக்கவே முடியாதா?''

''ஏன் முடியாது? அதுக்கு, ஆரம்பந்தான் நாம சங்கத்துல சேருறது. அதோட நாம படுற கஷ்டத்த ஊர்க்காரங்ககிட்ட சொல்லணும். பொதுமக்களை ஈடுபடுத்தாத எந்தப் போராட்டமும் ஜெயிக்காது.''

''ஊருக்காரங்களா? சரியான தின்னிமாடங்கப்பா!''

'அப்படிச் சொல்லாதீங்க ஸார். ஜவகர்லால் நேரு, இந்தியாவைப்பற்றி சொன்னது ஞாபகம் இருக்கா? இந்தியா யானை. அது படுத்துக் கிடந்தால் பரமசாது. எழுந்துட்டா எதிரே எதுவும் நிற்க முடியாதுன்னார். இது ஏழைகளுக்குப் பொருந்தும். அவங்கள நாம் எழுப்பி விட்டுட்டோமுன்னால், அப்புறம் நம்மாலகூட உட்கார வைக்க முடியாது.''

சரஸ்வதி, சண்முகத்தை ஒயிலாகப் பார்த்துக் கொண்டு ''நீங்க சொன்னதும் சரிதான் சார். நேற்று மாரியோடு சேரிக்குப் போனேன். அந்த ஜனங்களுக்கும்

நாம் அவர்கள நடத்துற விதம் பிடிக்கல ஸார். ஒதுக்கி வச்சிருக்கதுக்கு அவங்களும் உள்ளூர கோபப்பட்டுக்கிட்டு இருக்காங்க. ஊர்ல 'மொதலாளின்னு' சொல்ற பெரிய மனுஷங்கள சேரில, கெட்ட கெட்ட வார்த்தையில திட்டுறாங்க. நான் இவ்வளவு நாளும், நாம ஒதுக்கி, ஊர்க் கோடியில வைத்திருக்கதை அவங்க தப்பா நினைக்கல்லன்னு நினைச்சிருந்தேன். செல்லாக் கோபம் பொறுமை என்கிறது மாதிரி, சொத்து பத்து இல்லாம, மேல் ஜாதி நிலத்தை நம்பியிருக்கதுனால, அவங்க கட்டாந்தரை மாதிரி பார்க்கதுக்கு தோணுது. ஆனால் உள்ள பூகம்பம் இருக்கு இப்போ நம்ம சேரிகூட மாறிகிட்டு வருது வேணு முன்னா பாரு...ஸாரி, பாருங்க, சாயங்காலமா சேரிக்குப் போய் மாரியம்மாள் மானேஜர் பறமுண்டன்னு சொன்னத டமாரம் போடப் போறேன். மாரி அவங்ககிட்ட சொல்லலியா?''

''சொல்லல...இதுவரைக்கும் அங்கே எட்டிப் பார்க்காமல் இருந்துட்டு...அப்புறம் சொல்றது தப்புன்னு நினைச்சாள்.''

''அதுவும் சரிதான்... பாரத்த வாங்குறீங்களா இல்லியா?''

பெரும்பாலான ஆசிரியர்கள், பாரங்களை வாங்கிய போது, காரைக் கட்டிடத்தில் இருந்து திடீரென்று தோன்றிய தலைமை ஆசிரியர் தங்கச்சாமி, ''இப்டி மொட்டக் கூட்டம் போட்டா எப்டி? பிரேயர் மணி அடியுங்க'' என்றார்.

சண்முகம், திருப்பிக் கொடுத்தான். ''இது மொட்டக் கூட்டம் இல்ல ஸார், முதல் கூட்டம். எங்கள அதட்டு றீங்களே, தங்கப்பாண்டி என்னதான் மானேஜர் என்றா லும், காலையில் ஒன்பதரை மணியில் இருந்து சாயங்காலம் 4-20 வரைக்கும் ஆசிரியர். ஒங்களோட சபார்டினேட்.

எப்பவாவது அவரை வகுப்புக்குப் போகச் சொல்லி இருக்கீங்களா? கந்தசாமிக் கிழவரோட மெட்ராஸ் போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். தேதி போடாத 'ஒரு நாள் விடுப்பு' லட்டர எழுதி, ஒங்கட்ட கொடுத்துட்டுப் போயிருப்பாரு. ஒங்களால ஆக்ஷன் எடுக்க முடியுமா? சரி. வந்து நீங்களும் இந்த பாரத்துல கையெழுத்துப் போடுங்க.''

தங்கச்சாமி, சண்முகத்தை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டே, காரைக் கட்டிடத்திற்குள் ஓடிவிட்டார். நடப்பதையும், பேசப்படுவதையும், 'இடுக்கில்' நின்று ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த இந்திரா, அந்தப் பக்கமாக வந்தபோது, ஆசிரியை கனகம், ''நீயும் சங்கத்துல உறுப்பினராச் சேரும்மா'' என்றாள்.

''எதுக்கும் 'அவரு'கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிறேன்'' என்றாள் இந்திரா.

''ஒன் புருஷன்கிட்டயா'' என்று தெரியாதது மாதிரி கனகம் கேட்டதும், இந்திரா தெரிந்தவள் மாதிரி, காரைக் கட்டிடத்திற்குள் ஓடிவிட்டாள். சம வயதில் உள்ள சண்முகத்தைப் பார்க்கும்போது, கொஞ்சம் காம்ப்ளெக்ஸாகும் வேலாயுதம், இப்போது அவன் தலைமையை ஏற்றுக் கொண்டதுபோல் பாரத்தை வாங்கிக் கொண்டான்.

பள்ளிப் பிரச்னைகள், தமிழ்த் தாயையும் சற்று காக்க வைத்துவிட்டன. பிரேயர் மணி சற்று தாமதமாக அடிக்கப்பட்டது உண்மைதான்.

'இண்டர்வெல்' சமயத்தில், மானேஜர் மனைவி ராசம்மா, அங்கே வந்தாள். மானேஜர் ஊரில் இல்லாத போது, ராஜ்ய பரிபாலனம் செய்வதற்கு, அவள் வருவதுண்டு. அதோடு, இந்திராவிடம் ''நான் எப்பவோ என்

புருஷன தண்ணி தெளிச்சி விட்டது உண்மைதான் ஒனக்கும், அவருக்கும் ஆயிரம் இருக்கதும் உண்மைதான் ஆனாலும் நான்தாண்டி பட்டத்தரசி'' என்று ஒரு வருடத்திற்கு முன்பு, அவளைப் பள்ளிக்கூடத்திலேயே பலர்முன்னிலையில் சொன்னவள், இப்போது சொன்னதை சொல்லாமல் சொல்லவும், தங்கப்பாண்டி இல்லாத சமயத்தில் அடிக்கடி வருவாள்.

அவளைப் பார்த்ததும், மாராப்புச் சேலைகளை சீராக்கிக் கொண்டு வகுப்புகளைப் பார்த்து நகரும் எழுத்தறிவிப்போர், இப்போது கண் எடுக்காமல் நிற்பதில், அவளுக்கு ஆங்காரம் அதிகமாகியது. மாரி விவகாரம் அவர்களை மாற்றிவிட்டது. சண்முகம் பேசியது. அவர்கள் கோபத்தை சராசரிக்கு மேலே கொண்டு போய்விட்டது. ராசம்மா கத்தினாள். ''பிள்ளிய கத்துதுல்ல! போய்ப் பாடம் நடத்துனா என்ன?'' என்றாள்.

எல்லோரும், அவள் அருகே இல்லாதது மாதிரி தங்கள் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆங்காரம் ஆத்திரமாக, ராசம்மா ''நெல்லு காயப் போடணும். அந்த வகுப்ப காலி பண்ணிக் கொடுங்க. வெளில மழை வரப்போகுது'' என்றாள் உள்ளே தோன்றிய இடியை அறியாதவளாய்.

சண்முகம் சிரித்துக்கொண்டே பதிலளித்தான். ''இது நெல்லுக்கான இடமில்ல, கல்விக்கான இடம்.''

ராசம்மா, அதிர்ந்து போனாள். ''தெருவில் பார்க்கும் போதெல்லாம், 'அத்தை' என்ற வார்த்தைக்கு அடுத்த வார்த்த சொல்லாத இந்தப் பையன் என்ன பேச்சு பேசிட்டான்! இந்த சரஸ்வதிகூட குறுஞ்சிரிப்பா சிரிக்கா பாரேன். அவள் சிரிக்கணுமுன்னு இவன் சொல்லியிருக்கான். இவன் இன்னும் சொல்லணுமுன்னு அவள்

சிரிக்காள். வந்தட்டிப்பய மவளுக்குச் சிரிப்பப் பாரு. இரப்பாளி பய மவளுக்கு வந்த வாழ்வப் பாரு. முள்ள முள்ளால எடுத்துக் காட்டுறேன் பாருடி!'

ராசம்மா, கோபத்தை அடக்கிக் கொண்டு குத்தலாகக் கேட்டாள். ''ஏய் சரசு, நேற்று ஆள் அனுப்பியும் ஏண்டி தண்ணி எடுக்க வரல? தொட்டி காலியாக் கிடக்கு. இன்னைக்கு சீக்கிரமா வந்துடு. கொஞ்சம் பாத்திரத்தை யும் தேய்க்க வேண்டியதிருக்கு! என்ன சொல்லுதது காதுல விழுதா? பழையத மறந்துடாதடி. பத்தாவது வயசில இருந்தே என் வீட்டில தண்ணி எடுத்தத மறந்துடாதடி.''

சரஸ்வதி, சண்முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவன் 'யாமிருக்கப் பயமேன்' என்பது மாதிரி சிரித்தான். அவ்வளவுதான், எங்கிருந்துதான் அப்படிக் குரல் வந்ததோ, சரியாகக் காது கேளாத தலைமை ஆசிரியரே வெளியே வரும்படிக் கத்தினாள். ''நான் பத்து வயசில தண்ணி எடுத்ததையும் மறக்கல. அப்படி எடுத்தத கேவல மாயும் நினைக்கல. ஒங்கள ஒரு சமயம் கேவலமான நிலையில கையுங் களவுமாகப் பார்த்ததையும் மறக்கல. போறியளா, இன்னும் விவரமா சொல்லணுமா?''

ராசம்மாவுக்கு முகம் வெளுத்தது. நாக்கு உள் நோக்கிப் போனது. நானே அந்த லிங்கராஜாவ மறந் துட்டேன். இந்த 'பாவி மொட்ட' அத மறக்கலே பாரேன்.

ராசம்மா, சிறிதுநேரம் பெருவிரலால் தலையில் வட்டம் போடுவதுபோல் சுற்றினாள். நடந்ததை நம்ப முடியவில்லை. நாகப்பாம்பாக வந்தவள் பெட்டிப் பாம்பாக போய்க்கொண்டிருந்தாள். அவள் போவதை, 'இடுக்கில்' நின்று பார்த்த இந்திராவுக்கு 'இதமாக'

இருந்தது. குலுங்காமல் நடப்பவள், இப்போது குலுங்கிக் குலுங்கி, சண்முகத்திடம் வந்தாள். ''ஸார், நானும் பெடரேஷன்ல சேருறேன். ஒரு பாரம் கொடுங்க ஸார். என்ன ஸார் அப்படிப் பார்க்கறீங்க?''

''ஒண்ணுமில்ல! இந்த அக்காளோட நிலைமையை நினைச்சுப் பார்க்கேன். அழுவுறதா, சிரிக்குறதான்னு தெரியல.''

இந்திராவின் குரல் தழுதழுத்தது. சண்முகத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். சொல்லும்போதே விம்மல் வந்தது ''நீ அக்கான்னு சொன்னதால, சொல்லுதேன் தம்பி. என்னோட நிலைமை அப்படி. நான் அதனாலதான்... அதனாலதான் அப்போ... மட்டும் ஒன்னைமாதிரி ஒரு தம்பி இருந்திருந்தால்...''

இந்திராவை எதுவும் பேச வேண்டாம் என்று கையால் சைகை செய்துவிட்டு சண்முகம் விழி பிதுங்க அவளைப் பார்த்தான். 'பாவம் செய்தவள் அல்ல இவள். பாவமாக்கப்பட்டவள். பத்து வருடங்களுக்கு முன்னால், இந்த ராசம்மா, இப்போது சரஸ்வதியை எப்படிக் கேட்டாளோ, அப்படிக் கேட்டிருக்கலாம். இவள் அவளைப் பழிவாங்க நினைத்திருந்தால் அது இயற்கை. ராசம்மாவை எந்த வழியிலும் வெல்ல முடியாமல், கடைசியில் 'இந்த' வழியில் வெல்லப் பார்த்திருக்கலாம். ஒரு தப்பை நியாயமாக்க, பல தப்புகள் செய்திருக்கலாம். மனித மனமே விசித்திரமானது... ரோஷம் அதிகமாகும் போது, அது தன்னைத்தானே தின்று கொள்கிறது. இயல்பிலேயே ரோஷக்காரியான இந்த அக்காள், ராசம்மாவிடம் தன் ரோஷத்தைக் காட்ட, தங்கப்பாண்டியிடம் ரோஷத்தை இழந்ததுபோல, இவளைச் சொல்லிக் குற்றமில்லை. ஏழ்மையும், இயலாமையும், சோதனையும், இன்னும் சொல்லப்போனால் தன்மானமும் ஒருசேர வந்தால், கண்ணகிகூட கற்பிழந்திருப்பாள்.'

சிந்தனையிலிருந்து மீண்ட சண்முகம், இந்திராவிடம் அவளை மீட்டவன்போல், 'பாரத்தை' நீட்டினான். இந்திரா, அதை வாங்கிக்கொண்டு, வேகவேகமாக நடந்து மானேஜர் அறைக்கு முன்னால் ஏதேச்சையாக நின்றுகொண்டு, கண்களைத் துடைத்துக்கொண்டே 'பாரம்' தீர்ந்தவள்போல், அந்தப் பாரத்தைப் பார்த்தாள்.

# 6

கணவனுக்குத் தெரிந்தும், அவனுடைய அனுமதியோடும் சோரம் போகிறவள். நான்குபேர் முன்னிலையில், கணவனிடம் மிகப் பெளவியமாக நடந்துகொள்வாள் என்பார்கள். இதுபோல் சகல சங்கதிகளையும் தெரிந்து வைத்திருக்கும் பள்ளிக்கூட டெப்டி இன்ஸ்பெக்டரின் வருகைக்காக, ஒவ்வொரு வகுப்பும் கிட்டத்தட்ட விழாக் கோலம் பூண்டிருந்தது. இந்தத் தடவை, ஆசிரியர்கள் யாரும் அதிகமாக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. என்றாலும், ஒரு நிறுவனத்தைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று நினைத்தோ என்னவோ, சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தத்தம் வகுப்புகளில், கரும்பலகையை சுத்தமாகத் துடைத்துவிட்டு, மாணவரின் எண்ணிக்கை, வருகை, வகுப்பு, செக்ஷன் ஆகிய விவரங்களை, கலர் சாக்பீஸ்களால் எழுதிவைத்திருந்தார்கள். பிள்ளைகள் கூட, அன்று தலையில் எண்ணெய் வைத்து, அழுக்கு அதிகமாக இல்லாத ஆடைகளோடு இருந்தார்கள். சுண்ணாம்பை, ஐந்தாண்டு காலமாகப் பார்த்தறியாத அழுக்கடைந்த சுவர்களில் 'சுத்தம் சோறு போடும்' 'கல்வி கண்ணாகும்' 'ஆசானே நடமாடும் தெய்வம்' என்பன போன்ற வாக்கியங்கள் எப்படியோ கண்ணில் படும்படி

எழுதப்பட்டிருந்தன. கடைசி வாக்கியத்தை தன் வகுப்புச் சுவரில் எழுதிய தங்கப்பாண்டியின் ஆசிரிய—மச்சான் கோவிந்தன், காகிதப் பூக்களை ஒரு சில பகுதிகளில் குறுக்கும் நெடுக்குமாகக் கட்டியிருந்தார். பல வகுப்புகளில் பல 'புது முகங்கள்' வேதப் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்திருக்கிறார்கள் இல்லாத மாடக்கண்ணுக்கு, ஜோஸப். ஓடிப்போன உதிரமாடனுக்கு, டேவிட்; பூமாரிக்கு, ரோஸ்மேரி. இப்படிப் பல 'பெயர் மாறாட்டங்கள்.' டெப்டி இன்ஸ்பெக்டர் வேதப் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது, இங்கே உள்ள மாடக்கண்ணு வகையறாக்கள், அங்கே விரட்டப்பட்டு 'தாஸாகவும்' 'ஜெயசீலியாகவும்' மாறுவார்கள். இல்லாத செக்ஷன்களை உருவாக்குவதில், இரண்டு பள்ளிகளும் 'கூட்டணி' வைத்துக்கொண்டன. இதில் இளம் பிள்ளைகள் 'திருட்டணியாக' பயன்படுத்தப்படுவது வழக்கம். சென்னையில் சாராயத்திற்கு சின்னப் பையன்கள் பயன்படுத்தப்படுவது போல! ஒருவார காலமாக சென்னை, மதுரை என்று எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, தங்கப்பாண்டியும் அன்றுதான் ஊருக்குத் திரும்பி வந்தார். மனிதர் எப்போதுமே ஒரே கட்சி... அதாவது ஆளுங்கட்சி. ஜனாதிபதி ஆட்சி நடந்ததால், எப்படி ஆடையணிவது என்று தெரியாமல் குழம்பி, இறுதியில், கதர்வேட்டி, கதர்ச் சட்டையை அணிந்துகொண்டு தோளில் கறுப்பு—சிவப்புத் துண்டையும் போட்டு 'டூர்' கிளம்பியவர். வீட்டுக்கு வந்து மனைவி மூலமும், மச்சான் மூலமும் நடந்த விஷயங்களைக் கேட்டுவிட்டு, நேராக பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டார். பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். எம்.பி.பி.எஸ் சீட்டுக்கு இப்பவே ஆள் 'பிடிக்கப்' போனதாக ஒரு பேச்சு. பள்ளிக்கூடத்தில் ஏதோ ஒரு சிக்கல் இருப்பதாகவும், அதைத் தீர்ப்பதற்காக கந்தசாமிக் கிழவருடன், அவருடைய 'கொழுந்தியா மகனைப்' பார்க்கப் போனதாகவும் இன்னொரு பேச்சு. எதிரும் புதிருமாக உள்ள இரண்டு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்— 'அறிமுக

விழாக்களில்' கலந்துகொள்ளப் போனதாக வேறொரு பேச்சு. இரண்டு பையன்களுக்கு வேலைக்கு சிபாரிசு செய்வதற்காக ஊரான் பணத்தில் போனதாகப் பேச்சு. இதில் ஏதாவது ஒன்றிற்காகவோ அல்லது எல்லாவற்றிற்கு மாகவோ, அவர் போயிருக்கலாம்.

ஆசாமி, நடந்த விஷயங்களைக் கேள்விப்பட்டதில், லேசாகக் குழம்பியிருந்தாலும், கலங்கியவர் மாதிரி தெரிய வில்லை சம்பளம் கிடைக்காததால், ஆசிரியர்கள் வயிற்று வலியில் ஏதோ பேசியிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு, தலைக்கு ஐம்பது ரூபாய் கமிஷனை எடுத்துக் கொண்டு, மீதிப் பணத்தை, தையல் ஆசிரியப் பையன் மூலமாக அந்தந்த ஆசிரியர்கள் வீட்டிலேயே பட்டுவாடா செய்துவிட்டார். சண்முகத்திற்கு மட்டும் சம்பளம் இல்லை. 'ஆன்டூடியில்' பயிற்சிக்குப் போனவன்; இனி மேல்தான் 'பேபில்' எழுத வேண்டும். சம்பளம் கொடுத்து விட்டதால் ஆசிரியர்கள் சரிபாயிருப்பார்கள் என்று அவர் நினைத்தபோது, சண்முகம் சொன்னபடி சங்கத்தில் சேர்ந்ததால்தான் தங்கபபாண்டி சரியாகி இருக்கான் என்று ஆசிரியர்கள் நினைத்துக்கொண்டார்கள்.

என்றாலும், எவரை மன்னித்தாலும், சரஸ்வதியை மன்னிக்க அவர் தயாராக இல்லை. அவளுக்கு, குறி போட்டு விட்டவர்போல், கண்களை மூடிக்கொண்டு, தலைகளை ஆட்டிக்கொண்டார். எல்லாவற்றிற்கும் காரணமான சண்முகம்மீது அவருக்கு வருத்தம் ஏற்பட்டதே தவிர, இன்னும் கோபம் வரவில்லை. உள்ளூரில் ஓரளவு வசதியான பையனான அவனுக்கு, எஸ் எஸ்.எல். சியில் தள்ளோ தள்ளென்று தள்ளியும், தேற முடியாமல் போன தன் ஒரே மகள் அகிலாவை, கட்டி வைத்துவிட வேண்டும் என்பது அவர் திட்டம், அதனால்தான், போன வருஷம் அவனை பள்ளியில் நியமித்தபோது, வழக்கமாக வாங்கும் 'ஐயாயிரத்தை' அவர் வாங்கவில்லை. பெண்

ஆசிரியைகளை நியமித்தால் அவர்கள் கல்யாணத்தோடு புருஷன் வீட்டுக்குப் போகும்போது, ஒரு 'வேகன்ஸி' வரும். அதில் மேற்கொண்டும், ஐயாயிரம் தேறும். ஒவ்வொரு ஆசிரியைக்கும் இப்படித் திருமணமாகும் போது, இவருக்கும் வரதட்சிணை மாதிரி பணம் வரும்.

ஆண்களை நியமித்தால், அவர்கள் கல்யாணம் செய்து விட்டு, தங்கள் மனைவிகளுக்கும் உத்தியோகம் கொடுக்கச் சொல்வார்கள். இதனால் பெண்களை மட்டுமே நியமிக்கும் தங்கப்பாண்டி, தன் ஒரே பெண்ணிற்காக, அந்த ஆணை நியமித்தார். ஐயாயிரம் ரூபாய் கமிஷனை வரதட்சணையில் பததாயிரமாகக் கழித்துக்கொள்ளலாம் என்று அவர் கழித்துக்கொண்டிருந்தபோது, சண்முகம் இப்படிச் செய்திருக்கிறான். இருந்தாலும் அவன்மீது வெறுப்பு ஏற்படவில்லை. ஒரு மாமனாருக்குரிய பொறுமையைக் கடைபிடித்தார். மகளைக் கட்டியவுடன், அவன் சரியாகிவிடுவான் என்பது அவர் எண்ணம். இப்படிப் பலர் ஆகியிருப்பதை அவர் பார்த்திருக்கிறார். 'ஆனால் இந்த சரஸ்வதி? இரு... இரு... ஒப்பனமாதிரி ஒன்னையும் மரம் வெட்டப் போக வைக்கேன்.'

இந்திரா, இன்னும் தன் அறைக்கு வராதது அவருக்கு ஏமாற்றமாக இருந்தது. ஒரு வாரமாச்சுது, ஏன் வரல? டெப்டி இன்ஸ்பெக்டர் வாரதுனால வகுப்புல இருப்பாள். இப்போ இருக்கட்டும்.

சுழல் நாற்காலியைப் போல், சிந்தனையையும் சுற்ற விட்ட தங்கப்பாண்டி, திடீரென்று எழுந்து வெளியே ஓடினார். டெப்டி-இன்ஸ்பெக்டர் வந்துகொணடிருந் தார். அவரை எதிர்கொண்டழைத்து, சுழல் நாற்காலியில் உட்கார வைத்தார். காபியையோ, கலரையோ அல்லது இரண்டையுமோ குடித்துவிட்டு, இருவரும் ஒவ்வொரு வகுப்பாகப் பார்வையிட்டார்கள். 'தொட்டால் சுருங்கி'

போல் முகஞ் சுருங்கி, உடம்பு ஒடுங்கியிருந்த மூக்குக் கண்ணாடி—டெப்டி இன்ஸ்பெக்டர், வகுப்பு வகுப்பாக, மாணவர் வருகைப் பதிவேட்டைப் பார்த்தார். ஒவ்வொரு வகுப்பிலும் ஏதேதோ கேள்விகள் கேட்டார். மாணவர்கள் அவற்றிற்குத் தயாராக வைத்திருந்த பதில் களைச் சொன்னபோது அவர் தங்கப்பாண்டியிடம் பேசிக் கொண்டிருந்தார்.

'இடுக்கில்' இப்போது தயாராகும் மதிய உணவைப் பார்வையிட்டுவிட்டு, மானேஜரும், டெபுடியும் ஆறாவது வகுப்பிற்குள் வந்தார்கள். சரஸ்வதி, நாற்காலியில் இருந்து எழுந்து கை கூப்பினாள். அதற்குப் பதிலாக ஒரு கையை லேசாகத் தூக்கிய டெபுடி இன்ஸ்பெக்டர், அவளை, 'கலாபூர்வமாக'ப் பார்த்தார். மற்ற வகுப்பு களில் நின்றுகொண்டே பார்வையிட்டவர், சரஸ்வதியின் நாற்காலியில் உட்கார்ந்தார். எழுந்திருக்கப் போகாதவர் போல் அழுத்தமாக உட்கார்ந்தார். அவளை 'இம்ப்ரஸ்' செய்ய வேண்டும்போல் அவருக்குத் தோன்றியது. அதட் டலாகக் கேட்டார்:

''சரி... மதிய உணவுப் பதிவேட்டையும், எல்லா வகுப்பு வருகைப் பதிவேடுகளையும், இருப்புப் பதிவேட் டையும் இங்கேயே கொண்டு வாங்க...செக் பண்ணணும்''

அந்தப் பக்கமாக வந்த தலைமை ஆசிரியர் தங்கச்சாமி, திடீரென்று மாயமாக மறைந்து, ஐந்து நிமிடத்தில் சம்பந்தப்பட்ட பதிவேடுகளோடு வந்தார். பிறகு அவற்றை டெப்டியிடம் குனிந்து கொடுத்தார். மதிய உணவுப் பதிவேட்டைப் பார்வையிட்ட டெப்டி, ''என்ன இது? ஒரு வாரமா மதிய உணவு போடலியா?'' என்றார் அதட்டலாக. பிறகு ''என்ன... ஹெச். எம். ஒங்களத்தான்... ஏன் ஒரு வாரமா சோறு போடல?'' என்றார் கோபமாக.

தங்கசாமி ''சரஸ்வதி நீதானம்மா கணக்கு எழுதற! சொல்லும்மா'' என்றார். அவள் தயக்கமில்லாமல் ''சோறு போடல, அதனால எழுதல'' என்றாள். தங்கப் பாண்டி, அனிச்சையாக அடிக்கத் தூக்கிய கையை, கீழே போட்டுக்கொண்டார்.

டெப்டி-இன்ஸ்பெக்டர், அங்கே இருந்தவர்களை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே, மதிய உணவுப் பதிவேட்டையும், மாணவர்களை வகுப்புக்களில் கணக் கெடுக்கும் வருகைப் பதிவேடுகளையும் ஒப்பிட்டார். சில குறிப்புகளை எடுத்துக்கொண்டார். பிறகு அதட்டினார்

''ஒங்க பேரு என்னம்மா?''

''சரஸ்வதி ஸார்.''

''நீங்கதான் மதிய உணவு பதிவேட்ல எழுதுனவங்க?''

''ஆமாம் ஸார்.''

''ஒங்களுக்கு கொஞ்சமாவது பொறுப்பு இருக் காம்மா? வருகைப் பதிவேட்ல, ஆப்ஸெண்டான மாணவன், மதிய உணவுப் பதிவேட்ல பிரசண்டாகி இருக்கான் இந்தா பாருங்க, மூணாவது வகுப்பு மூக்கன். இந்த தேதி வரல, சீதேவி வரல, இவங்க மதிய உணவு பதிவேடுப்படி சாப்பிட்டிருக்காங்க. வகுப்புக்கே வராத வங்க எப்படி சாப்பிட முடியும்? கவர்மென்ட், தலைக்கு பத்து பைசா வீதம் கொடுக்கிற பணத்துக்கு கணக்கு எழுதற லட்சணமா இது? மிஸ் அப்ரோபிரியட் பண்ணலாமா? இது கையாடுன குற்றம்... நம்பிக்கை மோசடி; நான் யாரையும் விடப்போறதில்லை. இந்த ரிக்கார்ட்ஸ் எல்லாம் என்கிட்டய இருக்கட்டும்.''

தங்கப்பாண்டி குழைந்தார். ''ஏன் டீச்சர், ஒங்க கிட்ட கொடுத்த காரியத்த பொறுப்போட செய் யாண்டாமா? சாப்பிடுறவங்கள சரியா எண்ணிப் பார்க் காண்டாமா? வழக்கமா சோறு போடுவதை சூபர்வைஸ் செய்யுற ஒங்களுக்கு ஏன் இது தெரியல?''

டெபுடி குதித்தார்: "இதெல்லாம் இர்ரெஸ்பான்ஸிபில். அட்டி ரூட். எஸ்.எஸ்.எல்.சி. படிச்சிட்டு, ரெண்டு வருஷம் டிரெயினிங் வேற அழுதுருக்கீங்க. இதுகூடத் தெரியல. ஹெச். எம்! இனிமேல் இவங்கள கணக்குப் பாடத்த எடுக்கச் சொல்லாதீங்க. மதிய உணவுத் திட்டத்தையும் வேற பொறுப்பான ஆசிரியர்கிட்ட கொடுங்க. அண்டர்ஸ்டாண்ட்?"

"அண்டாஸ்டாண்ட் ஸார்" என்றார் ஹெச். எம்.

சரஸ்வதிக்கு ஒன்றுமே ஓடவில்லை. 'சாப்பாடே போடவில்லை... எப்போதுமே போடவில்லை" என்று சொன்னால், 'அப்படின்னா எப்படி பொய்க் கணக்கு எழுதலாம்?... எழுதமாட்டேன்னு சொல்ல வேண்டியது தானேன்னு' அவர் திருப்பிக் கேட்கலாம்... கடைசியில் தங்கப்பாண்டியின் தப்புக்கு, டெப்டி எனக்குத் தண்டனை கொடுத்திருக்கிறார்.'

டெப்டி-இன்ஸ்பெக்டர், ஏழாவது வகுப்பிற்குள் வந்தார். சண்முகம், தன் பிள்ளைகளுக்கு அன்று மகாத்மா காந்தியைப் பற்றி 'கதை' சொல்வதாக வாக்களித்திருந்தான். நேற்று சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங் ஆகியோரைப்பற்றிச் சொன்னான். காந்தி கதையைச் சொல்ல முடியாமல் செய்த டெப்டி-இன்ஸ்பெக்டரை, பிள்ளைகள் கோட்ஸேவாக நினைத்தார்கள்.

"த... நீங்கதான்... ஸெட் தயாரிக்காக டிரெயினிங் போனது?" என்று சண்முகத்தைக் கேட்டார் டெப்டி

"ஆமாம் ஸார்."

"சரி, ஒரு கணக்குப் போட்டுக் காட்டுங்க."

சண்முகம் பிள்ளைகளைப் பார்த்து ஆனந்தமாக ஆரம்பித்தான்: "ஒருவருக்கு, ஒரு நாளைக்கு நூறு கிராம் கோதுமை மாவுன்னா, இருநூறு பேருக்கு எவ்வளவு வரும்?"

"இருபாதாயிரம் கிராம்."

"எத்தன கிலோ?"

"இருபது கிலோ."

"ஒரு நாளைக்கு பதுங்குறது இருபது கிலோன்னா, இருபது நாளைக்கு எவ்வளவு பதுங்கும்?"

"நானூறு கிலோ."

"ஒரு கிலோ கோதுமை மாவு இரண்டு ரூபாய் என்றால், நானூறு கிலோ எவ்வளவு தேறும்?"

சிறிது மவுனம். பிறகு பதில்கள் "எண்ணூறு ரூபாய்."

"ஒருவனுக்கு நாலு கிராம் எண்ணைன்னா, இரு நூறு பேருக்கு?"

"எண்ணூறு கிராம்."

"இருபது நாளைக்கு?"

"பதினாறாயிரம் கிராம்."

"எத்தன கிலோ?"

"பதினாறு கிலோ."

"ஒரு கிலோ எண்ணைக்கு!"

சண்முகத்தைப் பார்த்துத் திமிறிய தங்கப்பாண்டியை, டெப்டி-இன்ஸ்பெக்டர் 'த டு த் த ா ட் கொண்டு, "போதும்... நிறுத்துங்க... ஐ... ஸே... ஸ்டாப் திஸ் ரப்பீஸ்..." என்று கத்தினார்.

சண்முகம் அமைதியாகச் சொன்னான்: "இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கு ஸார். ஒருவர்கிட்ட ஐம்பது கிராம் கமிஷன்னா பதினைந்து பேர்கிட்ட எவ்வளவு தேறுமுன்னு கேட்கணும்?"

"கணங்கள் போட்டு கணக்குச் சொல்லிக் கொடுக் காமல், தத்துப் பித்துன்னு உளறுனால் என்னய்யா அர்த்தம்?"

''மதிய உணவு போடலன்னு தெரிந்தும், ஒரு ஆசிரியையை மேலதிகாரி அதட்டுறார்னால், இருப்புப் பதிவேட்ல எவ்வளவு கோதுமை மாவு இருக்குன்னு அவருக்குக் கேட்கத் தோணலன்னா, ஸ்டாக்கைப் பார்க்கணுமுன்னு அவருக்குத் தோணலன்னா, அந்த மேலதிகாரியும் ஒரு ஊழல் பேர்வழின்னு அர்த்தம். இந்தப் பிள்ளைகளைப் பார்த்து எத்தன நாளு மத்தியான உணவச் சாப்பிட்டிங்கன்னு கேளுமய்யா! இதோ... இங்க இருக்கிறதுல கால்வாசிப் பேர் 'வடக்கூர்' பள்ளிக்கூட மாணவ—மாணவிங்க. அவங்கள எழுந்திருக்கச் சொல்லட்டுமா? ஒரு வாரத்துக்கு முன்னால், இந்த ஆசிரியர் கோவிந்தன், கோதுமை மாவையும், எண்ணெய் டின்னையும் வண்டியில் ஏற்றிக்கிட்டுப் போய், தென்காசில வித்தாரு. ஆதாரத்தோட நிரூபிக்கிறேன். ஒங்கால ஆக்ஷன் எடுக்க முடியுமா? ஏதோ நாடகம் போடுறீங்க. அதுக்கு நாங்க தானா பாத்திரங்களா ஆகணும்? வந்துட்டார் பெரிசா, எல்லாக் கஷ்டத்தையும் நீக்கப் போறவர் மாதிரி.

''பெரிய அதிகாரியையா அவமானப்படுத்துற? இரு... இரு'' என்று சொல்லிக்கொண்டு, தங்கப்பாண்டி, டெப்டியைக் கைத்தாங்கலாக அணைத்துக்கொண்டே வெளியே போனார். மானேஜர் அறைக்குப் போகாமலும், 'வேதப்' பள்ளிக்கூடத்திற்குப் போகாமலும் பஸ் நிலையத்தைப் பார்த்துப் போனார்கள்.

சீனிவாசன், ஓரளவு வேர்த்துப் போயிருந்த சண்முகத்திற்கு, தன் வேட்டி மடிப்பை வைத்து வீசிக்கொண்டே ''எல்லாத்தையும் போட்டு ஒடச்சது சரிதான். ஆனால்... வேதப் பள்ளிக்கூட பையங்க வந்திருப்பதை சொல்லியிருக்கப்படாது. செக்ஷன்களை குளோஸ் பண்ணிட்டா, நம்மள்ல நாலுபேரு குளோஸ் ஆயிடுவாங்க'' என்றார்.

சண்முகம் அவரை, தங்கப்பாண்டியைப் பார்ப்பது மாதிரி பார்த்துப் பேசினான்: ''நாம் வெறும் சம்பளத்துக்

காகப் போராடப்படாது. ஒரு லட்சியத்துக்காகப் போராடணும். நீதியை நிலைநாட்டுவதற்காகத்தான் சம்பளத்தைப்பற்றிப் பேசணுமே தவிர, சம்பளத்திற்காக நீதியைப் பற்றிப் பேசக்கூடாது. இன்றைய உரிமைப் போராட்டங்களை பொதுமக்கள் அலட்சியப்படுத்துவதற்கு இந்த 'குழப்படி'தான் காரணம். இந்தப் பள்ளிக்கூடத்துல நடக்கிற அநீதியை, சமுதாய அநீதிகளோடு இணைத்து எல்லாவற்றையும் கொளுத்தப் பார்க்கணும். அதுதான் உன்னதமான குறிக்கோள். அந்தக் குறிக்கோளை நோக்கிப் போவதற்கு முன்னால், நம்முடைய பலவீனங்களையும் நாம் உதறணும், தூக்கி எறியணும். பல பள்ளிக்கூடத்துல ஒன்று முதல் ஐந்தாவது வகுப்பு வரைக்கும் இரண்டு ஆசிரியர்கள் இருக்காங்க பல 'ஓராசிரியர்' பள்ளிக்கூடங்கள் இருக்கு. இந்த நிலைமையிலே, இல்லாத செக்ஷன்களை போட்டுக்கிட்டு, அவற்றில் நம்மை ஆசிரியர்களாகக் காட்டிக்கிட்டால், நமக்கு மனுஷனாய் இருக்கவே யோக்கியதை கிடையாது. அப்புறம் மனுஷங்களை உருவாக்கிற பிள்ளைகளுக்கு, ஆசிரியராய் இருக்க நமக்கு என்ன யோக்கியதை இருக்கு?''

எல்லோரும் தத்தம் வகுப்புகளுக்குப் போய்விட்டார்கள். சரஸ்வதி தன் வகுப்பிலிருந்து அவள் வகுப்புக்குப் புறப்பட்டாள். 'நன்றி சொல்லணும்... மனதத் திறந்து இன்னொன்றையும் சொல்லிடணும்... இதுக்கு மேல பொறுக்க முடியாது...'

நடந்து வந்தவள், முன் நெற்றி சுருங்க, கண்கள் கோவைப் பழங்களாக, மேஜையில் ஊன்றிய முழங்கைகளில், முகத்தை வைத்துக்கொண்டு, எதையோ தொலை நோக்காகப் பார்த்த அவனைக் கலைக்கப் பயந்தாள். அந்த மோனத்தில் தொற்றிக்கொண்டவள் போல், அதற்குப் பயந்தவள்போல், பக்தி செலுத்துபவள்போல், அவள் திரும்பிவிட்டாள்.

# 7

அடுத்த நாள், ஞாயிற்றுக்கிழமை. தங்கப்பாண்டி 'தோல்பையைத்' தூக்கிக்கொண்டு தென்காசிக்கோ, திருநெல்வேலிக்கோ போய்விட்டார். சிலரை, வீடுகளில் போய் பார்த்தால்தான், அவர்களை செளகரியப்படுத்தி தானும் செளகரியமாக முடியும் என்பதை அனுபவத்தால் அறிந்திருந்த அவர், புதிய அனுபவத்தின் பொருளறிய மாட்டாதவராய் பையில் 'பொருளோடு' போய் விட்டார். கணவன் சொல்லாமலே நடந்த விஷயங்களைக் கேள்விப்பட்ட ராசம்மா, பஞ்சாயத்துக் கிணற்றுப் பக்க மாகப் போகும்போது ''எச்சிக்கல நாயுவளுக்கும், இரப்பாளி பய மக்களுக்கும் வாழ்வு வந்திருக்கத பாரு. வேலையில சேருறதுக்கு கை கால பிடிக்கது அப்புறம் அடுத்துக் கெடுக்கது. வாய்க்கரிசி இல்லாத முண்டைவளும், கவாலியா சுத்திக்கிட்டிருந்த பயலுவளும் வாத்தியாரா வந்தா, ஊரு உருப்பட்டாலதான்'' என்று ஒவ்வொரு பேச்சுக்கும் முற்றுப்புள்ளி போலவோ அல்லது 'கமா' போலவோ 'தூ' என்று சொல்லிக்கொண்டே துப்பிக் கொண்டு, அவள் பேசியபோது, கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்த சண்முகத்தின் தாய்மாமா பெண்டாட்டி, அவளை மேற்கொண்டும் பேச விட வில்லை. போகவும் விடவில்லை. ''சர்க்கார் கொடுக்கிற கோதும மாவ தின்ன கொளுப்புலயாடி பேசுற? ஊர்ச் சோத்த தின்ன பன்னியே! தைரியம் இருந்தா நேருக்கு நேரா பேசேண்டி! ஏண்டி...ஜாடையில பேசுற'' என்று சொல்லிவிட்டு, 'தோண்டிப் பட்டை' கயிற்றை அவள் கிணற்றில் இருந்து வெளியே இழுத்தபோது, அது எமனுடைய 'பாசக்கயிறு' மாதிரி ராசம்மாவுக்கு பட்டது.

வாய்க்கரிசி இல்லாத முண்டன்னா, அது தன் மகளைத் தான் என்பதை எளிதாகப் புரிந்துகொண்ட சரஸ்வதியின் அம்மாக்காரி ''இனிமேல், வாய்க்கு அரிசி இல்லாமல் செத்தாலும் சாவோமே தவிர, ஒன் ஊத்த வாய இனி மேலும் பேசவிட மாட்டோம். என்னதான் நினைச்சு கிட்ட?'' என்று கத்த, இப்போது எல்லோரும் கத்தினார்கள். அந்தப் பக்கமாக வந்த சில ஆண்கள் தத்தம் மனைவி களை அடக்காமல், ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

நேற்று தன் வகுப்புப் பிள்ளைகளிடமும் எட்டாவது வகுப்புப் பிள்ளைகளிடமும் ''ஒங்களுக்குக் கொடுக்க வேண்டிய கோதுமை ரவை, தென்காசில விற்பனை யாவுது. சட்டப்படி தினமும் ஒங்களுக்குச் சாப்பாடு போடணும். எவனாவது எவளாவது ஒங்க வீட்ல இதச் சொல்லியிருக்கீங்களா?...மகாத்மா காந்தி இந்தமாதிரி அநியாயத்தை பொறுத்துக்கிட்டு இருந்திருப்பாரா? பகத்சிங் இப்படிப் பார்த்துகிட்டு இருந்திருப்பானா?'' என்று சணமுகம் சொல்லியிருந்தான். அதை தந்திரமாக அவன் சொல்லவில்லை. தானாக வந்தது. ஒரு வேளை எஸ்.ஐ.இ.டி கல்லூரி நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளில் படித்ததன் தாக்கமாக இருக்கும். அவன் அப்படிச் சொன்னதை 'வீட்டுக் கணக்காக' எடுத்துக்கொண்ட பிள்ளைகளில் ஒரு சிலர் தங்களை காந்தியாகவும், பலர் பகத்சிங்காகவும் நினைத்துக்கொண்டு, தத்தம் வீடுகளில் நடந்ததைச் சொல்லி, நடப்பதற்கு அஸ்திவாரம போட்டார்கள்.

அன்று—திங்கட்கிழமை வந்தது. ஒலித்த பள்ளிக்கூட மணி, தங்கப்பாண்டிக்கும், ஆசிரியர்களுக்கும் வேறு வேறு மாதிரியாகக் கேட்டது. ரயில் தண்டவாளம் மாதிரி, ஓரடி நீளத்தில் விட்டத்தில் கட்டிய கயிற்றில் தொங்கிக் கொண் டிருந்த இரும்புத்துண்டை, சிலேட்டுக் குச்சி மாதிரி இருந்த ஒரு இரும்பால் எக்கி எக்கித் தாக்கி மணியடித்துக்

கொண்டிருந்த ஒரு பயல்கூட, நெடு நேரமாக அடித்தான். கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட பெண்ணுக்கு தன் வீடே வித்தியாசமாகத் தெரிவதுபோல, ஆண்டுக்கணக்காக பழக்கப்பட்ட அந்தப் பள்ளிக்கூடம் எல்லோருக்கும் வித்தியாசமாகத் தெரிந்ததால், ஒருவரை ஒருவர் வித்தியாசமாகப் பார்த்துக் கொண்டார்கள். தங்கப் பாண்டி, வகுப்புகளுக்குப் போகும் ஆசிரியர்களைப் புதிதாகப் பார்ப்பதுபோல பார்த்தார்.

எப்போதும், கலக்குபவர்போல் காணப்படும் அவர், அன்று கலங்கியவர்போல் காணப்பட்டார். ஆரம்பத்தில், சண்முகம், டெப்டி இன்ஸ்பெக்டரிடம் நடந்துகொண்ட விதத்தை அவர் சாதகமாகவே எடுத்துக் கொண்டார். அவன்மீது 'ஆக்ஷன்' எடுத்தபிறகு, அந்த ஆக்ஷனுக்கு டெப்டி-இன்ஸ்பெக்டர் மூலம். மாவட்ட கல்வி அதிகாரி யின் 'கன்கரன்ஸ்' கிடைத்துவிடும் என்றுதான் நினைத் தார். ஆனால் டெப்டி வேறுவிதமாக 'ரியாக்ஷ'னைக் காட்டிவிட்டார். ''எனக்கு குழி வெட்டுறாங்க ஸார்'' என்று, பஸ் நிலையத்தில் தங்கப்பாண்டி சொன்னபோது, ''ஒங்களுக்கு வெட்டுற குழில நான் விழ முடியுமா?'' என்று டெப்டி சொல்லிவிட்டார்.

'சரி, இந்த டெப்டி இல்லாட்டா...அவன் அப்பன்...' என்றுதான் தங்கப்பாண்டி நினைத்தார். அதற்காகத்தான் மாவட்ட தலைநகருக்குப் போயிருந்தார். ஆனால் அங்கே கிடைத்த தகவல் அவரைக் கலக்கிவிட்டது. மாரியம்மாள், தங்கப்பாண்டி தன்னை ஜாதியைச் சொல்லித் திட்டிய துடன், சம்பளத்தையும் மோசடி செய்ததாக எழுதிய மனுவின் நகலை, ஆசிரியர் சங்கம், கவர்னருக்கு அனுப்பி வைத்திருக்கிறதாம். கவர்னரின் உத்தரவுப்படி மாவட்ட கல்வி அதிகாரி, நேரடி விசாரணைக்கு வரப்போகிறா ராம். சொந்தத் தம்பியான ராஜலிங்கமே, சொந்தமில்லா தவன்போல நடந்து கொள்கிறானாம். ஒருநாள்

மாவட்ட கல்வி அலுவலகத்திற்கே வந்து, ''அந்த ஸ்கூல இழுத்து மூடுனால்தான், பிள்ளிங்க உருப்பட முடியும்'' என்று கல்வி அதிகாரியான தன் நண்பரிடம் சொல்லி விட்டானாம். 'இதுவரை நல்லது கெட்டதுகளை' சரிக்கட்டிக் கொண்டிருந்த தம்பியுடைய அவர், ஆசிரியப் படைக்கு அஞ்சியது இல்லை. ஆனால இப்போது நிலைமை வேறு. 'அடே...ராஜலிங்கம்...ஒன்னை இடுப்பில எடுத்தவண்டா...நான்...'

'எடுத்தவண்டா' என்று நினைத்தபோது, தான் எடுத்துக்கொண்ட மானேஜ்மெண்டும், அவருக்கு நினைவுக்கு வந்தது. முப்பதாயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தவர், முதல்நாள் தம்பியிடம் பத்தாயிரத்தை கொடுத்த பிறகு, ஒரு மாதம் கழித்து ஐயாயிரத்தைக் கொடுத்தார். ''மீதி பதினையாயிரத்தை எப்பண்ணாச்சி தரப் போறீய?'' என்று தம்பி பாசத்தோடு கேட்டபோது. ''இனிமேல் ஒனக்கு எதுக்குத் தரணும்? பொதுச் சொத்து ஏலம் போனது முப்பதாயிரத்துக்கு. அதுல எனக்குப் பாதி... ஒனக்குப் பாதி... சரியாய் போயிட்டு'' என்று சொன்னது, பலத்த வாக்குவாதத்தை ஏற்படுத்தியது. கடைசியில் மேரிபுஷ்பம் ''நீங்க ஸ்கூல் நடத்துறத பாத்துடுறோம்... வீட்ட விட்டு வெளில போங்க... இல்லன்னா... கழுத்தப்பிடித்து...'' என்று சொல்லி விட்டாள்.

தங்கப்பாண்டி, சுழல் நாற்காலியோடு அங்குமிங்கு மாக ஆடிக்கொண்டார். ஆட்டிக்கொண்டார். 'ஊர்ல வேற, தோளுல கிடக்கிற துண்ட எடுத்து கையில போட்டுக்கிட்டு பேசுற பயலுவக்கூட 'தங்கப்பாண்டி, நீயும் கொஞ்சம் பாத்து நடக்கணும்; தினமும் போடாட் டாலும் ஒருநாள் விட்டாவது ஒருநாள் பிள்ளிங்களுக்கு சோறு போடாண்டாமா? அதுங்க ஒன் பிள்ளிய மாதுரி. சாப்புடாம...வயிறு காஞ்சி கிடக்கிற பிள்ளிய...பாத்து

நடப்பான்னு' காலையில உபதேசம் செய்யுறாங்க. முன்ஸீப் வேற கொஞ்ச நேரத்துக்கு முன்னால வீட்டுக்கு வந்து, "மொதலாளி, எங்க ஜாதிப் பொண்ண பறமுண்டன்னு தங்கப்பாண்டி சொல்லிட்டாராம். நீங்க 'கேட்டு' தாறியளா? நாங்களே கேட்கணுமான்னு சேரிக்காரங்க சொலலுதாங்கப்பா. விவேகியான நீ இப்டி நடந்துக்கிடலாமான்னு" கேட்கிறான். யாரு? வரிப்பணத்த ரசீதுல காட்டாம, வாயில காட்டுற இந்த முன்ஸீப். இந்த சண்முகம் பயல் ஊர்முழுக்க பிரச்சாரம் செய்திருக்கான்.

தலைமை ஆசிரியர், சமயம் தெரியாமல் உள்ளே வந்தார். தங்கப்பாண்டி சீறி விழுந்தார். "என்ன ஸார் நீங்க சரஸ்வதி ஒரு வாரம் கணக்கு எழுதாமல் விட்டிருக்காள். நீங்க செக் பண்ணாண்டாமா? நீங்க வந்த பிறவுதான் இந்தப் பள்ளிக்கூடம் உருப்படியில்லாமப் போயிட்டுது."

தங்கச்சாமிக்கு இன்றைக்குத்தான் கோபம் வந்தது. ஆகையால் அதிகமாக வந்தது. "சோறு போடாமல போட்டதா எழுதுனதே பெரிய காரியம். அவள்கிட்ட கேட்டுட்டு, எதையாவது வாங்கிக் கட்டிக்கச் சொல்றியளா?"

'தலைமை ஆசிரியர் மாதிரி நடந்துக்கமாட்டேங்கிறிய. முன்னால இருந்தவரு ஒவ்வொருவர் கண்ணுலயும் விரலை விட்டு ஆட்டுவாரு. ஒங்க கடமையைக்கூட மறந்துடுறிய. எந்த ஆசிரியராவது ஒங்கள மதிக்காங்களா?"

தங்கச்சாமி, தங்கப்பாண்டியின் கண்ணில் விரல் விடுவதுபோல் பேசினார். "நீங்க மதிச்சால்லா, அவங்க மதிக்கதுக்கு? ஹெட்மாஸ்டரா...ஒங்ககிட்ட மாரடிக்கத விட....நாலு எரும மாட்ட மேய்க்கலாம். எனக்கா கடமையைப் பற்றி சொல்றீங்க? அப்படிப் பார்த்தால், ஒங்களைக்

கூட நான் வகுப்புக்குப் போகச் சொல்லணும். ஏதோ என் தலவிதி. அப்போ தாலுகா ஆபீஸ்ல கிளார்க்கா சேர்ந்திருந்தால், இந்நேரம் டெப்டி கலெக்டரா ஆகியிருப்பேன். கொள்ளைக்காரன்கிட்ட மாட்டிக்கிட்டேன். எல்லாம் தலவிதி.''

தங்கப்பாண்டி, வெளியே வாசல் காப்போனாய் நின்ற தையல்-ஆசிரியன் பெருமாளை, இந்திராவை கூட்டிக் கொண்டுவர கூரைக் கட்டிடத்திற்கு அனுப்பினார். அரைமணி நேரம் கழித்து இந்திரா வந்தாள். எதிரே கிடக்கும் நாற்காலியிலும், சிலசமயம், அவர் உட்கார்ந்திருக்கும் சுழல் நாற்காலிச் சட்டத்திலும், அவர் சொல்லாமலே உட்காரும் இந்திரா, அவர் முன்னால் வந்து ''எதுக்கு ஸார் கூப்பிட்டீங்க?'' என்றாள்.

தங்கப்பாண்டி அசந்துவிட்டார். பிறகு, தன்னை சமாதானப் படுத்திக்கொண்டே ''நீ ஏன்...கவலப்படுற? இந்தப் பயலுவ எமமாத்திரம்?'' என்று சொன்னபோது, இந்திரா 'நீங்க மட்டும் எம்மாத்திரம்?' என்பது மாதிரி அவரைப் பார்த்தாள். அதை ஏக்கப் பார்வையாக நினைத்துக்கொண்டு, தங்கப்பாண்டி. அவள் தோளைத் தொடுவதற்காக எழுந்தபோது, இந்திரா வாசல் பக்கமாகப் போய் நின்றுகொண்டாள். பிறகு அமைதியாகப் பேசினாள். ''ஸார் இனிமேல் நான் மானத்தோட வாழணுமுன்னு நினைக்கேன். ஒருத்தருக்கு ஒரு தடவ மானம் போயிட்டாலும், அப்புறம் அவருக்கு மானமே இல்லன்னு ஆயிடாதுன்னு சண்முகம் தம்பி, தெய்வம் மாதிரி தெரிய வச்சிட்டான். பழகுன தோஷத்துல நீங்களும் திருந்தணுமுன்னு ஆசப்படுறேன். சரி... நான் வாரேன் ஸார்...''

இந்திரா போய்விட்டாள். தங்கப்பாண்டி, முண்டமாக விரும்பாதவர்போல், தலையைப் பிடித்துக் கொண்டார். வகுப்புக்களில் ''கூட்டு எண்களின் பெருக்குத் தொகை,

குறுக்கு எண்களின் பெருக்குத் தொகைக்குச் சமம்...'' என்று சரஸ்வதி சொல்வதும், ''ஏ... பத்தே... ஒன்னை பிடுங்காமல் விடமாட்டேன்'' என்று சீனிவாசன் வகுப்புப் பையன்கள் கத்துவதும், அவர் காதுகளைக் குத்தின. 'அம்பிகாபதி-அமராவதி காதல் தோற்கக் காரண மென்ன' என்று வேலாயுதம் சத்தம் போட்டுச் சொல்வதும் அவருக்கு உறைத்தது. இண்டர்வெல் மணி அடித்தது. கூரைக் கட்டிடத்தை எட்டிப் பார்த்தார் சரஸ்வதியும், சண்முகமும் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்திரா, அந்த ஜோடியையும், அவர்கள் பேச்சையும் ரசிப்பதுபோல், உதடு பிரிய, முகம் குழைய நிற்கிறாள்.

தங்கப்பாண்டி, நேற்று 'டவுனுக்கு'ப் போய்க் கொண்டுவந்திருந்த காகிதத்தை 'லதர் பேக்கில்' இருந்து எடுத்தார். இரு தடவை படித்துக்கொண்டார். பிறகு, தையல் ஆசிரியன் மூலம் சண்முகத்தைக் கூப்பிட்டனுப்பினார். சண்முகம் வந்தான். சாந்தமாகவே வந்தான்

''உட்காருங்க சண்முகம்.''

''பரவாயில்ல... சொல்லுங்க ஸார்.''

''ஒங்ககிட்ட இருக்குற எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிக்கட் பொய் சர்டிபிக்கட்டாம். டி.இ ஒ.வுக்கு எவனோ எழுதிப் போட்டிருக்கான். இதை விசாரிக்கும்படி டெப்டி-இன்ஸ்பெக்டர் எனக்கு அனுப்பி இருக்கார். ஒங்க எஸ்.எஸ். எல்.சி. சர்டிபிக்கட்டை கொண்டு வந்து காட்டுறீங்களா? தொந்தரவுக்கு மன்னிக்கணும்.''

அந்தப் பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கும், எல்லா ஆசிரியர்களுடைய சர்டிபிக்கேட்டுகளும் தங்கப்பாண்டியிடம் உள்ளன. வேலையில் சேரும்போதே, அவர்களின 'சர்டிபிக்கேட் பற்களை' பிடுங்கி வைத்திருப்பவர் அவர். வேலையில் சேரும்போது சராசரி இளைஞனுக்குரிய

அப்பாவித்தனத்தில் இருந்த சண்முகம், 'மாமா' செக் பண்ணுவதற்காக எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிக்கட்டையும் டி.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டையும் கொடுத்தான். பிறகு அவர் கொடுக்கவில்லை. ஒரு தடவை அவன் கேட்ட போது ''ஒங்ககிட்ட இருந்தான்ன, என்கிட்ட இருந்தான்ன? இன்கிரிமென்ட், அது இதுன்னு ஆயிரம் வரும். உடனேயே டெப்டி-இன்ஸ்பெக்டர்கிட்ட காட்டணும். அதுக்குத்தான் வச்சிருக்கேன். மாப்பிள்ளைக்கு நம்பிக்கை இல்ல போலுக்கு. ஏல... பெருமாளு... வீட்ல போயி'' என்று அவர் சொன்னபோது ''பரவாயில்ல மாமா...'' என்று சண்முகம் திருப்பிச் சொல்லிவிட்டான்.

தங்கப்பாண்டி இப்போது கிண்டலாகப் பேசினார்.

''என்ன சண்முகம் ஸார்... சர்டிபிக்கட்டை கொண்டு வாறீங்களா? நான் டெப்டி இன்ஸ்பெக்டருக்கு இன்னைக்கே இதை அனுப்பி வைக்கணும்.''

சண்முகம், இன்னும் அவரையே பார்த்தான். தங்கப் பாண்டி, மினுக்காகச் சிரித்து, தளுக்காகப் பேசினார். ''இப்போகூட ஒங்களுக்கு சான்ஸ் கொடுக்கேன் என் வம்புக்கு வரமாட்டேன்னு ஒரு வாக்கு கொடுத்திங்கன்னா போதும்''

சண்முகம், அவர்மீது கண்களை ஊடுருவ விட்டான். 'டவுனில்' ஆசிரியர் தலைவர் 'மொதல்ல ஒங்கள உதைக்கணும்யா' என்று சொன்ன வார்த்தை, நெஞ்சில் உதைத்தது. பிள்ளைகளுக்கு தனிப்பட்ட முறையில் சொன்ன லெனின், அவன் எதிரே நின்று சிரித்தார் மாணவர்களுக்கு அவன் சொல்லிக் கொடுத்த 'பகத்சிங் முன்னால் வந்து நின்றான். பல்லைக் கடித்துக்கொண்டு கைகளை அடக்கிக்கொண்டான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன்போல், ''நானும் அதைத்தான் சொல்றேன் இப்போகூட ஒங்களுக்கு சான்ஸ் கொடுக்கோம். நீங்க திருந்துறதாய் இருந்தால்...'' என்றான்.

''திருந்துறதுன்னா... நான் என்ன திருடனா?''

''ஆசிரியர்கள் சம்பளத்துல கமிஷன் பிடிக்கறதும், அப்பாய்மெண்டுக்கு ஐயாயிரம் ரூபாய் வாங்குறதும், சேமிப்பு நிதிப் பணத்தை இரண்டு வருஷமா போஸ்ட் ஆபீஸ்ல போடாமல் இருக்கதும், மாணவர்கள் வயித்துல அடிக்கிறதும் திருடன் செய்யுற காரியமில்ல...திருடன் மனுஷன்.''

தங்கப்பாண்டி விறைப்பாக உட்கார்ந்தார். ''சரி... ஒங்க எஸ் எஸ்.எல்.சி. சர்டிபிக்கேட்டை எடுத்துட்டு வாரீங்களா... நான் இன்னைக்கே இதை அனுப்பணும்.''

''யார்... யாரை அனுப்பப் போறாங்க என்கிறது முடிவாகிற காலம் நெருங்கிக்கிட்டு இருக்கு.''

தங்கப்பாண்டி எழுந்து நின்று ஆவேசமாகப் பேசினார். ''இந்தா பாரு... சண்முகம்... என் சர்வீஸும், ஒன் வயசும் ஒண்ணு. ஒன்னைமாதிரி எத்தனை பேர பாத்திருப்பேன். நீ எம்மாத்திரம்? பதினைஞ்சி வருஷத் துக்கு முன்னால, ஒன்னைமாதிரி ஒருவன் சட்டம் பேசி ஊர்ல ஆள் திரட்டினான். ஊாக்காரங்களும் அவன் பேச்சைக் கேட்டு போட்டிப் பள்ளிக்கூடம் ஆரம்பிச் சாங்க. நான் போலீஸை ஊருக்குக் கொண்டு வந்தேன். இருபது இருபத்தைஞ்சு பேர போலீஸ் மூலம் 'பைண்ட் ஓவர்ல' போட்டேன். வாராவாரம் போலீஸ் ஸ்டேஷன்ல போய் ரிப்போர்ட் பண்ணுறதுக்காக நடந்த நடையில, ஒவ்வொருவனும் கடைசியில் என் காலுல வந்து விழுந்தான். நீங்க என்ன செய்தாலும் சரின்னு காலுல விழுத்தாங்க. இது நீ சின்னப் பிள்ளையாய் இருக்கும் போது நடந்த சங்கதி. கேள்விப்பட்டிருப்பே இன் னொண்ணு தெரியுமா? எவன்... ஊர் ஜனங்கள தூண்டி விட்டானோ அவனே அப்புறம் பஞ்சாயத்துத் தலைவராகி, இப்போ 'மச்சான்... யூனியன் எலெக்ஷன்ல நிக்கப் போறேன். ஒங்க ஆதரவு வேணுமுன்னு' என் வீட்டுக்கு நடையாய் நடக்கான்.''

சண்முகம் நிதானமாகப் பதிலளித்தான். ''தனி மனிதன் நடையைவிட. சரித்திரத்தோட நடை தனிநடை. ஸார். அது எவரையும் சாராமல் தனக்குத்தானே நடை போடும். அப்படி நடைபோடுவதற்கான பாதையை அமைக்க, அந்த சரித்திரமே தக்க சமயத்தில் தக்க ஆட்களை தேர்ந்தெடுக்கும்; இதை மறந்துடாதீங்க.'

''சரி சண்முகம் ஸார்! ஒங்க சரித்திரத்த இந்த சின்னப் பள்ளிக்கூடம் தாங்காது. சர்டிபிக்கட்ட கொண்டு வாறீங்களா... ஏதோ இந்த சின்ன இடத்தில சரித்திரம் துவங்குறதாய் நினைப்பு இல்லாம சீக்கிரமாய் கொண்டு வாங்க. சரித்திரம், பொல்லாத சரித்திரம்.''

''ஒங்களமாதுரி ஆசாமிக்கு சரித்திரம் பொல்லாதது தான் ஸார். வீட்ல துவங்குற சரித்திரம் உலகத்துல படர்வதும், உலகத்துல துவங்குகிற சரித்திரம் வீட்டில முடியறதும் இயற்கை. இதுக்கு நீங்களோ, நானோ தப்ப முடியாது...''

''யாரு தப்ப முடியாதுங்கறது பாத்துடலாம். சரி... சர்டிபிக்கேட் கொண்டு வரப் போறீங்களா இல்லையா?''

''அந்த புகார் மனுவை என்கிட்ட கொடுங்க. சும்மா கொடுங்க. நான் பேப்பர கிழிக்கிற ஆளுல்ல. அதுலயே என் பதிலையும் எழுதிடுவேன்.''

தங்கப்பாண்டி, சந்தேகத்துடன்தான் புகார் மனுவை அவனிடம் நீட்டினார். அவன், அதை கிழிக்கப்போனால் தடுக்க வேண்டும் என்பதற்காக இரண்டு கைகளையும் படகோட்டிமாதிரி வைத்துக்கொண்டார். சண்முகம் அவருக்கு எதிரே கால்மேல் கால்போட்டு உட்கார்ந்து கொண்டு, மடமடவென்று எழுதினான். என்ன எழுத வேண்டும் என்று ஏற்கெனவே மனதில் வரித்திருந்ததால், வரிக்குவரி யோசிக்காமலே எழுதினான். எழுதிவிட்டு

கையெழுத்தையும், தேதியையும் போட்டுவிட்டு, தங்கப் பாண்டியை நோக்கி, பெருவிரலை வில்லாகவும், ஆள் காட்டி விரலை அம்பாகவும் வைத்து, மனுவை அலட்சிய மாக சுண்டிவிட்டுவிட்டு, வெளியேறிவிட்டான் கூரைக் கட்டிடம் அதிரும்படி ''ஹிட்லர் கேட்டால்லா, இந்த ஆளு கேக்கதுக்கு'' என்ற வார்த்தை, தங்கப்பாண்டிக்கு நன்றாகக் கேட்டது. அவன் எழுதியதைப் பார்த்தார். கொஞ்சம் அசந்துவிட்டார்.

டெப்டி-இன்ஸ்பெக்டரின் ஆதரவோடு இந்த புகார் மனு வந்திருப்பதாக தான் சந்தேகிப்பதாகவும், தன் சர்டி பிக்கேட் மானேஜரிடமே இருப்பதாகவும், இப்போது நம்பிக்கை மோசடி செய்யும் மானேஜர்மீது போலீஸில் புகார் செய்யுவும், சட்டப்படி இதர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாவட்ட கல்வி அதிகாரி தனக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும், இதற்கிடையில் சர்டிபிக்கட்டைப்பற்றி அறிய வேண்டுமானால், தான் படித்த உயர்நிலைப்பள்ளியில் போய் விசாரித்துக் கொள்ளும்படி 'பணிவன்புடன்' கேட்டுக் கொள்வ தாகவும் அவன் எழுதியிருந்தான்.

தங்கப்பாண்டி, தன்னம்பிக்கையோடு சிரித்துக்கொண் டார். 'பள்ளிப்படிப்பு புள்ளிக்கு உதவாது' என்கிறதை நிரூபிச்சுட்டான். அனுபவத்துக்கு, அறிவு ஈடாகாது என்பதைக் காட்டிட்டான். டெபுடி-இன்ஸ்பெக்டரையும் சேர்த்து இழுத்திருப்பதால், மேலதிகாரிகள் டிபார்ட் மெண்ட் விவகாரமாய் எடுத்துக்கொள்வார்கள். அவர்கள் நியாயத்தை விட்டுக் கொடுத்தாலும் கொடுப்பார்களே தவிர, டிபார்ட்மெண்டை விட்டுக் கொடுக்கமாட்டார் கள். மாட்டிக்கிட்டான். இசகு பிசகா மாட்டிக் கிட்டான்.

தங்கப்பாண்டி தையல்—ஆசிரியனைக் கூப்பிட்டு, இடையிலே கார்பன் வைத்த இரண்டு பேப்பர் 'செட்டை' ரெடி பண்ணச் சொன்னார். அந்தப் பையன்

சாவகாசமாக பேப்பரைத் தேடியபோது, ''அதோ பேப்பர் இருக்கது தெரியல எருமமாடு. ஒன்னைப்போய் தையல் வாத்தியனாய் போட்டேன் பாரு. சீக்கிரமா ரெடி பண்ணு'' என்றார். அவன் 'ரெடி' செய்ததும் ''கதவ மூடிட்டு வெளிலயே நில்லு. எவனையும் உள்ளேவிடாதே'' என்றார். 'பல தையல்களை' ஏற்பாடு செய்யும் அந்த ஆசிரியன், ஒன்றும் புரியாமல் கதவை மூடினான்.

கூரைக் கட்டிடத்தில் இருந்த ஆசிரியர்களும், காரைக் கட்டிட ஆசிரியர்களும், சண்முகத்தை மொய்த்துக் கொண்டார்கள். அவர்களிடம், அவன் நடந்ததை விளக்கி னான்

சீனிவாசன், ''இவனை விடப்படாதுடா. சண்டாளப் பய! காலா காலத்துல சம்பளத்த தராததுனால என் மகளை அனுப்ப முடியாமப் போய் கடைசில, அவளைக் கட்டுன 'காவாலிப்'பயல் 'இனிமேல் ஒப்பன் வீட்லயே இருந்துக்க. ஒருவேளை ஊர்ல, வேற இன்ட்ரஸ்ட் ஏதா வது இருக்கு'முன்னு பொடி வச்சி எழுதியிருக்கான். என் மகள் நல்லாச் சாப்பிட்டு நாலு நாளு ஆவுது. இந்தப் பயல பொடிப்பொடியாய் ஆக்காமல் விடப்படாது'' என்றார். சரஸ்வதி, சண்முகத்தை பயத்தோடும், பரிதாபத்தோடும் பார்த்தாள். என்ன நடக்குமோ...ஏது நடக்குமோ...

திடீரென்று ஆறாவது வகுப்பில் சரஸ்வதி அழும் சத்தங் கேட்டது. பிள்ளைகளின் கூச்சலையும் மீறி அவள் கூப்பாடு போட்டாள்.

'அய்யோ, நேத்துதான் எங்கப்பாவை 'இவ்வளவு நாளும் மரம் வெட்டுனது போதும், இனிமேல் நான் சம்பளம் வாங்குறத நினைக்காமல் வேலைக்குப் போனீங் கன்னா, நான் வேலைக்குப் போகமாட்டே'ன்னு சொன் னேன். சொன்னபடியே ஆயிட்டுதே...ஆயிட்டுதே...''

என்று அரற்றினாள். அவள் கையில் இருந்த காகிதத்தில் கண்ணீர்த் துளிகள் தெறித்துச் சிதறின. சண்முகம் அந்தக் காகிதத்தை வாங்கிப் படித்தான்.

'ஆசிரியை சரஸ்வதிக்கு, தங்களின் பதவி விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. குடும்ப சூழ்நிலையின் காரணமாக, பதவி விலகுவதாக தாங்கள் குறிப்பிட்ட காரணம், நன்கு ஆய்வு செய்யப்பட்டு, தங்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டாகிவிட்டது. ஆகையால் நாளையிலிருந்து தாங்கள் வேலைக்கு வரவேண்டிய தில்லை. உங்களின் சேவைக்கு, பள்ளி நிர்வாகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது' என்று உத்தரவு கூறியது.

எல்லா ஆசிரியர்களும் பிரமித்து நின்றார்கள். ஒவ்வொருவரும், தங்களுக்கும் சிறிது நேரத்தில் இதே மாதிரியான 'ஓலை' வரலாம் என்று தங்கப்பாண்டியின் அறையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். சரஸ்வதி அழுகையை நிறுத்தவில்லை. சண்முகம் அசந்துவிட்டான். அவள் அழுகைக்கு தானும் ஒரு காரணம் என்பதுபோல் உதட்டைக் கடித்துக்கொண்டான். ஒருநிமிட நேரந்தான். சரஸ்வதி, ஆசிரியை கனகத்தின் தோளில் சாய்ந்துகொண்டாள். மயங்கி விழுந்துவிடுவாளோ என்று சொல்லும் அளவிற்கு, அவள் கண்கள் நிலைகுத்தி நிற்பவைபோல வெறித்து நின்றன. கை கால்கள், பக்கவாத நோயாளி மாதிரி ஆடின படித்த படிப்பு, பெற்ற பயிற்சி, வாங்கிய சம்பளம், அனைத்தும் இனிமேல் நீர்மேல் எழுத்தாய் போனதுபோல், அவள் கன்னங்களில் நீர் பெருக்கெடுத்து, மோவாயில் வந்து சங்கமமாயின. இனிமேல் எப்போது வேலை கிடைக்கும் என்று நினைப்பவள்போல் மோவாயை நிமிர்த்தியவள், எப்பவுமே கிடைக்காது என்பதுபோல் தலையை, அங்குமிங்குமாக ஆட்டினாள். சண்முகத்தைப் பார்த்து, ''அந்தக் காகிதத்தைக் கொடுங்க. நான் ஆசிரியையா வேலை பார்க்கத் தகுதி

யுள்ளவள் என்கிறதுக்கு அதுதான் எனக்கு சர்டிபிக்கட். அந்தப் பாவி என் சர்டிபிக்கட்ட தரமாட்டான்'' என்று கத்திக்கொண்டே, அவள் சண்முகத்திடமிருந்த காகிதத்தைப் பற்றப்போனாள்.

இதற்குள், சரஸ்வதியின் சித்தி மகன்—எட்டாவது வகுப்பு படிக்கும் ஒரு பையன் பெரியம்மா மகள் அழுவதற்கான காரணத்தை யூகித்துக்கொண்டு, வெளியே ஓடினான். ஆசிரியர் சீனிவாசனும், கிட்டத்தட்ட ஒப்பாரி வைத்தார். ''வேலையில் சேரும்போதே ராஜினாமா லட்டர் வாங்கி வச்சுக்கிட்டான். நான்கூட மூணு தடவ ராஜினாமா லட்டர் கொடுத்திருக்கேன். மொதல்ல எழுதுன பேப்பர் கசங்கி 'பழுக்கும்'போது ரெண்டாவதா வாங்கிக்குவான். இங்க இருக்கிற எல்லார் கிட்டயுமே ராஜினாமா லட்டர்கள வாங்கி வச்சிருக்கான். யார் யாருக்கெல்லாம் எப்பப்போ ஓல வரப்போவுதோ?''

அழுவதற்கு ஆயத்தம் செய்கிறவள்போல் நின்ற ஆசிரியை கனகம் அரற்றினாள். ''நர்சிங் ஹோமுல சேர்ந்து வயித்துக் கட்டிய ஆபரேஷன் பண்ணணுமுன்னு நினைச்சேன். இந்த எழவெடுப்பான் அதுக்குள்ள வயிததுல அடிப்பான் போலுக்கே.''

சண்முகம், சரஸ்வதியின் கரங்கள் இரண்டையும் அனிச்சையாகப் பற்றிக்கொண்டு ''ஏன் அழுகுற? அவன் போயிடுன்னா போவதற்கு நாம் என்ன கிள்ளுக் கீரையா? அழாதம்மா! நாங்க இந்தப் பள்ளிக்கூடத்துல இருக்கது வரைக்கும் நீயும் இருக்கப்போறே!'' என்று சொன்ன போது, சரஸ்வதி ஓரளவு நம்பிக்கைப் பட்டவள்போல கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, இழந்ததாக நினைத்தது இழப்பாக ஆகாது என்று நினைத்தவளாய் அழவும் முடியாமல், அனைவரையும் பார்த்துவிட்டு, பிறகு சண்முகத்தை சோகமாகப் புன்னகைத்துக் கொண்டே பார்த்த போது—

ஏட்டளவில் தையல் ஆசிரியனாக வேலை பார்க்கும் பையன், இன்னொரு கடிதத்தைக் கொண்டு வந்து, சண்முகத்திடம் கொடுத்தான். சண்முகம், அவன் கொண்டு வந்த ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டு கடிதததை வாங்கிவிட்டு, கடித உறையில் இருந்து கடிதத்தைப் பிரித்து எல்லோருக்கும் கேட்கும்படி படித்தான்:

''நீங்கள், தக்க காரணத்திற்காகக் கேட்கப்பட்ட எஸ் எஸ்.எல்.சி. சர்டிபிக்கட்டை காட்ட மறுத்ததுடன், மேலதிகாரியையும் நிர்வாகியையும், சம்பந்தமில்லாமல், சம்பந்தப்படுத்தியிருப்பதால், உங்கள் சர்டிபிக்கட்டில் வில்லங்கம் இருப்பதால்தான் நீங்கள் அதைக் காட்டாமல் மழுபபுகிறீர்கள் என்று அனுமானிக்கப் படுகிறது. ஆகையால் முழு விசாரணை முடியும் வரை, உங்களைத் தாற்காலிக பதவி நீக்கம் செய்யப் பட்டிருக்கிறது. விசாரணை முடிவது வரைக்கும், இந்த ஊரிலேயே இருக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது''

எல்லோரும், அவனால் காக்கப்படுபவர்கள் போலவும், அவனைக் காக்கப் போகிறவர்கள் போலவும் பார்த்தார்கள்.

சண்முகம் சிரித்துக் கொண்டான். தலையை முன்னும் பின்னுமாக ஆட்டிக் கொண்டான். ''இனிமேல் நாம் பொறுத்தால், நமக்கு இந்த பிள்ளங்களுக்கு மகாத்மா காந்தியைப் பற்றியோ, பகத்சிங்கைப் பற்றியோ சொலலிக் கொடுக்க அருகதை கிடையாது'' என்றான்.

''வாங்க, அவன் கையக் கால ஒடிக்கலாம். நானே ஒடிக்கேன்'' என்றான் வேலாயுதம்.

''வாங்க பாத்துப்புடலாம்'' என்றார் சீனிவாசன்.

''நானும் வாரேன்'' என்றார் தலைமை ஆசிரியர்.

பதினாறு ஆசிரியர்களில் ஆசிரிய-மச்சான் கோவிந் தனைத்தவிர, தலைமை ஆசிரியர் உட்பட எல்லோரும், மானேஜர் அறையைப் பார்த்துப் போகப் போனார்கள். கோவிந்தன் ஏதோ பேசப் போனார். வேலாயுதம் அவர் சட்டையைப் பிடித்து உலுக்கியதில், அப்படியே உட்கார்ந்துவிட்டார். அப்போது, சரஸ்வதியின் அப்பா பொன்னையாவும், அவள் அம்மாவும், மானேஜர் அறைக்குள் நுழைந்தார்கள். அவர்கள் பேசி முடியட்டும் அல்லது முடிக்கட்டும் என்பதுபோல, ஆசிரியர்கள் புறப் பட்ட இடத்திலேயே நின்றார்கள். பொன்னையாவும் அவர் மனைவியும் மாறி மாறி மன்றாடுவது, ஆசிரியர் களுக்கு நன்றாகக் கேட்டது.

''தங்கப்பாண்டி, ஒன் தாத்தா காலத்துல இருந்தே ஒங்க வீட்ல நாயா உழைச்சவன் நான். ஒன்னை இடுப்புல எடுத்தவன். சின்னப் பய மவள், சின்னத்தனமா நடந்து கிட்டா. நீயே அவள கன்னத்துல ரெண்டு போட்டிருக் கலாம். ஆனால் இப்படிப் பண்ணலாமா ராஜா? நம்பி எழுதிக் கொடுத்த காகிதத்துல, நம்பிக்கை மோசடி பண்ணலாமா? அப்படி பண்ணுறதாய் இருந்தால், நான் எத்தன தடவ பண்ணியிருக்கலாம்? ஒருதடவ ஒன் வீட்டு பீரோவுல கத்தை கத்தையா ரூபா நோட்டு மின்னிச்சுது. ராத்திரி வேளை. ராசம்மா பீரோவ பூட்ட மறந்துட்டுப் போயிட்டா. நான், அவ வாரது வரைக்கும் நாய் மாதுரி காவலுக்கு இருந்தவன். ஒனக்கு பள்ளிக்கூடத்துக்கு எத்தன தடவ சோறு சுமந்துகிட்டு வந்திருப்பேன். என் சோற்றுல மண்ண அள்ளிப் போடலாமா மவராசா?''

தங்கப்பாண்டி அலட்சியமாகப் பேசினார். ''நீங்களும் கூட்டுக் கள்ளங்க. யாரக் கேட்டு மாரியம்மாளை கொண்டுவிடப் போனீயரு? என் வீட்டுக்கு தண்ணி எடுக்க வர முடியாத அளவுக்கு ஒம்ம மகள் பெரியவளா ஆயிட்டா என்ன? என் பெண்டாட்டிய எதிர்த்துப் பேசுற அளவுக்கு, நீங்க தயாராகிக்கிட்டீங்க. நான் சொல்லுற

மாப்பிள்ளையை உதறுற அளவுக்கு திமிறு வந்துட்டு என்ன? பேசாம போங்க. இது முடிஞ்சிபோன சமாச்சாரம்.''

''தங்கப்பாண்டி! அப்படில்லாம் பேசப்படாது. ஒன் காலுல வேணுமுன்னாலும்...''

ஆசிரியர்களோடு நின்ற சரஸ்வதியால், மேற் கொண்டு நடக்கப்போவதை கற்பனை செய்துகொண்டு அங்கேயே நிற்க முடியவில்லை. மானேஜர் அறையை நோக்கிப் போனாள். வாசலுக்கு வெளியே நின்று கொண்டே கத்தினாள். ''அப்பா...எவன் காலுலயும் விழாண்டாம். அவன் ஒம்ம காலுல விழப்போற காலம் வந்துட்டு. நீங்க வீட்டுக்குப் போங்க. மொதல்ல வெளிய வாங்க. வாங்கப்பா...வாம்மா...''

தங்கப்பாண்டி கொஞ்சம் வார்த்தையை விட்டுட் டார். ''பாத்தியா, அவன் இவன்னு பேசுறத? தேவடியா முண்டைக்கு வாயப் பாத்தியளா?''

'அவன்' என்று சொன்னதுக்காக, மகளை அடிக்கப் புறப்பட்ட பொன்னையாவுக்கு யாரை அடிக்கிறோம் என்று தெரியவில்லை. எத்தனையோ பனைமரங்களை ஒரே ஒரு கோடாரியால், தன்னந் தனியாகச் சாய்த்த அந்த மனிதர், தனக்கு எதுவும் தெரியாமலே, தங்கப் பாண்டியின் கழுத்தைப் பிடித்துத் தூக்கி, மேஜையில் போட்டார். குப்புறப் புரண்ட தங்கப்பாண்டி தலையை நிமிர்த்தியபோது, அதை முடியோடு சேர்த்துப் பிடித்து மேஜையில் மோதினார். தங்கப்பாண்டி ''அய்யோ... அய்யோ'' என்று கத்தினார். மனைவிக்காரி புருஷனைப் பிடித்து இழுத்தாள். தப்பை உணர்ந்தவர்போல், பொன்னையா தங்கப்பாண்டியை விட்டுவிட்டு, தன்னை நம்பாதவர்போல் சிறிது விலகி நின்றுகொண்டு ''யாரப் பாத்துல தேவடியா முண்டன்னே? ஒன் வீட்டு சங்கதிய நான் சொல்லட்டுமாடா? செத்தாலும் சொல்ல

மாட்டேன். ஒரு வீட்ல அந்யோன்யமாய் பழகிட்டு அந்த வீட்ல நடக்கிற விஷயங்கள வெளில சொல்லுத அயோக்யத்தனத்த எப்பவும் செய்யாதவன். என் மவளப் பாத்தா தேவடியா முண்டங்கற? இதவிட நீ... ஒன் அம்மாவச் சொலலியிருக்கலாம்...'' என்று இரைந்த போது, ஆசிரிய-ஆசிரியைகளும், அத்தனை பிள்ளைகளும் அங்கே வந்துவிட்டார்கள். சரஸ்வதி, அப்பாவைப் போய்ப் பிடித்துக்கொண்டாள்.

சண்முகம், சத்தம் போட்டுச் சொன்னது அந்த அமளியில் லேசாகத்தான் கேட்டது. ''பொன்னையா மாமா, நீங்களும், அத்தையும் மொதல்ல வெளியே போங்க உம் போங்க...''

பொன்னையாவும், அவர் மனைவியும் வெளியே போய், மைதானத்தில் நின்றுகொண்டார்கள். சண்முகம் தங்கப்பாண்டியைப் பார்த்து கர்ஜித்தான். ''தங்கப் பாண்டி ஸார், ஒங்க காலம் முடிஞ்சு எங்க காலம் துவங்கிட்டுது. எங்களோட சர்டிபிக்கட்டுங்களையும் கொடுத்துட்டு, எங்களுக்கு கொடுத்த லட்டரையும் வாபஸ் வாங்கிட்டு, இதர ஊழல் சமாசாரத்துக்கும் நீங்க பிராயசித்தம் செய்யும் முன்னால், ஒங்கள...சீ...ஒனக்கெதுக்கு மரியாதை? ஒன்னை...இந்த அறையை விட்டு வெளில விடப்போறதுல்ல அப்படிப் போவதாய் இருந்தால், எங்கள பிணமாக்கிட்டுத்தான் நீ போக முடியும்...''

எல்லா ஆசிரியர்களும், மானேஜர் அறையின் வாசலை மறைத்துக் கொணடார்கள். நிலைப்படியில் நினறு கொண்டு, குறுக்கும் நெடுக்குமாக வேயப்பட்ட வேலிக் கம்புகள் மாதிரி நின்றார்கள். அந்த மனித வேலி வாசல் முழுவதையும் அடைத்தது. ஒவ்வொருவர் அடிவயிற்றிலும் பற்றிக் கொண்டிருந்த நெருப்பு, நெஞ்சிலே தணலாகி, கண்ணிலே ஒளியாகி, 'ஒன்னை விடமாட்டோம்—விடமாட்டோம்' என்ற ஒலியாகி, தங்கப்பாண்டியைச்

சுட்டது. அவர் கண்களை மூடவைத்தது. காதுகளை நேராக வைத்தது. என்ன நடந்தது என்பதை முழுவதும் யூகிக்க முடியவில்லையானாலும், ஆசிரியர்கள் இப்படி நடக்கவேண்டுமானால், மானேஜர் 'எப்படியோ' நடந்திருப்பார் என்பதை உணர்ந்ததுபோல, பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்ட மாணவ—மாணவியர், வேலியில் படர்ந்த செடி கொடிகள் மாதிரி ஆசிரியர்களை நெருங்கி நின்று கொண்டார்கள். சிலர், தேர்தல் காலத்தில் பாதிப்புக்கு உட்பட்டவர்களாய், "மானேஜர் ஒழிக... ஆசிரியர்கள் வாழ்க..." என்றுகூட நம்பமுடியாதபடி முழக்கமிட்டார்கள். இன்னும் சில பிள்ளைகள், தத்தம் வீடுகளுக்கு ஓடினார்கள்—பெற்றோரிடம் நடந்ததைச் சொல்லி மானேஜரை 'கொல்லும்படி' சொல்ல வேண்டும் என்று நினைத்தவர்களாய். சிலர் தங்கப்பாண்டியை ஆஷ் துரையாகவும், சண்முகத்தை வாஞ்சிநாதனாகவும் கற்பனை செய்தனர். "ஏன்...ஸார்...சட்டுன்னு சுட மாட்டங்கார்..."

எவ்வளவு பெரியவனையும் முதலில் ஒரு 'போடு' போட்டுவிட்டால், அவன் 'அவுட்டு' என்பதற்கு விளக்கம் போல் ஏற்கெனவே பொன்னையா கொடுத்த அடியில், அதிர்ந்துபோன தங்கப்பாண்டி, சுழல்நாற்காலியில் அப்படியே உட்கார்ந்திருந்தார். அந்த நாற்காலி இப்போது ஆடவில்லை, அசையவில்லை. தனித்தனியாகக் கிடக்கும் ஆசிரியக் குச்சிகளை ஒவ்வொன்றாக எடுத்து ஒடித்து விடலாம் என்று நினைத்தவர், இப்போது அந்தக் குச்சிகள், ஒன்றோடு ஒன்றாகி, தோழமைப் பந்தமென்ற கயிற்றால் ஒடிக்க முடியாத விறகுக்கட்டாக மாறிவிட்டதைப் புரிந்துகொண்டவர் போல் பார்த்தார். தானே தனியொரு குச்சியாகப் போனவர்போல் தவித்தார். உயிரோடயே சமாதியானது போல், அந்த அறையை அங்குமிங்குமாகப் பார்த்தார். 'ஒருவேளை நமக்குள் பைத்தியம் பிடித்திருக்குமோ? அதனாலதான் கண்ணுக்கு இப்படித்

தெரியுதோ?'' என்று நினைப்பவர்போல் வழிமறித்து நின்ற 'வழிகாட்டிகளை' நம்பாதது போல் பார்த்தார். இருந்தாலும் அவருக்கு ஒரு நப்பாசை. பங்காளிகள் வரலாம். எவராவது போலீஸுக்குச் சொல்லலாம். அவரது எண்ணத்தை யூகித்தது போல், சண்முகம் மீண்டும் கர்ஜித்தான்: ''பழைய காலமில்ல ஸார்! ஒங்களுக்கு ஆதரவாய் யார் வந்தாலும் சரி, எங்களை வீழ்த்திட்டுத்தான் ஒங்கள மீட்கலாம். நீங்க எங்க கோரிக்கைக்கு இணங்குமுன்னால, ஒங்கள விடப்போற தில்ல. என்ன நடந்தாலும் சரி...எப்படி நடந்தாலும் சரி... ஒங்களுக்கு அதிகாரிங்கன்னா, எங்களுக்கு ஆசிரியர் கூட்டணி இருக்கு; ஊர் இருக்கு.''

புலியைச் சுற்றி வளைத்து வீழ்த்தும் காட்டு நாய் கூட்டம் மாதிரி, ஆசிரியர்கள் வழியடைத்து நின்றார்கள். தாங்கள் சொல்லிக் கொடுத்த வரலாற்றுப் பாடங்களுக் குத் தாங்களே பரீட்சை எழுதத் தீர்மானித்தவர்களாய்த் தோன்றினார்கள். அக்கிரமக்காரனுக்கு, முடிவும் அக் கிரம ரூபத்தில்தான் வரும் என்று ஹிட்லரையும், முசோலினியையும், உதாரணமாகக் காட்டி, மாணவர் களுக்கு பாடம் போதித்தவர்கள், உள்ளூர் பருத்தியின் மூலம் உலகச் சமாச்சாரங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற 'பேஸிக்' பயிற்சியை நினைத்தவர் களாய், அந்த ஆசிரியர்கள் இப்போது 'உள்ளூர்' தங்கப் பாண்டியைக் காட்டி, உலகநல விரோதிகளை அடை யாளம் காட்ட விரும்பியவர்கள்போல், அசையாது நின்றார்கள். இந்திரா மட்டும் சிறிது விலகி நின்றாள். தங்கப்பாண்டியை அடிக்கப் போன வேலாயுதத்தை சண்முகம் பிடித்துக் கொண்டான்.

ஊரிலிருந்து, ஆண்களும், பெண்களுமாகத் திரண்டு கொண்டிருந்தார்கள். சண்முகத்திற்காகச் சிலர். சரஸ்வதிக்காகச் சிலர். சாப்பாடு போடவில்லை என்று

சிலர். ராஜலிங்கத்தின் தூண்டுதலால் சிலர். ராசம்மாவின் திமிரால் சிலர். சேரியில் இருந்த சிலர். இப்படிச் சிலர் சிலராய் கூடியவர் பலப்பலராயினர். பலவகையான பேச்சு. பாக்கை வெட்டுவது போன்ற பேச்சு.

''அந்தப் பொண்ணு, அவன் வீட்ல வேலைக்காரி மாதிரி வேலை பார்த்தாள். அவளுக்கா சீட்டக் கிழிக்கது? யாரு, நம்ம சண்முகத்துக்கா ஓலை கொடுத்திருக்கான்? நாம அம்மங்குடை கணக்கை எப்படி ஒழுங்கா எழுது றோம். அதுமாதிரி இந்த தங்கப்பாண்டியும் ஒழுங்கா இருந்திருந்தா, இப்படி நடக்குமா? என்னமோ, அவனுக்கு வால் பிடிக்கியரு...தெனமும் பிள்ளியளுக்கு சாப்பாடு போடணும். இவன் போடுறானா? இவனுக்கு இன்னைக்கு நல்ல சாப்பாடு' போடணும். 'தர்ம அடி' கொடுக்கணும்வே.''

உள்ளே சிறை வைக்கப்பட்ட தங்கப்பாண்டியின் உடம்பு, வேர்வையால் குளிர்ந்து கொண்டிருந்தபோது, ஆசிரியர்களின் மேனி கொதித்துக் கொண்டிருந்தது. வெளியே இரைச்சல், பேரிரைச்சல்.

வீட்டில் இருந்து துள்ளிக் குதித்து வந்த ராசம்மாவை ''வாடி! சீக்கிரம் வா. ஒன் பனங்கா மூஞ்சிய கொத்திப் போட்டு அவிக்கோம்'' என்று பெண்களில் ஒருத்தி சவாலிட்டபோது, ராசம்மா பாதி வழியிலேயே நின்றாள்.

அநியாயக்காரன் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்காமல், அவன் ஒவ்வொரு செயலையும் ஏன் என்று கேட்டு, தாங்கள் யார் என்பதையும் கேட்டுக் கொண்டால், அதில் பிறக்கும் கேள்வித்தீ, ஆயிரம் வேள்வித் தீயைவிட பிரகாசமாக விளங்கும். மனதிலே கிளம்பும் கேள்விப்பொறி, ஐம்பொறிகளிலும் தாவி, அண்டை அயலாரையும் பற்றி, ஊழித்தீயாக மாறும் என்பது நிரூபணம் ஆகிக் கொண்டிருந்தது.

தங்கப்பாண்டி, தனக்கு முன்னால், ஆசிரிய உருவத்தில், ஒரு பெருந்தீ உருவாகி இருப்பதையும், அந்த தீய்க்கு ஊரே எண்ணெயாகி இருப்பதையும், அந்த தீயை ஊடுருவ முடியாது என்பதையும் புரிந்தவர்போல், நாற்காலியில் உட்கார்ந்தபடி மேஜையில், குப்புறத் தலைவைத்து விழிபிதுங்கப் பார்த்தார். அவர் விரித்துப் போட்டிருந்த கைகள், ஆசிரியர்களின் கால்களை நோக்கி, மேஜை விளிம்பில் தொங்கின.

பள்ளிக்கூடத்திற்கு சற்று தொலைவில் உள்ள ஒரு 'தனி' வீட்டில் வசிக்கும் சலவைத் தொழிலாளி ஒருவர், நான்கைந்து முரட்டுத் துணிகளைத் தேய்ப்பதற்காக நிலக்கரியில், கொஞ்சம் 'சீம எண்ணெய்' ஊற்றி நெருப்பிட்டார். நிலக்கரி, கண்ணீர் விடுவதுபோல் புகைந்த போது, அவரும் தன் கண்களைக் கசக்கிக் கொண்டே ஊதினார். கண்ணீராய் கசிந்த நிலக்கரி, இப்போது நெருப்புத் துண்டங்களாய் மாறிவிட்டதால் அவை அணையாது என்பதை அறிந்துகொண்டு அவற்றை ஒட்டு மொத்தமாக எடுத்து, இஸ்திரிப் பெட்டியில் போட்டு விட்டு, வெளியே கேட்ட சத்தத்தின் சாரத்தை அறிய மைதானத்திற்கு விரைந்தார்.

கங்கை